ஜூன் 2026

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

313

விலை
ரூபா 100/=



27 ஆவது
அகவையில்
ஞானம் !

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.


313

ஒளி : 27 சுடர் : 01

ஸ்தாபகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- ஷெல்லிதாசன் 05
- குப்பிழான் மூ. ஆ. மோகன் 11
- கலாதினி பா.முருகானந்தன் 14
- ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி (லண்டன்) 19
- பிரியதர்ஷனி 20
- சுமேகா முருகேசு 33
- சரண்யா புண்ணியராஜா 36
- Dr. ஜலீலா முஸம்மில் 40
- ஜர்ஸி ஜானேவிக்ஸ்/ பராக்கிரம கொடிதுவக்கு/ மாவனல்லை எம்.எம்.மன்ஸூர் 44
- தம்பிலுவில் ஜெகா 44


### கட்டுரைகள்


- பேராசிரியர் சபா ஜெயராசா 06
- தமிழ்மணி அகளங்கன் 29


### சிறுகதைகள்


- நெய்தலூரான் யெமில் 02
- கமலாபரன் பரராஜசேகரம் 09
- ஆறுமுகம் சந்திரசேகரன் 15
- ஏ.ஏ.ஹெச்.கே.கோரி 25
- கலாநிதி ஜெகநாதன் தற்பரன் 32
- எம்.ஸி.யே.பரித் 34
- ந.பார்த்திபன் 39
- மகேந்திரன் கோவர்த்தனா 41


### விமர்சனம்


- ரஞ்ஜனி சுப்ரமணியம் 12
- கே.எஸ். சுதாகர் (அவுஸ்.) 21


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 37


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

# ஆசிரியர் பக்கம்...



## அனைவருக்கும் அன்பு வணக்கம் !

### தமிழ்ச் சிறுகதைகளின் தேக்கநிலை

ஞானம் தனது 27ஆவது அகவையில் தடம் பதிக்கும் இத்தருணத்தில் எம்பயணத்தில் தோள் கொடுத்து நிற்கும் அனைத்து அன்புள்ளங்களுக்கும் எமது அன்பான நன்றி.

கடந்த இரு வருடங்களில் பல புதியவர்களுக்கு ஞானம் களம் அமைத்துக்கொடுத்தமை எமக்கு மனநிறைவினைத் தருகின்றது. 290–313 இதழ்களில் மொத்தமாக 147 சிறுகதைகள் வெளிவந்தமை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். இக்கதைகள் அனைத்தும் சிறுகதைகளுக்கு இருக்கவேண்டிய கூறுகளை உள்ளடக்கி, இலக்கியத்தரம் கொண்டு, உச்சம் தொட்டவை எனக் கூறிவிடமுடியாத நிலையில் உள்ளோம். இந்தப்பின்னணியில் எமக்கு வெளிவரும் சிறுகதைகள் சார்ந்த சில கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது எமது கடமையாகும்.

எமக்கு கிடைக்கும் பல கதைகள் இன்னமும், “ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார்..”, “பேனாவின் சுயசரிதை..”, “நான் முதலமைச்சரானால்..”, “பாட்டி வடை சுட்ட கதை”, “வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டது..” எனும் தொனிகளில் உள்ளடங்கியுள்ளதைக் காணமுடிகின்றது. விவரணக் கட்டுரைகளும் – சிறுகதைகள் எனும் அடையாளத்துடன் அனுப்பி வைக்கப்படுகின்றன. பரந்த, அகன்ற, நுண்ணிய வாசிப்பு இல்லாமையை, இவை நன்கு எடுத்துக்காட்டுகின்றன. தாம் எழுதிய கதைகளை அவசரமாக அனுப்பி வைப்பதை தெளிவாக உணரமுடிகின்றது. செதுக் கப்படாமலும் – செப்பனிடப்படாமலும் கதைகள் வந்து குவிகின்றன. சிறுகதைகளின் தரம் தேக்கமடைந்து சுழன்றுகொண்டுள்ளது போன்ற எண்ணம் மேலோங்குகின்றது. இருப்பினும் ஊக்கமளிக்கும் நோக்குடன் அவற்றில் தேர்ந்தெடுத்து பிரசுரம் செய்துவருகின்றோம். தமிழ்ச் சிறுகதைகளை வளப்படுத்த, பலராலும் காலங்காலமாக முன்வைக்கப்பட்ட கருத்துகள் சிலவற்றை வினாக்களாக மாற்றி இவ்விடத்தில் தருகின்றோம்.

01. கதை பொருத்தமான இடத்தில் தொடங்கியுள்ளதா?
02. ஒவ்வொரு சொல்லும் கவனமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, வாக்கியங்கள் தெளிவாகக் கட்டமைக் கப்பட்டுள்ளனவா?
03. உரையாடல்கள் பாத்திரங்களுடன் பொருந்தி இயல்பாக அமைந்துள்ளனவா?
04. தேவையற்ற பந்திகள், வாக்கியங்கள், உரையாடல்கள் அல்லது சொற்கள் இடம்பெற்றுள்ளனவா?
05. ஏதேனும் கருத்து, சம்பவம், செய்தி அல்லது அறிவுரை வலிந்து புகுத்தப்பட்டுள்ளதா?
06. நிகழ்வுத் தொடர்ச்சியில் மாறுபாடுகள், முரண்பாடுகள் அல்லது தெளிவின்மைகள் உள்ளனவா?
07. வாசகனுக்குத் தொய்வு அல்லது சலிப்பு ஏற்படுத்தக்கூடிய பகுதிகள் உள்ளனவா?
08. கதையின் மையப்பொருள் – கரு சிதைவடைந்துள்ளதா?
09. கதை முடிந்த பின்னரும் அதன் கருத்து அல்லது உணர்வு வாசகனின் மனதில் நிலைத்திருக்குமா? அனைத்தும் வெளிப்படையாகவே கதையில் கூறப்பட்டுள்ளதா?

இப்பட்டியல் ஓர் உதாரணம் மாத்திரமே. இவ்வாறான சில சுயவினாக்களை எழுப்பி தமது படைப்புளைச் செப்பனிடலாம். கதைகளை வாசித்துமுடித்ததும், அவை கொண்டுள்ள கரு, கதைக் களம், கூறும்முறை, அமைப்பு, வசன அமைப்பு, சொற்பிரயோகங்கள், கூறியனவற்றால் கூறாதன கூறல் என ஏதாவதொன்றாவது வாசகனைச் சிந்திக்க வைக்கவேண்டும்; மனதை அலைந்துழல் நிலைக்குத் தள்ளவேண்டும்.

தமிழ்ச் சிறுகதைகளின் தரத்தினை மேம்படுத்த முயலுவோம்.

ooo






**நெய்தலூரான் ஜெயில்**
கலைப்பீடம்
பேராதனைப் பல்கலைக்கழகம்.

பல்கலைக்கழக விடுதியின் அறையில் அமர்ந்து கொண்டிருந்தேன். தேர்வுக்கான குறிப்புகள் என் முன் விரிந்துகிடந்தன. வெளியே மழை பெய்துகொண்டிருந்தது. ஜன்னல் கண்ணாடியில் மோதிச் சிதறும் மழைத் துளிகளின் சத்தம், என்னை என் கிராமத்திற்கும் என் சிறுவயதிற்கும் அழைத்துச் சென்றது. அந்தச் சத்தத்திற்குள் நான் எப்போதும் கேட்பது கடலின் சத்தம்தான். சிலருக்கு மழை கவிதைகளை நினைவூட்டும். சிலருக்கு காதலை நினைவூட்டும். ஆனால் எனக்கு மழை என்றாலே கடல் நினைவுக்கு வரும். ஏனெனில் நான் ஒரு மீனவனின் மகன். கடலின் மணத்தோடு வளர்ந்தவன். அலைகளின் சத்தத்தைத் தாலாட்டாகக் கேட்டு உறங்கியவன். இன்று பல்கலைக்கழக மாணவனாக கல்விகற்கும் நான், என் வாழ்க்கையின் ஒவ்வொரு வெற்றியின் பின்னாலும் என் அப்பாவின் உப்புக் காய்ந்த கைகளும், கடலோடு அவர் நடத்திய முடிவில்லாத போராட்டமும் இருப்பதை மறக்க முடியாது.

எங்கள் கிராமம் கடலை ஒட்டிய சிறிய மீனவக் கிராமம். அதிகாலை மூன்று மணிக்கே அங்கே வாழ்க்கை விழித்துக் கொள்ளும். இன்னும் நட்சத்திரங்கள் வானத்தில் மின்னிக்கொண்டிருக்கும்போதே வீடுகளில் விளக்குகள் எரியத் தொடங்கிவிடும். “ஏய்... எழும்படா... நேரம் ஆகுது...” என்று அப்பாவின் குரல் கேட்டாலே அதுதான் எங்கள் வீட்டின் அலாரம். அம்மா மண்ணெண்ணெய் அடுப்பில் தேநீர் வைத்திருப்பார். அப்பா வலைகளைச் சுருட்டிக்கொண்டு இருப்பார். வெளியே கடல் காற்று வீசும். “இண்டைக்கு கடல் நல்லாயிருக்கும் போலடா...” என்று அப்பா சொல்லும்போது அது வெறும் வார்த்தையல்ல. அந்த ஒரு வாக்கியத்திற்குள் அன்றைய உணவும், குடும்பத்தின் நம்பிக்கையும், பிள்ளைகளின் எதிர்காலமும் அடங்கியிருக்கும். கடலை நம்பி வாழும் மனிதர்களுக்கு ஒவ்வொரு நாளும் ஒரு புதிய தேர்வு. கடல் கருணை காட்டினால் வாழ்க்கை சற்று இலகுவாகும். கடல் கோபித்துவிட்டால் எல்லாமே தலைகீழாகிவிடும்.

சிறுவயதில் நான் அப்பாவுடன் பலமுறை கடற்கரைக்குச் சென்றிருக்கிறேன். அப்போது கடல் எனக்கு ஒரு பெரிய விளையாட்டு மைதானமாகத் தோன்றியது. அலைகளைத் துரத்தி ஓடுவேன். மணலில் கோட்டைகள் கட்டுவேன். ஆனால் அதே கடலை அப்பா வேறு கண்களால் பார்த்தார். அவருக்கு அது விளையாட்டு மைதானம் அல்ல. வாழ்க்கை நடத்த வேண்டிய போர்க்களம். படகை கடலுக்குள் தள்ளிச் செல்லும் முன், அவர் வானத்தைப் பார்ப்பார். காற்றின் திசையைப் பார்ப்பார். அலைகளின் வேகத்தை கவனிப்பார். “காற்று கொஞ்சம் மாறுது போல...” அல்லது “இண்டைக்கு ஆழக்கடலுக்கு போகலாம்...” அல்லது “நீர் குறைவுடா” என்று மற்ற மீனவர்களோடு பேசுவார். அந்த உரையாடல்களின் பொருள் அப்போது எனக்குப் புரியவில்லை. இன்று புரிகிறது. அந்தச் சில நிமிடங்களிலேயே அவர்கள் தங்கள் உயிரையும் குடும்பத்தின் எதிர்காலத்தையும் தீர்மானித்துக் கொண்டிருந்தார்கள்.

வருடத்தின் ஆறு மாதங்கள் எங்கள் கிராமம் உயிர்ப்புடன் இருக்கும். கடல் மீன்களால் நிரம்பியிருக்கும். படகுகள் வெற்றிகரமாக கரை திரும்பும். மீன் ஏலத்தின்

சத்தம் முழு கடற்கரையையும் நிரப்பும். “இண்டைக்கு நல்ல தொழில்ப்பாடு!” என்று மீனவர்கள் மகிழ்ச்சியோடு கத்துவார்கள். அந்த நாட்களில் அப்பாவின் முகத்திலும் சிரிப்பு இருக்கும். வீட்டில் சமையலின் மணம் அதிகமாக இருக்கும். கடைக்கடன்கள் அடைக்கப்படும். பாடசாலை மற்றும் தனியார் கல்விநிலைய கட்டணங்கள் செலுத்தப்படும். புதிய உடைகள் வாங்கப்படும். அம்மாவின் முகத்தில் கவலைக்குப் பதிலாக நிம்மதி தோன்றும். அப்பாவும் கொஞ்சம் இலகுவாகப் பேசுவார். அந்த ஆறு மாதங்கள் மட்டுமே எங்கள் குடும்பங்களிற்கு வசந்தகாலம்.

ஆனால் மீதமுள்ள ஆறு மாதங்கள் எங்கள் வாழ்க்கையின் இருண்ட பருவம். வடகிழக்குக் காற்று வீசத் தொடங்கும். கடல் கொந்தளிக்கும். அலைகள் உயரமாக எழும். சில நாட்களில் கடற்கரைக்கே செல்ல முடியாது. படகுகள் தென்னையோடும் கட்டப் பட்டும், உயர்ந்த மணல்ப்பிட்டிகளிலும் கிடக்கும். வலைகள் வீட்டு முற்றத்தில் உலர்ந்து கொண்டிருக்கும். அப்பா வீட்டின் முன் அமைதியாக அமர்ந்திருப்பார். அவர் முகத்தில் அப்போது ஒரு வகையான தோல்வி தெரியும். கடலை வெல்ல முடியாத மனிதனின் வேதனை அது. வீட்டில் வருமானம் நின்று விடும். ஆனால் செலவுகள் நின்றுவிடாது. அரிசி வாங்கவேண்டும். மின்சாரக் கட்டணம் செலுத்த வேண்டும். பாடசாலைக் கட்டணம் கட்ட வேண்டும். கடன் கொடுத்தவர்கள் கதவைத் தட்டத் தொடங்குவார்கள். அப்போது அம்மா அமைதியாக தனது நகைகளை அடகு வைப்பார். அப்பா ஊரில் தெரிந்தவர்களிடம் கடன் கேட்பார். சில நேரங்களில் கடலுக்குச் செல்ல முடியாத மீனவனின் வீட்டிலேயே ஒரு துண்டு மீன்கூட இருக்காது. இந்த முரண் பாட்டை அனுபவித்தவர்களுக்குத்தான் மீனவ வாழ்க்கையின் உண்மையான கசப்பு புரியும்.

ஒரு மழைக்கால இரவு. இன்னும் என் மனதில் அழியாமல் இருக்கிறது. வெளியே கச்சான் அடிக்கிறது. கடல் கரையைத் தாக்கியபடி உறு மிக்கொண்டிருந்தது. வீட்டின் கூரை முழுவதும் சத்தம். மின்சாரம் இல்லை. இருட்டில் அமர்ந்திருந்தோம். அம்மா சமையலறைக்குள் சென்று பாத்திரங்களைத் திறந்து பார்த்தார். ஒருவேளை சாப்பாட்டுக்குப் போதுமான அளவு மட்டுமே அரிசி இருந்தது. அப்பா எதுவும் பேசவில்லை. அமைதியாக வெளியே சென்றார். மறுநாள் அவர் கையில் ஒரு சிறிய அரிசி மூட்டையுடன் திரும்பி வந்தார். பல வருடங் களுக்குப் பிறகுதான் எனக்குத் தெரிந்தது. அந்த அரிசியை வாங்க அவர் திருமண மோதிரத்தை அடகு வைத்திருந்தார். அந்த உண்மையை அறிந்த நாளில் என் கண்களில் கண்ணீர் வந்தது. அன்றுவரை அப்பாவின் அன்பை நான் உணர்ந்திருந்தேன். ஆனால் அன்றுதான் அப்பாவின் தியாகத்தைப் புரிந்துகொண்டேன். என் கல்வி என்பது பள்ளி ஆசிரியர்களின் உழைப்பால் மட்டுமே உருவானதல்ல. அது என் அப்பாவின் தியாகங்களால் கட்டப்பட்டது.



**கடல் என் அப்பாவின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அவரது இளமையையும், உடல் வலிமையையும், கனவுகளின் பெரும்பகுதியையும் மெதுவாக எடுத்துக் கொண்டிருந்தது.**

நான் படித்த காலங்களில் பலமுறை கட்டணத்திற்காக காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நண்பர்கள் புதிய புத்தகங்கள் வாங்கியபோது, நான் பழைய புத்தகங்களைப் பயன்படுத்தியிருக்கிறேன். ஆனால் ஒரு போதும் அப்பா என்னிடம் "படிப்பை நிறுத்தி விடு" என்று சொல்லவில்லை. மாறாக, "நீ படிக்கணும் டா... நாங்க படிக்கல... நீ படிச்சு நல்ல இடத்துக்கு போகணும்...", "கோழி மேச்சாலும் கவமண்ட் கோழி மேய்க்கோணும்" என்பதைத்தான் மீண்டும் மீண்டும் சொல்லுவார். அந்த வார்த்தைகள் அப்போது சாதாரணமாகத் தோன்றின. இன்று அவை எவ்வளவு பெரிய கனவுகளின் சுமையைக் கொண்டிருந்தன என்பதை உணர்கிறேன். நான் பல்கலைக் கழகத்திற்கு தேர்வான நாள் எங்கள் வீட்டில் ஒரு திருவிழாபோல இருந்தது. ஊரில் இருந்த அனைவரும் வந்து வாழ்த்தினார்கள். அப்பா ஒவ்வொருவரிடமும் பெருமையோடு சொல்லிக்கொண்டிருந்தார்: "என் பையன் யூனிவர்சிட்டிக்குப் போறான்." அவரது கண்களில் தெரிந்த மகிழ்ச்சி எனது வாழ்க்கையில் நான் கண்ட மிகப் பெரிய விருதாக இருந்தது. ஆனால் அந்த மகிழ்ச்சியின் பின்னால் ஒரு கவலையும் இருந்தது. பல்கலைக்கழகக் கல்விக்கான செலவுகள் அவருக்கு பெரிய சுமையாக இருந்தன. இருந்தபோதிலும் அவர் ஒருபோதும் அதை வெளிக்காட்டவில்லை. தனது வலிகளை மறைத்து என் கனவுகளை முன்னிலைப்படுத்திய மனிதர் அவர்.

பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் முன் ஒரு மாலை, நாங்கள் இருவரும் கடற்கரையில் அமர்ந்திருந்தோம். சூரியன் மெதுவாக கடலுக்குள் மறைந்து கொண்டிருந்தான். அப்பா நீண்ட நேரம் எதுவும் பேசவில்லை. பின்னர் கடலைப் பார்த்தபடி, "நாங்க கடல்ல வலை வீசுறோம். ஒவ்வொரு தடவையும் மீன் கிடைக்காது. ஆனா வலை வீசுறதை நிறுத்த மாட்டோம். வாழ்க்கையும் அப்படித்தான். தோல்வி வந்தாலும் முயற்சியை நிறுத்தக் கூடாது," என்றார். அந்த வார்த்தைகள் என் வாழ்க்கையின் மிகப் பெரிய பாடமாக மாறின.

பல்கலைக்கழகத்தில் சேர்ந்த பிறகு உலகத்தை வேறு பார்வையில் பார்க்கக் கற்றுக் கொண்டேன். பொருளாதாரம், சமூக நீதி, தொழிலாளர் உரிமைகள், அபிவிருத்தி ஆகியவற்றைப் பற்றி படித்தேன். அப்போதுதான் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தனிப்பட்ட குடும்பங்களின் துயரங்கள் மட்டுமல்ல என்பதை உணர்ந்தேன். அது ஒரு முழு சமூகத்தின் போராட்டம். கடலில் உயிரைப் பணயம் வைத்து உழைப்பவர்கள் நாட்டின் உணவுப் பாதுகாப்பில் முக்கிய பங்கு வகிக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு மிகவும் குறைவு. புயலில் உயிரிழப்பவர்கள் அவர்களே. எரிபொருள் விலை உயர்வால் பாதிக்கப்படுபவர்கள் அவர்களே. கடனில் சிக்கிக்கொள்பவர்கள் அவர்களே. அவர்களுடைய கண்ணீர் பெரும்பாலும் புள்ளிவிபரங்களாக மட்டுமே பதிவாகிறது.

கடந்த விடுமுறையில் வீட்டுக்குச் சென்றிருந்தபோது, மாலை நேரத்தில் அப்பாவுடன் மீண்டும் கடற்கரைக்குச் சென்றேன். அவரது தலைமுடி முழுவதும் நரைத்திருந்தது. கைகளில் வலையின் காயங்கள் இன்னும் இருந்தன. கடல்நீரும் வெயிலும் அவரது உடலில் காலத்தின் தடங்களைப் பதித்திருந்தன. அவர் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தார். நானும் கடலைப் பார்த்தேன். ஆனால் அந்த மாலை எனக்குக் கடல் வெறும் நீர்ப்பரப்பாகத் தெரியவில்லை. அதற்குள் ஆயிரக்கணக்கான மீனவர்களின் கதைகள் தெரிந்தன. கரை திரும்பாத படகுகள் தெரிந்தன. காத்திருந்து முதுமை அடைந்த மனைவிகள் தெரிந்தனர். படிப்பை நிறுத்திய பிள்ளைகள் தெரிந்தனர். கடனில் மூழ்கிய குடும்பங்கள் தெரிந்தன. அந்த அலைகளின் ஒவ்வொரு உயர்விலும் ஒரு மீனவனின் நம்பிக்கையும், ஒவ்வொரு வீழ்ச்சியிலும் ஒரு குடும்பத்தின் கண்ணீரும் இருந்தது. அப்போது அப்பா மெதுவாக சொன்னார்: "இப்போ கடலுக்குப் போறது கொஞ்சம் பயமாயிருக்கு." அந்த வார்த்தை என்னை உலுக்கியது. வாழ்நாள் முழுவதும் கடலோடு போராடிய மனிதன் சொன்ன வார்த்தை அது. வயது அவரை மெதுவாக பலவீனப்படுத்தியிருந்தது. ஆனால் அந்தக் கணத்தில் நான் உணர்ந்தது வேறொன்று. கடல் என் அப்பாவின் வாழ்க்கையை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் அவரது இளமையையும், உடல் வலிமையையும், கனவுகளின் பெரும்பகுதியையும் மெதுவாக எடுத்துக் கொண்டிருந்தது. அன்று மாலை வீடு திரும்பும் போது என் மனதில் ஒரு தீர்மானம்

உருவானது. நான் எழுதும் ஒவ்வொரு வார்த்தையும் என் அப்பாவின் உழைப்பிற்கு ஒரு சாட்சியாக இருக்கவேண்டும். நான் பெறும் ஒவ்வொரு வெற்றியும் அவரது தியாகத்திற்கு ஒரு பதிலாக இருக்க வேண்டும். ஏனெனில் என் கல்வியின் பின்னால் ஒரு குடும்பத்தின் உழைப்பு மட்டுமில்லை ஒரு கடலின் வரலாறே இருக்கிறது. என் பட்டப்படிப்பின் பின்னால் ஒரு நூலகம் மட்டுமில்லை அலைகளோடு போராடிய ஒரு மீனவனின் வாழ்க்கையும் இருக்கிறது. இன்று நான் பல்கலைக்கழக மாணவனாக இந்தக் கதையை எழுதும்போது, என் கண்களுக்கு முன் இன்னும் அப்பாவின் உருவம் நிற்கிறது. அதிகாலை இருளில் வலைகளைச் சுமந்தபடி கடற்கரைக்குச் செல்லும் அந்த மனிதன். புயல் இரவுகளிலும் குடும்பத்தின் நம்பிக்கையைத் தாங்கிய அந்த மனிதன். தனது கனவுகளைத் துறந்து பிள்ளைகளின் எதிர்காலத்தை உருவாக்கிய அந்த மனிதன்.

எனக்கு கடல் என்றால் வெறும் கடல் அல்ல.
அது என் அப்பாவின் வியர்வை.
என் அம்மாவின் கண்ணீர்.
எங்கள் குடும்பத்தின் போராட்டம்.
ஆயிரம் மீனவக் குடும்பங்களின் உயிர் மூச்சு.

அதனால்தான் அந்தப் பெருங்கடலை நான் ஒரே பெயரால் அழைக்கிறேன்
"அப்பாவின் கடல்."

❍❍❍

# பட்டறிவுப் பாடல்...!

உனது மதிப்பும் மரியாதைகளும்
உள்வீட்டிலேயே தேயமுதல் நீ
எழுபதுக்குள் இறந்துவிடு...
அதுவே உனக்கும்
சில அன்பற்ற உறவுகளுக்கும் நிம்மதியையும்
மகிழ்ச்சியையும் தேடித்தரும்...!

உனக்கிருக்கும் சொத்துக்கள் பத்துக்கள்
சுகபோக வசதிகள்
உன்னைப் பக்குவமாக
பார்த்துப் பராமரிக்க நிச்சயமாக பக்கபலமாக
இருக்குமென நம்பினால் மட்டுமே நீ
எழுபதையும் தாண்டி வாழ
ஆசைப்படு தவறே இல்லை.
அப்படி ஏதுமின்றி
எழுபத்தைந்து எண்பது தொண்ணூறென நீ
வாழ நினைத்தால் உனது ஆசைக் குதிரையின்
கடிவாளத்தை இறுக்கி உனது
கட்டுப்பாட்டில் அதனை நிறுத்தி வை
இல்லை கட்டுடைத்துப் பாய அதை
அனுமதித்து....
அப்படியும் இப்படியும் வாழ நீ ஆசைப்பட்டால்
அறுபதுக்குள்ளேயே
ஏன் ஐம்பதுக்கிடையிலேயே
நூறுவித வியாதிகளை வேதனைகளை நீ
விலை கொடுத்து வாங்கி
ஆசுபத்திரிப் படிகளை அடிக்கடி
அகாலத்திலும் சென்று சேர
சொந்தங்களையும் பிள்ளைகளையும்
நிர்ப்பந்தித்து
அவர்களை முகஞ்சுழிக்கவும்
சலிப்படையவும் செய்து
வெறுப்பின் விளிம்பில் உன்னை
புறந்தள்ளி விடும்
கொடுமைகளுக்கு நீ ஆட்படலாம்.

எனவே....என்றும் நீ மகிழ்ச்சியாகவும்
சுகதேகியாகவும் யாருக்குமே
தொல்லையின்றியும்
சுமையின்றியும் நீண்டகாலம்
நிம்மதியாக வாழும் எண்ணம்
உனக்கிருந்தால்
எப்படியும் வாழலாம்
எவ்வேளையிலும் எதையும் உருசிக்கலாம்
இரசிக்கலாம் என்ற அற்ப ஆசைகளுக்கு
உடனடியாக விடைகொடுத்து
இப்படித்தான் வாழவேண்டுமென்று
திடசங்கற்பம் பூண்டு
ஒரு வரையறைக்குள் வாழ ஆசைப்படு...
அடுத்தகணமே
ஆனந்தம் உனது வாசற்படியேறி
தானாக வந்து
உனது ஆயுளை நீடிக்க....
நல்லவற்றை நீ சாதித்து பெருமைசேர்க்க
உனக்குக்
கைகொடுக்கும் நிச்சயமாய்...,!

**...ஷெல்லிதாசன்...**

# இசட் தலைமுறையும் கலை இலக்கிய எழுகோலமும்



பேராசிரியர்
சபா ஜெயராசா

உலகின் புதிய கருத்தாடலுக்குரிய கருப்பொருளாக, வரைவு பெற்று வருவது, இசட் (z) தலைமுறை. தலைமுறை ஆய்வில் அதிக தீண்டலுக்குரிய கருத்து வடிவமாக அது அமைந்துள்ளது. ஆண்டு நிரலில் 1997ஆம் ஆண்டுக்கும் 2012ஆம் ஆண்டுக்கும் 2012ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் பிறந்தோர் இசட் தலைமுறையினைராகின்றனர்.

இணையம், எழுதிறன் பேசி, சமூக ஊடகம் ஆகியவற்றில் மூழ்கிய தலைமுறையினர் என்ற அடையாளமும் அவர்களுக்கு உண்டு.

உலகளாவிய நிலையில் (Totalising) உள்ளாக்கி நோக்கினாலும், இலங்கைத் தமிழ்ச் சூழலில் தனித்துவமான அடையாளம் கொண்டவர்களாக அவர்கள் நிலைபெறுகின்றனர்.

உள்நாட்டுப் போரில் அவர்கள் பெற்ற அனுபவங்களும் சொல்லொணாத் துயரங்களும் இழப்புகளும் உலகில் வேறெந்த நாட்'டு இசட் தலைமுறையினரும் கண்டிராத பதிவுகள், நீடு பதிந்த அவர்களது அனுபவங்களும், பதிவீடில்லா தாகமும், கதைகளாய் வெளி வந்து கொண்டிருக்கின்றன. வீதி நாடகங்களாய் இயங்குகின்றன. ஓவியம் வடிவமைக்கப்படுகிறது.

இசட் தலைமுறையினரின் எழுச்சிக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் நாடுகளுள் ஒன்றாக நேபாளம் விளங்குகின்றது. வழடம் அற்ற அவலம், சுரண்டல், முதலியவற்றை ஆக்க இலக்கிய வெளிக்குக் கொண்டு வந்து மேலாதிக்கத்துக் எதிரான கருத்தியற் பரவலை அவர்கள் நிகழ்த்தினர். அம்மட்டோடு நின்று விடாது, அரசியற் புரட்சியையும் முன்னெடுத்தனர்.

இந்தியாவில் இசட் தலைமுறையினர் அனுபவிக்கும் வறுமை, வேலையின்மை, வாழ்விட நெருக்கடி, முதலியவற்றை உட்பொருளாகக் கொண்ட இலக்கிய ஆக்கங்களும் கலைப் படைப்புகளும் தனித்துவமான நிரலில் மேலெழுகின்றன. அவற்றின் தொடர்ச்சியாக, "கரப்பான் ஜனதாகட்சி" என்பதும் தோற்றம் பெற்றுள்ளது. இலட்சக்கணக்கான இளைஞர்கள் அதில் இணைகின்றனர்.

ஐ.அமெரிக்காவில் கருமை இன இளைஞர்கள் இன ஒடுக்குமுறைக்கு எதிரான இசை வடிவங்களையும், கருமைக் கலைகளையும், இலக்கியங்களையும் உருவாக்குகின்றனர்.

அவ்வாறான தனித்துவ நீட்சிகளினூடே இசட் தலைமுறையினரின் பொதுவான பண்புகள் பின்வருமாறு குறித்துரைக்கப்படுகின்றன.

(அ) கணினி, மடிக்கணினி, எழுதிறன் பேசி, முதலானவற்றை முன்னைய தலைமுறையினரை விஞ்சிய நிலையில் பயன்படுத்துதல்.

(ஆ) இணையம் இன்றி, வாழ்க்கையை அறிந்து கொள்ள முடியாத நிலையில் இருத்தல்.

(இ) சமூக ஊடகங்களைப் பயன்படுத்தலில் மிகையான ஆர்வம் காட்டுதல், அவற்றைப் பிரிந்து வாழமுடியாத உளக் கட்டுகை (Mind set) (வயப்படல்)

(ஈ) நடப்பு உலகைக் காட்டிலும் நிழலாயுள்ள மெய்நிர் உலககோடு அதிக உறவாடலை நிகழ்த்துதல்.

(உ) சமூக ஊடகம் வழியாக அரசியற் கோலம் உருவாக்குவோராய் இருத்தல்.

(ஊ) பாலியற் பதிவிடல் (*Sexting*) இணைய சூதாட்டம், முதலியவற்றின் விளைவுகள் பற்றிய முதிரா நிலையில் வாழ்தல்.

(எ) பிரச்சினைகளுக்குரிய சமூக அடிக் கட்டு மானம் பற்றிய கருத்தியற் புரிதலையும், அவற்றுக்குரிய ஆழ்ந்த வாசிப்பையும் வளர்த்துக் கொள்ளாத நிலையில் பெரும்பாலானோர் இருத்தல்.

(ஏ) எவற்றையும் பயன்செயல் (*Pragmatic*) நிலையில் நோக்குதல்.

(ஐ) செயற்கை நுண்மதியில் அதீத நம்பிக்கை கொள்ளல்.

(ஒ) ஆழ்நோக்கில் அணுகாது மேல் (*Surface*) நோக்கில் கலைகளையும், அரசியலையும் அணுகுதல்.

(ஓ) மரபு வழிமொழிக் கோலத்தில் விலகலை நிகழ்த்துதல்.

மேற்கூறிய கோல வரைபுப் பின்புலத்தில், அவர்களது கலைகளும் இலக்கிய வடிவ மைப்புகளும் கோலம் பெறுகின்றன.

இசட் தலைமுறையினரிடத்து உலக அளவில் மிகுந்த செல்வாக்குப் பெற்ற இசை யாக “கே.பொப்” என்ற தென் கொரிய நாட்டு எழுபரவல் இசை அமைந்துள்ளது.

இன்னிதம் (*Melodic*) என்ற சுவைப் பண்பையும், பண்பாட்டு வேர்களுடனான ஒட்டுமைக் கோலத்தையும், அந்த இசை கொண்டுள்ளது. மேலைப்புல இசை வகை களின் இதமான ஒன்றிணைப்பும் அதனுடன் நிகழ்த்தப்படுகிறது. பெண்களினதும், ஆண் களினதும் இதம் தரும் மனவெழுச்சிகளுக்கு அது மேலும் சுவையூட்டுகின்றது.

***கொரிய அலை*** என்பதுடன் இணைந்து கே.பொப் இசை உலகமெங்கும் பரவி நீள்கின்றது. கொரிய அலையில், கே.பொப், கே. நாடகம், கே.உணவு, கே. அழகுபடுதல் முதலியவை உள்ளடங்குகின்றன. அவற்றின் உலகப் பரவலை முன்னெடுப்பதில் சமூக ஊடகம் பெரும்பங்கு கொள்கின்றது.

கே.பொப் காணொலிகள் உலக சந்தையின் விற்பனையில் முதலிடம் பெற்று வருகின்றன. உலகை ஒன்றிணைக்கும் வலிமையுடன் அந்த இசை மேலெழுந்துள்ளது. ஆங்கில மொழித் தொடர்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் அதன் உலகப் பரவலுக்கு மேலும் வலுவூட்டு கின்றது.

இசையோடு இணைந்த ஆடல் அதற்கு மேலும் செறிவூட்டுகின்றது. ஆடல்களில் மேலைநாட்டு உடைகளினதும், கீழை நாட்டு உடைகளினதும் ஒன்றிணைப்பு ஒப்பனை அதன் உலகப் பரவலை மேலும் நெகிழ்ச்சிப் படுத்துகின்றது.

தமிழ்நாட்டில் இத்தலைமுறையினரின் பெரும்பகுதியினர் சினிமாவுக்கு அதீத ஈடுபாடு கொள்வதும், நடிகர்களை வீரவணக்கத்துக்கு உள்ளாக்குதலும் நிகழ்நிலை கொள்கின்றன. அதேவேளை சிறுபகுதியினர் கல்வி, கலைகள், விளையாட்டு முதலாம் துறைகளில் எட்டலை நிகழ்த்துகின்றனர்.

கே.பெப் சூழலில் பெரும் கலைஞர்களை வீரவணக்கத்துக்கு உள்ளாக்கி தமது எதிர் காலத்தை இழக்கும் இளைஞரும் உள். இளைஞர் களுக்கு வழிகாட்ட வேண்டிய கலைத் தலைவர் கள் தம்மைத் தாமே, அழித்துக் கொள்ளும் முரண் குவிகையும் காணப்படுகிறது. சியோஜிவொன் என்ற உலகப் புகழ்பெற்ற பொப்பாடகர் மிக இளவயதில் தமது உயிரை மாய்த்துக் கொண்டார்.

உயர்நிலையான கருத்தியலுடன் கலைகள் இணைக்கப்படாவிடில் அத்தகைய அவலநிலை ஏற்படுதல் உண்டு. ஆசியச்சூழலில் இந்திய இளம் இசைக்கலைஞர்கள் இந்து சமயக் கருத்தியலுடனும், சீனாவின் இளம் இசைக்கலைஞர்கள் மார்க்சியக் கருத்தி யலுடனும் தமமை இணைத்துக் கொள்கின்றனர்.

இசட் தலைமுறையினரது குத்து ஆடல்கள், உளவியற் பிரச்சினைகளுடன் இணைந்த மனவெழுச்சி வடிவங்களாகவுள்ளன. பின்வரும் பண்புகள் அவர்களின் குத்து ஆடலில் நிமிர்நிலை கொள்கின்றன.

1. அதிக வலுச்செறிவுடன் ஆடல் நிகழ்த் தப்படுதல்.
2. தன்னெழுகை அசைவுகளுடனும் தனித் துவத்துடனும் மேற் கொள்ளப்படுதல்.
3. கட்டற்ற எழுநடையை (*Free Style*) கொண் டிருத்தல்.
4. ஆடற் கட்டமைப்பின் இறுகிய மரபுகளைத் தவிர்த்தல்.
5. வேகமான சுழற்சிக்கும் கால வேலைப் பாடுகளுக்கும் இடமளித்தல்.
6. இலகுவாக விளங்கிக் கொள்ளப் படத்தக்க பாவனைகளைப் பயன் படுத்துதல்.

7. ஆடற் கலைக்குக் கட்டுப்பாடுகளை அவர்கள் விதிக்கவில்லை. யாவரும் ஆடலில் இணைந்து கொள்ளலாம்.

அவர்களின் ஓவியக்கலை, பல்வேறு பண் பாடுகளின் கலவையாக அமைந்துள்ளது. எண்ணமக் கலைநுட்பங்கள் ஓவியத்தில் பயன்படுத்தப்படுகின்றன. சமூக விபரிப்பும் நம்பகத் தன்மையும், நடப்பியலும் உட்பொதிவு கொண்டு வருகின்றன.

கணிப் பொறி நுட்பங்களால் முப் பரிமாண வடிவங்களை வரைவதில் அவர்கள் அதீத ஆர்வம் காட்டுகின்றனர். எண்ணிம செவ்வி தாக்கல் நுட்பங்களும் பயன்படுத்தப் படுகின்றன.

கணிப்பொறிக்கலையும் ஓவியக்கலையும் ஒன்றிணைக்கப்படுவதில் மிகுந்த ஈடுபாடு கொள்கின்றனர். செறிவுமிக்கதும் துடிப்பா னதுமான வண்ணங்கள் ஓவியங்களிலே பயன் படுத்தப்படுகின்றன. திண்கூழான செம்பரவல் (Texture) பெரும்பாலும் இடம்பெறச் செய்யப் படுகின்றது.

சர்லியவிசப் பண்பு என்ற அக நடப்பியல் சித்திரிப்பு ஓவியங்களில் புனைவு பெறு கின்றது. அதற்கு ஏற்றவாறு முரணுறு வண்ணங் களும், முடிவுறா அருட்டல்களும் ஒன்றிணைக் கப்படுகின்றன.

அவர்கள் எதிர்கொள்ளம் சமூகப் பிரச்சி னைகள், அடையாள நெருக்கடி, உளநெருக்கீடு, பதகளம், கல்வி மற்றும் தொழில் அவலங்கள் ஓவியங்களிலும் இலக்கியப் படைப்புகளிலும் பரவலுறுகின்றன.

அவர்களது இலக்கிய ஆக்கங்களும், வெளியீட்டு நடவடிக்கையும், எண்ணிமப் பண்பாட்டுடன் இணைந்தவை விரைந்து எழுதுதல், விரைந்து பரவவிடுதல். விரைந்து




துலங்களைப் பெற்றுக் கொள்ளலால் என்ற முத்தரப்புத் தொடர்புகள் கொண்டவை.

கதைகள் உடைந்த வடிவங்களாயும், சிதறல் சித்திரிப்புகளாயும் நேர்க்கோடு அற்ற நிலையில் எழுதப்படுகின்றன. உளவியல் அழுத்தங்களே கதைகளுக்குரிய உள்ளீடுகளாகின்றன.

எதிர்காலம் பற்றிய ஏக்கமும், மகிழ்வை இழந்த நினைவேக்கமும் (Nostalgia) அவர்களின் எழுத்துகளிலே பரவலுறுகின்றன.

புலம் சிதறி வாழும் நிலையில் அவர் களிடத்து நினைவேக்கம் அதிக அழுத்தத்துடனும் ஊடுருவும் கவலையுடனும் மேலெழுந்து ஆக்கங்களிலே அழுத்தம் கொள்கின்றன.

தம்மை நடுநாயகப்படுத்தும் ஆழத்துடன் கதைகள் எழுதப்படுகின்றன. சிறுகதைகளும் கவிதைகளும் நீட்சி கொள்ளாத சிறிய வடிவிலேதான் பெரும்பாலும் ஆக்கம் பெறு கின்றன. கொச்சை மொழியும், ஆக்கத் துக்கு வலுவூட்டும் காண்பியங்களும், கொடுந் தோற்ற வரைபுகளும் (Emojis) கதைகளுடன் ஒன்றிணைக்கப்படுகின்றன.

ஏளிகை (Synical) அல்லது ஏளன நிலையில் நடப்பியலைச் சித்திரிக்கும் முறைமை, பரவ லாகப் பயன்படுத்தப் படுதலைக் காணலாம்.

பொருண்மிய அசமத்துவத்தால் நிகழும் அவலங்கள், இனத்துவ நிறத்துவ ஒடுக்கு முறைகள், புவிசார் அரசியலால் நிகழும் பாதிப்புகள், சூழலியற்கேடுகள், தமக்கு வேண்டிய கல்வியையும் தொழில்களையும் எட்ட முடியாத அவலங்கள், பன்னாட்டு நிறுவ னங்களால் ஏற்படும் கல்வி மற்றும் தொழில்சார் பாதிப்புகள், பால்நிலை அசமத்துவம், மேட்டுக் குடி அரசியலின் ஏமாற்று முதலாம் உள்ளடக் கங்களில் அவர்களின் எழுத்து அளிக்கை மேலெழுகின்றது.

உலக நிலையில் பொதுவான கலை உள்ளடக்கம் அவர்களின் தனித்துவத்தை வெளிப் படுத்துகின்றது. அவற்றுடனும் அவற்றுக்கு மேலாகவும் இலங்கையின் தமிழ் எழுத்துக்களில் போரின்வலியும், இடப்பெயர்வும், மனக் கோலங்களில் ஊடு நிகழ்த்துகையும், கலைப் பதிவாகின்றன. சொல்லெழுகை இசையில் போர் அவலங்களையும் தாங்க முடியாத் துயரங்களையும் பாடி உளவியல் விதைப்புச் செய்கின்றனர்.

OOO

சிறுகதை



# பூரணை


கமலாபரன் பரராஜசேகரம்
(பிரான்ஸ்)







வைகறனுக்கு இதுவரைக்கும் எவருடைய சாவிலும் ஒப்புதல் இருந்ததில்லை. எவருக்குத்தான் இருக்கக்கூடும்? இவனுக்கு ஒருபடி அதிகம். வருடங்கள் ஆனாலும் மக்கிப்போகாத துயரத்தை வைத்தபடியே திரிவான், சாம்பல் பூத்த கங்கு போல. எவ்வளவு அற்புதமாக பிறக்கிறார்கள். எல்லாருக்கும் ஒரு கதையாவது இருக்கிறது, பால்யம் குறித்து விழிவிரிய விபரிப்பதற்கு. எத்தனையோ கஷ்டங்கள், துயரங்கள் இருக்கலாம். ஆனால், ஏதோ ஒருபொழுதாவது தெய்வாதீனமானதாய் இருந்துவிடுகிறது. சாவு மட்டும் ஏன் இப்படி ஈவிரக்கமில்லாமல் வேளைகெட்டவேளைகளிலும் உடையவன்போல வந்து நின்றுவிடுகிறது.

வைகறனைப் பொறுத்தவரைக்கும் எல்லாரும் ஒருவருக்கொருவர் வாழ்கிறார்களென்றால் அதேசமயம் ஒருவருக்கொருவரால்தான் சாகிறார்கள். அம்மா பிள்ளைகளுக்காய்ச் சாகிறாள். கணவன் - மனைவி பரஸ்பரம் செத்துக் கொண்டிருக்கிறார்கள் ஒருவர்க்கொருவரால். எவரோ விடுகிற புகையில் விடிகிறது. எவருக்கோ புற்றுநோய். எவரெவருக்கோ நின்றபடி, நடந்தபடி உழைத்து முழங்கால் தேய்ந்து, எவருடைய வாழ்விலோ ஒருநாளாவது குறைந்துவிடுகிறது வாழ்வில். இன்னும் இந்தக்காலத்தில் மண்ணும் கல்லும் அள்ளிக் கொண்டு போகின்ற வாகனங்கள், போதை என, போர் கொன்றதுபோக எஞ்சியவர்களை கொல்ல வகைதொகையாய்க் காரணிகள். எவரைக் கை கட்டா? தெரிந்தும் தெரியாமலும் அநேகமான கைகளில் அப்பி இருக்கிறது கொலைக்குருதி.

இப்போதும் அறுத்துக் கொண்டிருக்கிறது, அது நடந்து ஏறத்தாழ.. இல்லை, அவனுக்குச் சரியாகவே தெரியும், பதினைந்து வருடங்கள் வருகிற கார்த்திகையுடன். சுற்றத்திலோ அயலிலோ அவ்வளவு வசதிக் குறைவொன்றும் இல்லை. எல்லோரும் படித்திருந்தார்கள், வசதியாகவேதான் இருந்தார்கள். அப்படி இருக்க, பாட்டியை ஏன் அப்படிச் சாக விட்டார்கள்?

உடையாள்ப் பாட்டிக்கு கடைசி மூன்று வருடங்களாக மிகை மறதி, வயதையும் மறந்து சிறுமியாகி விடுவாள். திடீரென வெளிக்கிட்டு விடுவாள், தலைவாசல் இறங்கி வெளியே. எங்கேயெணை? என்றால் கைதடிக்கு என்பாள். அவள் பிறந்து வளர்ந்த ஊர். பதினாறு வயதில் தாத்தாவைக் கலியாணம் முடித்து வந்ததிலிருந்து, அந்தப்பக்கம் அவ்வளவாகத் திரும்பியதில்லை. ஒன்றுவிட்ட தம்பி மட்டும் அங்கே இருக்கிறார். நடமாடக்கூடிய காலத்தில் ஓய்வூதியம் வந்த, அடுத்தநாள் அக்கா வீட்டில் நிற்பார். அவ்வளவாக ஒன்றும் கதைப்பது போலவே தெரியாது. காலை வந்தாரென்றால் வெய்யில் தாழத் திரும்புவார். பாட்டிக்கு இருந்த ஒரே தமக்கை, வைகறன் பிறக்க கனகாலம் முதலே காலமாகிவிட்டிருந்தார். கடைசி அடிபெருத்த ஆலமரம்போல இவள் மட்டும் இங்கே இருந்தாள்.

அவளது தயாளகுணமும், கருணையும் ஊர் கடந்தும் பிரசித்தம், ஆடுமாடு பிராணிகள் முதல், அத்தனை மனிதர்களையும் நேசித்தாள்,

அதை வார்த்தைகளில் இல்லாமல் செயலால் செய்தும் கொண்டிருந்தாள். துப்புரவிலும் சுறுசுறுப்பிலும் அப்படியே. அவளுக்கு நிகர் அவள்தான். கால் தளர்ந்து, மறதி நோய் வந்ததும், அவளது வாழ்வு கொஞ்சம் கொஞ்ச மாய் மாறிப்போனது.

மறதி அதிகரிக்க இவர்கள் அவளைக் கவனிப்பதிலிருந்த வேறுபாடுகள் கண்முன்னே விளங்கின. இவர்கள் அனுபவிப்பது அத்தனையும் அவள் வழியே பொலிந்தவை. எல்லாம் பாகம் பிரித்தானபின், வயல்நடுவே துருத்தியெழுந்து நிற்கிற கிராமத்தெய்வக் கோயில் போலிருந்தாள். எல்லோருக்கும் வருடம் ஒருமுறை வந்து, மடை பரவமட்டும்தான் நேரமிருந்தது. தினப்பூசை செய்ய, எவருக்கும் உன்னவில்லை. கடைசியில் அவளைப் பூட்டி வைத்துவிட்டு, நாளாந்தங்களை கவனிக்கிற நிலையில் இருந்தார்கள். இவனால் அவற்றை விளங்கிக்கொள்ளவே முடியவில்லை. இவன் தன்னால் இயன்றபோதெல்லாம் அவளை பார்த்துக்கொள்ள எத்தனித்தான். ஆனாலும், பல விடயங்கள் அப்போதைய அவன் வயதுக்கும், அறிவுக்கும் அப்பாலேயே இருந்தன. இப்படி இருக்க ஒருநாள் காலை, உடலாகிக் கிடந்தாள். அத்தனை பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சொந்தங்கள், சொத்துப்பத்துகள், காணி பூமிகள், நகைநட்டுகள் எல்லாம் இருந்தன, ஆனாலென்ன்? கடைசியில் ஒருவாய் பாலென்ன, ஒரு மிடறு தண்ணீர் குடித்தாளா? என்பது கூடத் தெரியாமல் போயிருந்தாள். ஒவ்வொரு நாள் இரவும் போர்வை சரிப்படுத்தி ஏனையவை சரிபார்த்துப் போகின்ற இவனோ, அன்று போனவழியில் திரும்பி இருந்தான். அப்போது கேட்டுக் கொண்டிருந்தது அவளுடைய கடைசிக்குரலென்று அறியவில்லை.

செத்தவீடு களை கட்டியது. மாதம் ஒரு முறைகூட வந்திராத மகன்கள் வந்தார்கள். அவர்கள் சார்ந்த நிறுவனங்களின், நண்பர்களின் அஞ்சலித் தட்டிகள் தெருவை நிறைத்தன. பக்கத்து வீடு, வந்து போகும்போது அவளை எட்டிப் பார்த்திராத உறவுகள் வந்தார்கள். தில்லை ஆச்சி மட்டும் வந்திருந்து நெடுநேரம் ஒப்பாரிவைத்தழுது விட்டு எழுந்து போனாள். ஏனையவர்கள் எவரும் வருந்தியழுததாய்க் கூடத் தெரியவில்லை. அன்றோடு பிடித்தது இவனுக்கு கேள்விகளின் சோகை. அவள்



இவர்களுக்கு என்ன குறை வைத்தாள், அத்தனை பேரையும் பெற்று வளர்த்து ஆளாக்கி, அவர்கள் பெற்றதையும் ஆளாக்கி.. எல்லாம் கடைசியாய் இப்படிப் போகத்தானா?

எங்கெங்கோ எல்லாம் திரிந்தான், நதிகளும் கோயில்களுமாய் நடந்தான். வருடங்களாகியும் துரத்தின குற்ற உணர்வும், ஆற்றாமையுமாய். அவனை ஆற்றுவதானதாய் எதுவும் எழுந்து வரவில்லை. வருடங்களாக இறக்கப்படாத சிலுவையாய் அவனோடு பொருந்திப் போனது அந்தக் குற்றச்சுமை. ஒவ்வொன்றிலும் உடையாள்ப் பாட்டி வெளிப்பட்டுக் கொண்டிருந்தாள், அவள் விட்டுவைத்துப்போன மிச்சம்தானே எல்லாம், ஏன் இவர்களுமே.

ஏதோ ஒருநாள் ஏதோ உந்துதலில் வெளிக் கிட்டுப்போய் காசி சேர்ந்தான். அதிகாலையில் பிண்டமிடப் போனபோது, ஐயர் இதுவரைக்கும் இறந்துபோன அவன் பாத்தியப்பட்ட அத்தனை பெயர்களையும் சொல்லச் சொன்னார். அந்த நேரம் ஞாபகம் வந்த அத்தனை பேரையும் ஒப்புவித்தான். இவள் பிரதானமானவளாய் இருந்தாள். முடிந்தது. கங்கையில் கரைத்துவிட்டு மூன்றின் அடுக்குகளில் முழுகி எழுந்து ஐயரை தட்சணை தந்து, விடைதந்தான். இவனாய் இழுத்து வைத்திருந்த ஏதோ இளகுவது போலிருந்தது.

அன்றைக்கு மாலை, சந்தி வேளையில் மறுபடி கங்கையில் இறங்கிநின்று சூரியனை நோக்கி அர்க்கியம் விட்டான். கைகள் கடந்து இறங்கி நடந்தாள் கங்கை, பிரகாசமாய் எங்கிருந்து அள்ளப்பட்டாளோ அங்கு நோக்கி.

எவருடைய பிண்டங்கள் நாம்? என்னுடலில் இருக்கின்ற கூறுகள் எவரிலிருந்தெல்லாம் வந்தவை? நான் கரைத்தவை எவர்க்குரிய தெல்லாம்? நானும் கரைந்து கொண்டிருக்கிற பிண்டமா கால நதியில்? ஆக ஒற்றைச் சாவோடு முடிந்துவிடுவதில்லையா வாழ்வு? சமயத்தில் பிண்டம் கொடுப்பவனும், பிண்டம் கொள்பவனும் ஒருவன்தானா...

ஏதோ வெளிக்க, ஏதோ நிறையுமாற் போலிருந்தது. ஒருவர் பிரிவில் வருகிற துயர், அவர்களில் போகின்ற எங்களுக்கானதும் தானா? ஆக, மறுதலையாக இருக்கிறவர்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள்தானே இல்லாது போனவர்கள்.. வந்து கொண்டேயிருந்தது ஒன்றன்மேல் ஒன்றாய்.. உடையாள்ப் பாட்டி சொட்டச்சொட்ட திவ்வியமாய்க் கங்கையாடிக் கொண்டிருக்க, இவன் இலேசாகிக் கரைந்து கொண்டிருந்தான்... கங்கையில்.

படித்துறையில் சாதுக்கள் கூட்டமொன்று பாடிக் கொண்டிருந்தது சேர்ந்த குரலில்.. "புனரபி ஜனனம், புனரபி மரணம்.." கடந்து கொண்டிருந்தாள் கங்கை புனிதமும், தெளிவுமாய்!

❍❍❍

# அழுகையின் ஆழத்தில் ஒளி



வெளிச்சூழலும் உள் சூழலும்
ஒருங்கே மனதை நோகடிக்க
வதைபடும் மனத்தின் வேதனை
வெளிப்படுகிறது அழுகையாக

அழுது அழுது வற்றிப் போவது
கண்களின் கண்ணீர் மட்டும் அல்ல
மனதை வதைப்படுத்தும் வஞ்சக
எண்ணங்களும் மழுங்கடிக்கப்படும்

துயரத்தின் வெளிப்பாடு அழுகை
அழுது அழுது மனது ஓய்ந்தபின் நமது
உள்ளுணர்வின் துடிப்பினால் தோன்றும்
அழுகையின் ஆழத்தில் ஒளி

மனதை தெளிவுபடுத்தும் அந்த ஒளி
உருவாக்கும் மனதில் அமைதியை
என்றும் தோற்றிடாத அழகான நம்பிக்கைகள்
தோன்றும் அந்த அழகுமிக்க ஒளியில்

**குப்பிழான் மு. ஆ. மோகன்**

விமர்சனம்

# புனைவும் சுயமும்



ரஞ்ஜனி சுப்ரமணியம்

ஓர் இலக்கியப் படைப்பின் வாசிப்பானது, அனுபவம் அறிவு என்ற நிலைகளுக்கு அப்பால் காலம் கடந்தும் உணர்வுகளாக மனதில் சேமிக்கப்படும்போது அதிக பெறுமதி உடையதாகிறது.

அதே சமயம் அந்த உணர்வினைத் தரும் எழுத்தாளர் அதனை புனைவாக மட்டுமே கருதினாரா அல்லது அவரது சுயமும் அங்கு வெளிக்காட்டப்படுகிறதா என்ற சிந்தனை சிலருக்கு தோன்றக் கூடும். இந்த எண்ணம் தவறா சரியா என்பதற்கு அப்பால் யதார்த்த மானது என்றே கொள்ளவேண்டும். அக உலகு புற உலகு இரண்டும் இணைந்த சங்கமமே இலக்கியப் படைப்புகள்.

இதனால்தான் பாலியல் சார்ந்த புனைவு களை வெளிப்படையாக எழுத பெண் எழுத்தா ளர்கள் பலரும் தயக்கம் காட்டுகின்றனர்.

எழுத்தாளரின் குறிப்பிட்ட படைப்பு பற்றிய சிந்தனையுடன் அவர் எப்படியான குணநலம் வாய்ந்தவர், எவ்வாறான சந்தர்ப்பத்தில் அல்லது என்ன மனநிலையில் இப்படைப்பினை எழுதியிருப்பார் என்ற சிந்தனையையும் சில சமயங்களில் சேர்ந்தே உருவாதல் தவிர்க்க முடியாதது.

இக் கேள்வியை எனக்குள் ஏற்படுத்தியதும் ஒரு எழுத்தாளர்தான். பேராசிரியரும் தமிழ கத்தின் பிரபல எழுத்தாளருமான பெருமாள் முருகன் அவர்கள்.

“திரிவேணி சங்கமம்” என்ற பெயரில் தமிழகத்தின் காலச்சுவடு பதிப்பகத்தால் மறுபதிப்புச் செய்யப்பட்ட, எழுத்தாளர் ஆசி கந்தராஜாவின் குறுநாவல் தொகுதியின் முன்னுரையில் இவ்வாறு கூறுகிறார்.

“பொதுவாக ஆசி கந்தராஜாவின் மொழி யும் ஆற்றொழுக்குடன் கதை சொல்லும் முறையும் வாசிப்புக்குப் பெரிதும் உகந்தவையாக இருக்கின்றன. எல்லாக் கதைகளிலும் கதை சொல்லி பார்வையாளராகவே இருக்கிறார். வளமாக வாழும் ஈழத்தவர்மீது வெறுப்பும் துயருறும் ஈழத்தவர்மீது கரிசனமும் வெளிப் படுகின்றன. பெண்கள்மீது அத்தனை உயர்ந்த அபிப்பிராயம் இல்லை.”

“பெண்கள் மீது அத்தனை உயர்ந்த அபிப்பிராயம் இல்லை” என்ற அவரது கூற்று சிறு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. இத்தொகுப்பின் சில கதைகளிலும் கதாசிரியரின் ஏனைய






**ஆசி கந்தராஜா அவர்களின் கதைகளை வாசிக்க இணைப்பு**
https://kantharajahstory.blogspot.com/

தொகுப்புகளிலும் வெளிப்படுத்தப்பட்ட பெண்களின் நடத்தைக் கோலங்கள் இதற்குக் காரணமாக இருக்கலாம். அல்லது அவரது தனிப்பட்ட மதிப்பீடாகவும் இருக்கலாம். ஆனால் ஒரு தனி மனிதராக ஆசி கந்தராஜா பெண்கள் மேல் மரியாதை கொண்ட பண்பாளராகவே வெளியுலகில் அறியப்பட்டவர்.

இத்தொகுப்பின் முதல் கதையாகிய திரிவேணி சங்கமத்தில் முக்கிய பெண்பாத்திரம் ரொஸ்நாக். அமீரின் மனைவி. ஈரானியர்கள். பாரம்பரிய ஈரானிய கலாசாரத்தை சேர்ந்த பெண்ணாயினும், அமீரின் மேற்படிப்பிற்காக ஆஸ்திரேலியாவில் வாழும் காலத்தில், மேற்குலக கலாசாரத்தின் வயப்பட்டு பாதை மாறியவளாக கணவன் அமீரின் சந்தேகத்திற்கு உள்ளாகிறாள்.

ஒரு ஆங்கிலேயனோடு பிறழ் உறவு கொண்டவளாகவும் காதலனின் ஆங்கிலேயச் சாயலில் தூய செம்பட்டை முடி கொண்ட குழந்தையை பெற்றுக் கொண்டவளாகவும் கணவனால் குற்றம் சுமத்தப்பட்டு அக்குழந்தையுடன் கைவிடப்படுகிறாள். அமீர் மற்றக் குழந்தைகளுடன் தனியாக ஈரான் திரும்புகிறான். இக் குறுநாவல், தொகுப்பில் உள்ளது. இதில் படைப்பாளரும் ரொஸ்நாக் மேல் சந்தேகம் கொண்டவராகவே தோன்றினார்.

ஆனால் ரொஸ்நாக் கலாசார மாற்றத்தினை விரும்பியது தவறாகாது என அவளது பெண்ணிய உரிமைகளுக்காகப் பரிந்து பேசிய சில வாசகரின் விருப்புக்கிணங்க அக்குறுநாவலின் தொடர்ச்சியாக படைப்பாசிரியர் மீண்டும் ஒரு கதை எழுதினார்.

"காதலொருவனைக் கைப்பிடித்து" எனும் அக் கதையின் மூலம், பிறந்த குழந்தையின் DNA பரிசோதனைகள் மூலமாக தன்னைக் களங்கமில்லாதவளாக நிரூபித்துக் கொள்கிறாள் றொஸ்நாக்.

அமீரும் அவளும் வெவ்வேறு தேசங்களில் தங்கள் உண்மைக் காதலை மறக்க முடியாது வாழ்கின்றனர்.

இது ஒருபுறமிருக்க மற்றுமோர் சிறுகதை ஆசி கந்தராஜாவின் "இந்துமதியாகிய நான்".

இங்கு திருமணத்திற்கு முந்திய தனது ஆண்மைக் குறைபாட்டை மறைத்து மணம் முடிக்கும் ஆண் ஒருவன் தனது குறைபாடு வெளியுலகிற்கு தெரியாதிருக்க வேண்டி, மனைவியை வேறொருவரின் விந்தணு மூலம் செயற்கை முறையில் கருத்தரிப்பு செய்வித்து தனது "ஆண்மையை" நிரூபிக்கின்றான்.

ஆனால் தாம்பத்திய சுகத்தை அனுபவிக்காத அந்தப் பெண் உணர்ச்சி வேகத்தால் தன் வீட்டில் தங்கியிருந்த ஒருவரால் மீண்டும் கர்ப்பமாகிறாள். அந்தக் குழந்தை தனதல்ல என்பதை வெளியே சொல்ல முடியாத கணவன் தற்கொலை செய்து கொள்கிறான்.

இந்த மூன்று கதைகளிலும் குற்றம் செய்தவள் பெண்ணல்ல. ஆனால் தம்மைச் சார்ந்தவர்களால் அவர்களது சுயநலத்தால் அல்லது சந்தேகத்தால் பாதிப்புக்கு உள்ளாகிறாள். தவறாக விளங்கிக் கொள்ளப்படுகிறாள்.

ஆண்மைக் குறைபாட்டை தமக்கு அவமானமாகக் கருதி மறைக்க நினைக்கும் ஆண், தனக்குரிய தண்டனையை தானே உருவாக்கிக் கொள்கிறான் என்பதாக கதையை முடித்ததில் இருந்து பெண்ணுக்கு சார்பாகவே படைப்பாளரது மனநிலை இருப்பதை உணரலாம். பெண்ணின் நியாயமான உணர்வுகளைப் புரிந்து கொள்பவராகவே தெரிகிறார்.

வேறு தொகுப்புகளில் இருக்கும் சில கதைகளிலும் பெண்ணுக்கு ஆதரவாகவே அவரது குரல் ஒலிக்கின்றது.

உ+ம் நரசிம்மம், துர்க்கா தாண்டவம், ஆண்குழந்தை.

# நன்றி



சாஹித்யரத்னா தி. ஞானசேகரனின் மறைவினையடுத்து அஞ்சலி நிகழ்வுகள், இலங்கையிலும், உலகளாவிய ரீதியிலும் தொடர்ந்தும் நடந்தவண்ணம் உள்ளன. பலரும் நிகழ்வுகளை நடத்துவதற்கு எம்மிடம் திகதிகளை கேட்டவண்ணம் உள்ளனர். மேலும், நேரடியாகவும், தொலைபேசி – மின்னஞ்சல் – அஞ்சல் வாயிலாகவும் அஞ்சலிச் செய்திகள் தொடர்ந்தும் எமக்குக் கிடைத்தவண்ணம் உள்ளன. தமது தோள்கொடுத்து துயரில் பங்கேற்கும் அனைவருக்கும் எமது அன்புடன்கூடிய பணிவான நன்றி.

OOO

பிறழ் உறவுகளை ஆண் மேற்கொள்ளும் போது அதிகம் கவனத்தில் எடுக்காத சமூகம், பெண் தவறு விடும் போது பெருத்த ஆவேசம் கொள்கிறது. ஆனால் உணர்வுகள் இருபாலாருக்கும் பொதுவானவை. பெண்ணின் மேல் ஏன் பழி அதிகம் சுமத்தப்படுகிறது என ஆழமாக யோசித்தால் ஒரு உயிரைத் தாங்கி உருவாக்கக் கூடிய கர்ப்பப்பையும் கன்னிமைக்கு சான்றாகக் கொள்ளப்படும் ஒரு மென்சவ்வும் அவளுக்கு அமைந்திருப்பதே முக்கிய காரணமாகத் தோன்றுகிறது. ஆண் செய்த ஒழுக்கவீனங்களுக்கான தண்டனையை அவள் கருவில் சுமப்பதால், அதுவே அவள் மேல் களங்கம் சுமத்தப்படுவதற்கும் காரணமாகிறது.

கருப்பை இல்லாவிட்டால் அவளது களங் கங்களும் ஆணைப் போலவே மறைக்கப் படலாம். அல்லது மறுக்கப்படலாம். தாய்மை பெண்ணுக்கு வரமா சாபமா என்ற கேள்வி இங்கு எழுகிறது.

ஆண் பெண் இருவரிடமும் ஆதிக்க மனப்பான்மை இருந்தாலும் உள்ளுறங்கும் உணர்வுகளின் சதவீதம் ஆண்களுக்கு மிக அதிகமானது. பெண் மேலாதிக்கம் ஆண் மேலாதிக்கம் இரண்டில் எது உலகில் அதிகளவு நிலவுகிறது என்ற கேள்விக்கான விடையை அவரவர் தமக்குள்ளே தேடிக் கொள்ளலாம். விடை நிதர்சனமானது. காரணம் படைப்பின் விநோதம். பெண்ணுடலின் மென்மையும் தாய்மையும்.

ஆனால் பெரும்பான்மை ஆண்கள் பாலின சமத்துவவாதிகளாகவும், பெண்களை மதிப்பவர்களாகவும் தம்மை வெளிப்படுத்திக் கொள்வது புறவுலக அபிப்பிராயங்களை வசியப்படுத்துவதற்காகவே. விதிவிலக்கான ஆண்கள் பலர் நிச்சயமாக உண்டு. அதைப் பெண்களின் உள்ளுணர்வுகள் அறியும்.

பெரும்பான்மை ஆண்களின் மன நிலையை உணர்ந்தமையே, பெண்கள் தமது அங்கீகாரத்திற்காக தனிப்பட்ட போராட்டங் களையும் அமைப்புகளையும் தோற்றுவிப்பதற்கு காரணமாக அமைகிறது.

ஆசி அவர்கள் கண்ணியமான நடவடிக் கைகள் கொண்டவர். ஆனால் அது தனது மரி யாதையைக் காத்துக் கொள்வதற்கான நடை முறையா அன்றி பெண்களின் சமத்துவத்தை கண்ணியத்தை சுயமரியாதையை மதிக்கிறாரா என்ற கேள்வி இப்போதும் தீர்க்கப்படாமலே இருக்கிறது.

நிறைவாக ஒரு விடயம் தெளிவாகிறது. ஆசி தீவிர பெண்ணியவாதி போல கோஷம் போடுவதில்லை. நடிப்பதில்லை. அவர் ஒரு யதார்த்தவாதி. இயற்கையில் உயிர்களின் இருப்பும் தொடர்ச்சியும், ஆணை வலிமை யானவனாகப் படைத்திருக்கிறது என்பதால் ஆண் மேலாதிக்கம் இயல்பானது என்ற கருத் தினை நம்புபவர்.

அதையே நேர்மையாக எழுதுகிறார். அந்த நேர்மைதான் அவர் பெண்களுக்கு கொடுக்கும் மிகப் பெரிய மதிப்பு. பொய்மை நிறைந்த அதீத மரியாதையை பெண்கள் மேல் காட்டாமல் தன் கண்ணியத்தைக் காப்பதன் மூலம் மறைமுகமாக பெண்மையின் பெருமைகளுக்கு பங்கம் ஏற்படாது காக்கிறார். அதையே தன் கதைகளிலும் வெளிக்காட்டுகிறார் என்பதையே இதற்கான பதிலாகக் கொள்ள வேண்டி உள்ளது.

❍❍❍

# நமக்கு நாமே எதிரி

நாம் பாவிக்கும் பொருட்களின்
மீதி நெகிழி கழிவுகளை
வெளியே குப்பைகளில் எறிய!
மழை வெள்ளத்தில் எடுபட்டு
ஆறுகளிலும், கடலிலும்
சேர்ந்தே பலபல நாட்கள்
கிடந்து சிறுசிறு துகள்களாக
உருமாறி நீரில் கலந்தே
தூய்மைக் கெடுக்கிறதே!
மீன்களுக்கு, அவை இரையுடன்
படிந்தே உட் சென்றதே,
உப்பு தயாரிக்கவும்
இந்நீர் பயன்பட
இவைகளை நாம் உண்ண
எமக்கு தீங்கு விளைவிக்கிறதே!

**கலாதினி பா.முருகானந்தன்**
உடப்பு




பனி படர்ந்த அந்த தோட்டத்திலே சூரியன் தனது பொற்கதிர்களை பரப்ப, முன்பு இருள்நங்கை தனது தாவணி புடைவையை மலைமுகடுகள் எங்கும் பரப்பி இருந்தாள். இருள்நங்கையின் அரவணைப்பில் இருந்த கதிரவன் கண் விழிக்க எத்தணித்தபோது மீண்டும்மீண்டும் மேகங்கள் என்ற பேராசை அந்த மலை முகடுகளை அணைத்தபடி இருந்தது.

நாலா புறங்களிலும் மலைகள் சூழ்ந்த அந்த பிரதேசத்திலே ஒரு முச்சக்கரவண்டி சாதாரண வேகத்தில், குன்றும் குழியுமாக இருக்கும் அந்த பாதையை மேலும் கீழுமாக ஆடியபடி, ஒரு இன்றையகால பாடல் ஆனால் குரல் தெளிவில்லை, பேண்ட் வாத்தியம் இசைப்பது போல, அந்த ஒலி பாடல் கேட்க விரைவாகவும் இல்லை, குறைவாகவும் இல்லை, சாதாரண வேகத்தில் அந்த முச்சக்கரவண்டி வந்து கொண்டிருந்தது.

அதிலே தலையிலே நன்கு முடி வளர்த்த மூவன்ன கொடிபோல் சாயம் பூசப்பட்டு உடம்பிலே ஆங்காங்கே பச்சை குத்தப்பட்டு காதிலே கடுக்கண் குத்தப்பட்டு செப்பல்ஸ் போடப் பட்டு ஒரு சாதாரணமாக இருபத்து மூன்று அல்லது இருபத்து நான்கு வயது இளைஞன் அந்த முச்சக்கர வண்டியை செலுத்திக்கொண்டு வந்தான்.

அவன் யார்? அதற்கு முன்பாக பின் புறத்திலே சுமார் அறுபது வயது மதிக்கத்தக்க இரு உருவங்கள் அமர்ந்திருந்தன. அதில் ஒருவர் ஆண் இன்னொருவர் பெண். அந்த ஆண் உருவம் முன்பாக வாகனத்தை செலுத்திக் கொண்டிருக்கின்ற உருவத்தைப் பார்த்து “தம்பி சிவா மெதுவாக ஓட்டு” என்றது. பதிலுக்கு அந்த பெண் உருவமும் “ஆமா சாமி மெது வாக ஓட்டு” என்றது. ஆம் அந்த இரண்டு உருவங்களும் அந்த இளைஞருடைய தாயும் தகப்பனும் ஆவர்.

இந்த வாகனம் ஓட்டிக்கொண்டிருக்கின்ற இளைஞனின் இதய பகுதியிலே ஏதோவொரு பெயர் பச்சை குத்தப்பட்டு இருந்தது. இந்த வாகனம் மலையகத்திலே அதி கஷ்டப் பிரதேசத்தில் ஒரு பகுதியில் இருக்கின்ற ரஸ்போக் என்ற பகுதியில் இருந்து கொத்மலையை நோக்கி வந்துகொண்டிருந்தது.

முச்சக்கரவண்டி, தோட்ட புறங்களில் திருவிழா காலங்களிலே சுவாமி தரிசனம் செய்வ தற்காக சப்பரம் ஒன்று தூக்கி வருவார்கள். இது முதியோர்களும் கோவிலுக்கு செல்ல முடியாதவர்களும் வணங்கவேண்டும் என்ற ஐதீகத்தில் அதை தூக்கிக்கொண்டு வருவார்கள். அது பல வர்ண நிறங்களிலும் அலங்காரத் தோரணங்களிலும் சோடிக்கப்பட்டிருக்கும். அந்த வகையில்தான் இந்த முச்சக்கரவண்டியும் சோடிக்கப்பட்டிருந்தது.

முச்சக்கரவண்டி சுமார் எட்டு கிலோமீற்றர் மெதுவாக அசைந்து அசைந்து வந்தது. அது கொத்மலை பகுதியில் இருக்கின்ற ஒரு வைத்தியசாலையை நோக்கி போய் கொண்டி ருந்தது. அது தோட்டப்புற வீதியை கடந்து பிரதான வீதியை வந்தடைந்தபோது தீடீரென்று மூன்று, நான்கு பைக் வண்டிகள் அதை இடைமறித்து அந்த இரண்டு பெரியவர்களையும் கீழே இறக்கிவிட்டார்கள். தன் தாய் ஆஸ்துமா

நோயில் பீடிக்கப்பட்டுள்ளார், எனவே அவரை கூட்டிக்கொண்டு செல்வதற்குதான் அந்த வண்டி செல்கின்றது.

இடையில் மறிக்கப்பட்ட அந்த நான்கு உருவங்களும் சிங்கள மொழியில் பேசிக் கொண்டிருந்தார்கள். "கொஹேத யன்னே? (எங்கே போறீங்க) என்று முதலில் மரியாதை யாக கதைத்தார்கள். பின்பு அவர்களுடைய வார்த்தைகள் அனைத்தும் பால் மரத்தில் வேல் பாய்ச்சியது போல் இருந்தது.

சிவாவின் தாயும் தந்தையும் பயந்து போனார்கள். சிவாவை நோக்கி யார் சாமி இவங்க? என்ன பிரச்சினை இவங்களுக்கும் உங்க ளுக்கும்? ஏதும் செய்யாத தப்ப செய்துட்டியா என்று தாயின் உள்ளம் பதபதைத்தது.

அப்பொழுது வந்த உருவத்தில் கருத்த உருவம் ஒன்று கேட்டது இவர்கள் யார்? மாத்தியா இவர்கள் எனது தாயும் தந்தையும். இவங்களுக்கு மருந்து எடுக்க ஆஸ்பத்திரிக்கு போறோம் என்றான் சிவா. அதெல்லாம் பொய். தயவுசெய்து முச்சச்சரவண்டியை விட்டு இறங் குங்க என்றார். ஒருவர் அப்போது சிவா வினுடைய தந்தை ஐயோ! என்ன நடந்துச்சினு தெரியாது இது எனவுட்டு (சேமலாப நிதி) EPF காசுல இருந்து வாங்குனே. இது எனக்கு சொந்தமானது. இது எனவுட்டு புள்ளக்கி வாங்கி கொடுத்துருக்கே, நீங்க இதுல ஏன் தல போடுறீங்க என்று கேட்டார்.

ஐயா உங்களுக்கு வெலங்கல, வீலுக்கு இவர் ஏழு மாதங்களாக Q பணம் அதாவது மாதாந்த கட்டணத்த செலுத்தல. 18000 தொகை படி ஏழு மாதம் இவர் கட்டல. இவருக்கு எத்தனையோ தடவை கோல் பண்ணியும் ஆன்சர் பண்ணல. இப்போ நாங்க முச்சக்கரவண்டிய எடுக்குறம். நீங்க அங்க வந்து கதைச்சிகங்க என்றார்.

வாதங்கள் அதிகரிக்க அதிகரிக்க தாய் திக்குமுக்காடினார். தந்தை இயன்றளவு கதைத்துப் பார்த்தார். அதெல்லா சரிவராது ஐயா, தயவுசெய்து முச்சக்கரவண்டியை விட்டு இறங்குங்க என்று சாவியை பறித்தார். சிவா அந்த அதிகாரிகளை தனியாக கூட்டி சென்று ஏதேதோ கதைத்துப் பார்த்தார். ஒன்றுமே சரிவரல.

என்னய்யா நடந்துச்சி. இந்த கெதியா எனக்கு, எவ்ளோ கஷ்டபட்டு வாங்குன. இந்த காசு சுமார் 30 வருடங்களாக தோட்டத்துல வேல செஞ்சி மழையில நனைஞ்சி அட்டை கடிபட்டு வேகாத வெயிலுல சேர்த்த காசு. இப்படி பண்ணிட்டியே அப்பா என்று நெஞ்சில் அடித்துக்கொண்டார் தகப்பன்.

அந்த நபர்களுடன் காரசாரமான விவா தங்கள் தோன்றின. சிவாவினுடைய முச்சக்கர வண்டி சுமார் ஏழுமாத காலமாக பினான்ஸ் தொகையை செலுத்தவில்லை என்றும் நீங்கள் தேவையான விடயங்களை முகாமையாளரிடம் அணுகும்படி பினான்ஸ் கம்பனியில் உள்ள வர்கள் தெரிவித்தார்கள்.

அதற்கு சிவாவினுடைய தகப்பன், ஐயா நான் ஐந்து இலட்சம் ரூபாய் மொத்தமாக செலுத்தினேன். ஆனால் எப்படி பினான்ஸ் என்று சொல்கிறீர்கள். அதற்கு அந்த அதிகாரி ஐயா இல்லை ஒரு இலட்சம் ரூபாய் செலுத்தப்பட்டது. மீதி பணம் இவர் செலுத்த வில்லை. எனவே கம்பனி இதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

நீங்கள் அதற்கான விஷயங்களை நேராக வந்து பேசினால் நன்றாக இருக்கும். எவ்வளவு மன்றாடியும் அந்த பினான்ஸ் கம்பனிக்காரர்கள் ஒத்துக்கொள்ளவில்லை. தயவுசெய்து எங்க ளுடைய வேலையை செய்யவிடுங்கள். நீங்கள் ஏதேனும் தேவையென்றால் அங்கே கதைத்துக் கொள்ளுங்கள் என்றான்.

பிற்பாடு மகன் தனக்கு துரோகம் செய்து விட்டான் என்று தகப்பனுக்கும் சிவாவுக்கும் வாக்குவாதங்கள் அதிகரித்தது. ஆனாலும் அதை வெளிக்காட்டவில்லை. "கடவுளே! இந்த கொடுமையா? என்று சிவாவின் தகப்பன் தடுமாறினான். இன்னும் சிவாவினுடைய தாய் சிவாவை ஏசவில்லை. அப்பா கொஞ்சம் வாங்க என்னமோ பிழை நடந்திருக்கு. அத பொயிட்டு விசாரிக்க சொல்லுவம். புள்ளைய ஏசாதீங்க என்று அந்த தாய் மனம் பதபதைத்தது. எவ்வளோ துரோகம் செய்தாலும்கூட அந்த தாய் மனசு தன் மகனை ஏசுவதற்கு தயாராக இல்லை, அது தான் தாய் மனசு.

சிவாவுக்கு என்ன செய்வதென்று தெரிய வில்லை. தான் செய்த குற்றம் தன் குடும்பத்துக்கு தெரிந்துவிட்டது என்று தடுமாறினான். இன்னும் அதை வெளிக்காட்டாதவாறு வாகனத்தை உற்று பார்த்து தடுமாறும் நிலைக்கும் வந்துவிட்டான். அதே நேரத்தில் பூண்டுலோயா பஸ் ஒன்று வந்தது.

அது அரசாங்க பஸ் வண்டியாக இருப்பதால் தான் அதை இடை நடுவே மறித்து மூவரும் பஸ்ஸில் ஏறினர். உடனடியாக முதலில் தன் தாய்க்கு மருந்தை பெற்றுத்தரவேண்டும் என்று நினைத்துக்கொண்டு, கொத்மலை மாவட்ட வைத்திசாலைக்கு விரைந்தார்கள். அங்கு போகும்போது சுவாசநோய் அதிகரித்தது போல் தென்பட்டதால் டாக்டர் அவருக்கு காரசாரமாக ஏசினார். எவ்வளவோ சொன்னாலும் கேட்க மாட்டீங்க.

அதிகமாக குளிரில் இருக்கவேண்டாம் என்றும் மாத்திரைகளை ஒழுங்காக குடிக்க வேண்டும் என்று சொன்னார். எனினும் தாய் குடிக்கவில்லை என்று தகப்பனுக்கும் மகனுக்கும் கடுமையாக திட்டி தீர்த்துவிட்டார் டாக்டர். இன்னும் முழு சிந்தனையும் இவருடைய வீட்டை பற்றியே இருந்தது.



வைத்தியரிடமிருந்து தனது மனைவிக்கான மருந்துகளை பெற்றுக்கொண்ட பின்பு தவலந்தனை சந்திக்கு வந்தவர்கள் தன்னுடைய மகனையும் மனைவியையும் அனுப்பிவிட்டு கண்டியிலிருந்து நுவரெலியா நோக்கிச் செல்கின்ற ஒரு பஸ் வண்டியில் ஏறி நுவரெலியா நோக்கி சென்றார் கணேஷன். அன்று கிழமை நாள் என்பதால் பஸ்ஸில் சன நெருக்கடி அவ்வளவாக இல்லை. அதனால் அவருக்கான ஆசனம் ஒன்று கிடைத்தது. அதில் அமர்ந்துகொண்டார்.

பஸ் வண்டி இறம்பொடை சுரங்கப்பாதையின் ஊடாக செல்கின்றபோது தனது உடம்பு வலி காரணமாக அசந்து தூங்கிவிட்டார். இந்த கணேஷன் தோட்ட புறங்களிலே இருக்கின்ற மக்களது வாழ்க்கை சுமையோடு வாழ்வாதார பிரச்சினைகளுக்கு மத்தியில் அவர்களது ஊழிய சேமலாப நிதி மட்டுமே சேமிப்பாக இருந்தது. வேறு எவ்வித சேமிப்பும் இல்லை. விலைவாசி அதிகரிப்பு இருந்தாலும் அவர்களது அத்தியாவசிய தேவைகள் நிறைவேற்றவே போதுமானதாக இருந்தது. அவர்களது வாழ் வாதாரம் உயர்வதற்கான வாய்ப்பு குறைவாக இருந்தது.

இவ்வாறான நிலைமையிலே கணேஷனும் அவரது மனைவியும் வாழ்க்கையை நடத்தி கொண்டு அறுபது வயதுக்குப்பின் இவர்களின் சேமலாப நிதி பெறப்பட்டு அவர்களது மூன்று பிள்ளைகளுக்கு வழங்க நினைத்தனர். இவர்களில் மூன்றாவது மகனே சிவா ஆவார். இவர்களின் மகள்கள் இருவரும் படித்துவிட்டு பின் ஒரு வழியாக திருமணம் முடித்து சென்று விட்டார்கள். பின் இருவரின் ஊழிய சேமலாப நிதி வந்த பின் அது பிள்ளைகளுக்கும் பிரித்து கொடுக்கும்படி ஒரு வரையறை இருக்கின்றது.

ஒரு வழியாக அந்த பணம் வந்தபோது வங்கியில் இருக்கின்ற அந்த அதிகாரி அவரை அழைத்து கணேஷன் இந்த காலத்தில் யாரையுமே நம்ப இயலாது. எனவே நீங்க எல்லா காசையும் இப்பவே குடுக்காதிங்க இந்த காச ஒரு சேமிப்பா வைச்சிகங்க. மாதாந்தம் ஒரு வட்டி வீதம் வரும் நீங்க அத உங்க அத்தியாவசிய தேவைக்கு பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார்.

ஆனால், இவருடைய பிள்ளைகளின் கெடுபிடி காரணமாக அந்த பணம் எல்லாவற்றையும் எடுத்து பிள்ளைகளுக்கு பிரித்த பின் சிறிய ஒரு தொகை மட்டும் வைத்துவிட்டு சுமார் ஏழு இலட்சம் ரூபாவை எடுத்தார். தனது மகன் க.பொ.த. சாதாரண தரம் படித்து முடிக்காத போதும் கிரிக்கெட் மீதான மோகம் அதிகமாகவே இருந்தது. அதாவது மலையகத்தில் மட்டுமல்ல இலங்கையில் அதிக இடங்களில் கிரிக்கெட் சூதுபோல் கௌவி கொண்டிருக்கின்றது.

ஆரம்ப காலத்திலே அது உடற் பயிற் சிக்கான விளையாட்டாக இருந்தது. தற்போது

அது மாறி, இருபது ஓவர்களில் ஒவ்வொரு ஓவர்களுக்கும் சூதாட்டம்போல் பணம் கட்டி ஆடுகின்றனர். இந்த விளையாட்டில் வெற்றியடைந்தால் காசை எடுத்துக் கொள் கின்றார்கள். தோல்வி அடைந்தால் காசை பெறமுடியாது. தோட்டப் புறங்களிலே இளம் குடும்பஸ்தர்களும் இவ்வாறான விளையாட்டை தனது மனைவிகளின் நகைகளை ஈடுவைத்து கூட விளையாடுகிறார்கள்.

இந்த வகையில்தான் கிரிக்கெட் சுற்று போட்டிக்காக தொலைதொடர்பு சாதனங்கள் மூலமாக பத்து பேர் குழுவாக இணைந்து ஒருவருக்கு 10,000/= படி முதலீடு செய்து சூதாட்டம் போல் விளையாடுகின்றனர். குறிப்பிட்ட காலத்தில் எங்கேயோ உள்ளவர்கள் இணைந்து, உலக கிண்ணத்தை வென்றெடுப்பது போல எண்ணி போர் வீரர்களைப்போல வந்து விளையாடுகின்றார்கள். அதுவும் பணத்தை முதலீடு செய்து விளையாடுகின்றனர். இது மலையகத்தில் கெசினோ விளையாட்டுபோல மாறிக்கொண்டிருக்கின்றது. அப்படியும் ஒரு ஐந்து பேர் இருக்கின்றனர்.

எனவே தன்னுடைய மகன் எதற்காக இவ்வளவு பணத்தையும் செலுத்தவில்லை, என்ன பிரச்சினை என்று அறியாமல் யோசித்துக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்தாலும் எண் ணங்கள் இவ்வளவு விடயங்களையும் சிந்தித் துக்கொண்டு நுவரெலியாவை எட்டியதும் சிறு குலுக்களுடன் பிரேக் செய்து பஸ் வண்டி நிறுத்தப்பட்டது.

தனது சால்வையை எடுத்து தனது முகத்தை துடைத்து விரைவாக வேகமாக கடையை நோக்கி சென்று வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு அடங்கிய வெற்றிலை கூறு ஒன்றை பெற்று ஐம்பது ரூபாயை கொடுத்து வாங்கினார்.

வெற்றிலை பாக்கு துண்டுகளையும் புகையிலை வைத்து சுண்ணாம்பை இட்டு வாயில் வைத்து ஓட்டமும் நடையுமாக முச்சக்கர வண்டி வாங்கிய இடத்தை நோக்கிச் சென்றார்.

அப்பொழுது தனது முச்சக்கர வண்டி இவரை வரவேற்று சிரிப்பதுபோல அந்த பினான்ஸ் கம்பனி முன்னால் நிறுத்தப்பட்டிருந்தது. இவன் ஓடியவன் தன் குழந்தையை தடவி பார்ப்பதுபோல அந்த முச்சக்கர வண்டியை தடவியபோது அவனது கண்களிலே சிறு ஈரம் கசிந்ததை பார்க்கக்கூடியதாக இருந்தது.

உள்ளே சென்றவர் அந்த அதிகாரியிடம் சென்று ஏதோ கதைக்கின்றார். அவர் இன் னொரு பெண்மணியை நோக்கி விரலை காட்டுகின்றார். அந்த பெண்மணி இன்னொரு உயர் அதிகாரியின் மேசையை நோக்கி கூட்டிக்கொண்டு செல்கின்றாள். அப்பொழுது தான் தெரிகிறது, சேர் நான் ஏழு இலட்சம் ரூபாய்தான் கட்ட கொடுத்தேன். ஆனால் அவர் கட்டவில்லை. மாதாந்தம் தான் ஒரு தொகை கட்டுவதாகவும் அதையும் கட்டவில்லை என்றுதான் முச்சக்கர வண்டியை பறிமுதல் செய்து வந்தனர். இது என்ன நியாயம் என்று கரகரத்த குரலில் கூறினார் கணேஷன்.

அங்கிள் என்று கூறியவர் பாதி தமிழும் பாதி சிங்களமும் கலந்து கதைத்தார். அதாவது உங்களுடைய மகன் எங்களுக்கு கொடுத்த காசு ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம். அவர் மாதாந்தம் 20,000/= கட்டுகின்றேன் என்று ஒப்புதல் செய்தார். நீங்க பாக்காமலே கையொப்பம் இட்டு உள்ளீர்கள். உங்கள் பெயரில் முச்சக்கர வண்டி எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அவர் மூன்று மாதங்களாக பணத்தை செலுத்தவில்லை. எனவேதான் நாங்கள் முச்சக்கர வண்டியை பறிமுதல் செய்தோம்.

இல்லை ஐயா நான் ஏழு இலட்சம் ரூபாவை கொடுத்தேன் என்று வாதங்கள் அதிகரிக்க, அவர் ஏதோ மேசையில் இருக்கின்ற அழைப்பு மணியை அழுத்தி கூறினார். அப்போது அந்த அழகான பெண்மணி விரைந்து வருகின்றார். அவருக்கு இவர் சம்பந்தமான கோவையை எடுத்து வரும்படி கூறினார். அக்கோவையை காட்டி விளக்கமாக விடயத்தை கூறுகின்றார். இப்பொழுதே அவர் கட்டிய பணத்தொகையையும் மாதாந்தம் கட்டப்படவில்லை என்றும் எவ்வளவு பணம் பெறப்பட்டுள்ளது என முழு விபரமும் கணேஷனிடம் அந்த அதிகாரி விளக்கினார்.

உலகத்திலேயே கொடூரமான செயல் என்று சொன்னால் பிள்ளைகள் வளர்ந்து நல்ல பெயரை பெற்று அந்த பெயர் மூலமாக அவர்கள் குடும்பத்திற்கு நற்பெயரை ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். ஆனால் தகப்பனையே ஏமாற்றி உள்ளான் என நினைக்கையில் அழுகை முற்றியது.

கணேஷனுக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. நுவரெலியாவில் குளிர்

பிரதேசங்களில் பனி பெய்வது போல் கண்களில் இருந்து நீர் வந்தது. எனவே அந்த அதிகாரி தனக்கு வைத்திருந்த தண்ணீர் போத்தலை அவருக்கு குடிக்க கொடுத்தார். அவரை மகனை அழைத்து வரும்படி சொல்லி முழு விடயத்தையும் அறிந்தால் நான் உதவி செய்யலாம் என்று ஒரு நெகிழ்வான குரலில் கூறினார்.

கணேஷன் கதைத்து கொண்டிருக்கும் போதே போத்தலிலுள்ள அரைவாசி நீரை குடித்தார். எனினும் போத்தலில் இருந்து குடிக்கின்ற நீர் தொண்டையை தாண்டி உள்ளே செல்ல மறுக்கின்றது. இப்படியே இந்த நீர் விஷமாக மாறி தான் இறந்துவிட்டால் நல்லது என்று நினைத்தார் கணேஷன்.

எனினும் சுதாரித்துக்கொண்டு நான் பிறகு வருகின்றேன் ஐயா என்று கூறிவிட்டு சால்வையில் முகத்தை துடைத்துக்கொண்டு பினான்ஸ் கம்பனியிலிருந்து வெளியேறும் போது அவரது பிரதேசத்தில் காத்தான் கங்காணி லயத்திலிருந்து முருகையா தலைவரும் அவரது இரு மகன்களும் இருமாப்புடன் சிரித்த வண்ணம் பினான்ஸ் கம்பனியை உள்நோக்கி வருகின்றனர். அவர்களை விரக்தி பார்வையுடன் பார்த்துவிட்டு நுவரெலியா பஸ் தரிப்பிடத்தை நோக்கி கணேஷன் வருகின்றார். அவனுடைய உள்ளமும் உடம்பும் எல்லாமே நனைகிறது. அவரது உடல் நுவரெலியா பனிமழையில் நனைகிறது. உள்ளம் அவரது மகனை நினைத்து நனைகிறது.

❍❍❍

# கையாலாகாதவர்கள்

நான் யார்?
நீ யார்?
நாமெல்லாம் யாரோ?
தலை கீழாய் சுற்றிக் கிடக்கும்
இப்பூலோகத்தில் என்ன
செய்து கொண்டிருக்கிறோம்?

மனித மாமிசம் உண்ணும் – அதுவும்
மழலை மாமிசம் உண்ணும்
உலகில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம்.

மனித வதை செய்பவனின் கைகளில்
“மைக்” கொடுத்து அலம்பவிட்டு,
கைகட்டி பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

கள்வர்கள் எல்லாம்
கனவான்களாய் கண்முன்னே
திரிகின்றனர் – கைகாப்பு போடத்தான் நாதியில்லை.

யுத்த வித்திடுபவனே
“சமாதான நீதவானாய்”
சால்சாப்பு காட்டிக் கொண்டிருக்கிறான்.

அநியாயக்காரர்களை
ஆதரிக்கும் அறிவிலிகளின்
ஆதிக்கம் ஆச்சர்யம் தருகிறது.

பாவங்கள் பவுசுடன்
பல்லிளித்து சிரிக்கின்றன.
பாவக் கணக்கேடுகளைத் தான் காணவில்லை.

பசியில் கதறும் குழந்தைகள்
வெற்றுத் தட்டுடன் வரிசையில்,
நம் குழந்தைகளுக்கு
“ஒரு பருக்கையும் விரயம் செய்யாதே”
என பாடம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

நாமெல்லாம் யாரோ?
கையாலாகாதவர்கள்...
கையால் நல்லதை ஆக்கத் தெரியாதவர்கள்.
கையால் தீயதை போக்கத் தெரியாதவர்கள்.
ஆம் நாமெல்லாம் கையாலாகாதவர்கள்...

**ரிஸ்மியா நாகூர்கனி ஹாபி**
(லண்டன்)





# திக்வா

மண்ணும் சரிஞ்சு போச்சு
ஊரோட உசுரு எல்லாம் மண்ணுக்குள்ள மக்கியாச்சு
அட்டைக்கடியிலும் மொட்டை வெய்யிலிலும்
பாடுபட்டு உழைத்ததை தவிர
எங்கள் சனம் தப்பேதும் செய்யவில்லை
இயற்கை செய்த பிழை
எங்கள் கதறல் இருளிலே கேட்கவில்லை
உழைத்து ஓய்ந்தக் கூட்டம் ஓய்வெடுக்கும் வேளையிலே
பாவி மழை வர பாழாகி போனமே !
திக்வா புயல் வர திக்கற்று நின்றோமே !
இருநூறு ஆண்டுகள் மண்ணோட போராடி
நாக்கிற்கு சுவையா நல்ல தேவாமிர்தம் தந்த மக்கள்
உசுருக்குப் போராடி இதய துடிப்பை நிறுத்திக்கிச்சே...
பத்தாம் தேதி சம்பளத்தை சிறுக சிறுக சேர்த்து வைத்து
பெரிய மவன் படிப்புக்காக அரிசிக்குள்ள ஒழித்து வைத்தாள் வள்ளி
வைத்த பணமும் கிடைச்சிருச்சு
வள்ளி இன்னும் கிடைக்கலையே...
பிறந்த நாளுக்காக வாங்கி வந்த புது பொம்மை
கிடக்குதம்மா சேற்றுக்குள்ள
ஒரு வயது தொடங்கும் முன்னமே
அவள் சிரிப்பு கலந்ததையா காற்றோட...
வளைகாப்பு முடிஞ்சிருச்சு
பிஞ்சுப்பாதம் தரை தொடும் நாளாச்சு
காத்திருந்த தாயின் கனவு உறக்கத்திலே பறிபோச்சு
மீட்க முடியா பாதி உயிர் மண்ணுக்கு இப்போ உரமாச்சு
மண்ணு வந்து மூடும் போது எங்க சனம் என்னவெல்லாம் நினைச்சிருக்கும்?
உசுர காக்கும் படி கடவுள் கிட்ட கேட்டிருக்கும்.
“ஏழை சனம் இருந்தால் பயன் எதுவும் தேறாது.
தினம் வந்து எனக்கு படையலொன்றும் போடாது”
என்று நினைத்தா இறைவன் இரக்கமின்றி நடந்துக் கொண்டான்
பலரை பரிசாய் தானும் வாங்கிக் கொண்டான்.
இத்தனை உயிரை பறித்துவிட்ட மகிழ்ச்சியிலே
மழையும் மெதுவாய் ஓய்ந்து போச்சு...
எல்லாம் நடந்த பின்பு திக்வா நாட்டைக் கடந்து போச்சு....
முகிலை கலைந்து புதுச்சூரியன் மெல்ல உதயமாச்சு
எல்லாம் இழந்த பின்பு மிச்சமிருந்ந தன் மகன் பள்ளி நடக்க
கொழுந்துக் கூடையுடன் மீண்டும் எட்டி நடக்கிறாள் சின்னத்தாயி...

–**பிரியதர்ஷனி** (பெய்த்திலி டிவிசன், பத்தனை)





# நான் இரசித்த கோடுகள்

**கே.எஸ்.சுதாகர்** அவுஸ்திரேலியா.



ஒரு நவீன ஓவியம், ஒவ்வொருத்தருடைய மனத்திலும் விதைக்கும் எண்ணங்கள் பலவாகும். ஓர் ஓவியர் ஒன்றை நினைத்துக்கொண்டு தனது ஓவியத்தை வரைகின்றார். நான் அதைப் பார்த்துவிட்டு ‘இந்த ஓவியம் இதைச் சொல்கின்றது’ என்று சொல்வேன். ஆனால், என் அருகில் நிற்கும் இன்னொருவர், ‘இல்லை... இல்லை... இந்த ஓவியம் வேறு ஒன்றைச் சொல்கின்றது’ என்பார். ஆகமொத்தம் அதைப் பார்க்கும் மனிதர்கள் ஒவ்வொருவரிலும் அந்த ஓவியம் பல்வேறு அர்த்தத்தைக் கிளர்த்திநிற்கும். அப்போது அந்த ஓவியம் பல ஓவியங்கள் ஆகிவிடுன்றன.

இத்தகைய தன்மை வாய்ந்தவை சிவகுமாரன் அவர்களின் ஓவியங்கள். பொதுவாக இவரது ஓவியங்களும் சிற்பங்களும் எல்லோரையும் கவர்ந்து கொள்ளும்தன்மை கொண்டவை. பார்ப்பவர்கள் கண்ணுக்கு குளிர்ச்சியைக் கொடுப்பவை.

கலைகள் எல்லாம் எல்லாருக்கும் கைவரக் கூடியவை அல்ல. அவற்றைப் படித்து விடுவதனால் மட்டும் வருவதும் அல்ல. அது ஒரு வரம். உயிருடன் சேர்ந்து நின்று கூத்தாடும் இன்னொரு உயிர். அத்தகையை ஒரு மனிதர் மு.க.சு.சிவகுமாரன் அவர்கள்.



## மு.க.சு.சிவகுமாரனின்
## ஓவியங்களும் சிற்பங்களும் குறித்த பகிர்வு




**நாய்க்குட்டியுடன் இருக்கும் மனிதர்**

இந்த நேரத்தில் எனது சிறு வயதுப் பிராயம் நினைவுக்கு வருகின்றது. அப்போது ஓவியமோ சிற்பமோ பற்றி எதுவுமே புரியாத வயது. இவரது வீட்டிற்கு ஒருநாள் சென்றிருந்த வேளையில், ஒரு திறந்த வெளிப் பகுதியில் பல சிற்பங்கள் இருந்ததைப் பார்த்தேன். அந்நாளில் இவர் அங்கே இருக்கவில்லை. வெண்ணிறத்திலும் மஞ்சள் கலந்த மண்ணிறத்திலும் சாந்திட்ட அந்தச் சிலைகளைப் பார்த்து வியந்து நின்றபோது, 'கண்ணன் செய்த சிலைகள்' என்று அவரது அம்மா சொன்னார். அவை சரஸ்வதி, திருவள்ளுவர், ஆறுமுகநாவலர், விபுலானந்தர், விவேகானந்தர் சிலைகள் என இப்போதும் என் மனதில் ஊஞ்சலாடுகின்றன.

பின்நாளில் இவர் எனது புத்தகங்களுக்கும் ஓவியம் வரைந்து தருவார் என்று அப்போது நான் கனவிலும் நினைக்கவில்லை. இதுவரை வெளிவந்த எனது நான்கு நூல்களுக்கும் இவரே ஓவியம் வரைந்திருக்கின்றார். அவை ஒவ்வொன்றும்கூட ஒன்றிலிருந்து மற்றது ஏதோவொரு வகையில் வேறுபட்டே காணப்படுகின்றது. எனது முதல் சிறுகதைத் தொகுப்பான 'எங்கே போகின்றோம்' என்பதற்கு வரைந்த ஓவியம் ஒன்றுக்குள் ஒன்றாக உள்ளே நகர்ந்து செல்லும் வித்தையைக் கொண்டது. 'சென்றிடுவீர் எட்டுத் திக்கும்' தொகுப்பிற்கு வரைந்த ஓவியம் முப்பரிமாணத் தன்மை கொண்டது.

இவரது ஓவியங்கள் - ஆயில் பெயிண்டிங், பென்சில் ஓவியங்கள், indinink பெயிண்டிங் என்ற வகைமையில் அமைந்தவை. இவர் வரைந்த ஓவியங்களில் – மழைக்கு குடை பிடித்துக் கொண்டு நிற்கும் பெண், நாய்குட்டியுடன் இருக்கும் மனிதர், விளக்கை ஏந்தியபடி நிற்கும் காரிகை (ஃபிளாரன்ஸ் நைட்டிங்கேல்), மீரா, அடிமை விலங்குடைக்கும் பெண் மற்றும் 1992இல் யேர்மனியில் நடந்த வேலையில்லா திண்டாட்ட காலத்தில் நடந்த சுவர்ச்சித்திரப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஓவியம் என்பவை என்னை மிகவும் கவர்ந்தவை. சுவர் சித்திரப்போட்டியில் பரிசு பெற்ற ஓவியம், பிக்காசோவின் ஓவிய வகைமைக்குள் அடங்கிய ஆயில் பெயிண்டிங் ஓவியத்தை ஒத்திருப்பதைக் காணலாம். பல நுணுக்கமான தகவல்கள் இந்த ஓவியத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. இவற்றைவிட மாதாமாதம் ***வெற்றிமணி***யில் வரும் பல ஓவியங்களும் எனக்கு மிகவும் பிடித்தமானவை.

இவரது ஓவியங்களில், பெரும்பாலும் அசலைவிட நகல் முந்திவிடுவதைக் காணலாம். இவர் ஜேர்மனியில் முதன் முதலாக வைத்த ஓவியக் கண்காட்சியில் நடந்த சம்பவமொன்று அதையே சொல்லி நிற்கின்றது. அந்த ஓவியக் கண்காட்சியில் விலைபோன ஒரு ஓவியம், அதை வாங்கிய முதிய தம்பதியினர், அதை வாங்குவதற்கு முன்னர் அந்த முதிய பெண்மணி நடத்திய நாடகம் இனிமையானது. ஒரு வயது முதிர்ந்த தம்பதியினர், தம் இளமைக்காலத்து காதல் உணர்வை அந்த ஓவியத்தில் கண்டு அப்படியே உறைந்து போய் நிற்கின்ற நிலை சொல்ல முடியாதது. அதை அவர்கள் வாங்கும்போது என்ன விலை என்று கேட் பதும், உங்கள் விருப்பம் போல தாருங்கள் என்று இவர் சொல்வதும், ‘‘எங்கள் விருப்பம் போல தருவதற்கு எம்மிடம் அவ்வளவு பணம் இல்லை’’ என்று அவர்கள் சொல்வதும், ஒரு ஓவியத்தின் பெறுமதியை சொல்லாமல் சொல்லிவிடுகின்றது.

**மரத்துக்குத்தான் இலையுதிர்காலம், மனதிற்கு ஏது**



இவரது சிற்பங்களில் ஏகாந்தமாக இறுமாப்புடன் வீற்றிருக்கும் மனிதன், மீரா, அகலிகை, ஆறு புதிய கார்களின் மின்சார உபகரணங்களைக் கொண்டு உருவாக் கப்பட்ட நவீன சிற்பம் (2004), யேர்மன் தொழிலதிபர் கெல்முட் கொஸ்ரோல் என்பவருக்கு – அவரது 50 வயது பிறந்த தினத்திற்கு – வடித்துக் குடுத்த சிலை என்பன என்னை மிகவும் கவர்ந்தவை. இதில் தொழிலதிபர் கெல்முட் கொஸ்ரோல் என்பவருக்கு வடித்துக் குடுத்த சிலை பற்றி சற்று விரிவாக சொல்லவேண்டும். ஒன்றரை மீட்டர் உயரத்தில் 58 வருட வாகன மின்சார உதிரிப்பாகங்களின் மறுமலர்ச்சியை வெளிப்படுத்தியிருந்தது அந்தச் சிலை. மேலும் தொழிற்சாலையில் பணிபுரியும் பெண் தொழிலாளர்களின் பலத்தைக் காட்டுவதற்காக, பல பெண்களிலான ஒரு தொழிலாளியின் சிற்பம் அது. அதில் காணும் 'ஆண்டவனுக்கு நன்றி. உலக யுத்தம் முடிவுக்கு வந்தது' என்ற வாசகங்கள். கலையைப் பற்றி எந்தவித பிரக்ஞையும் கொண்டிராத, வாகனங் களின் மின்சார உதிரிப் பாகங்கள் உற்பத்தி செய்வதையே கனவாகக் கொண்டிருந்த அந்தத் தொழிலதிபரை வியக்க வைத்தது. இன்றுவரை அந்தத் தொழிற்சாலையின் வரவேற்பறையில் வீற்றிருக்கும் சிலை, என்னையும் வியக்க வைக்கின்றது.

இவர் அமைப்புகள், சங்கங்களுக்காக பல இலச்சினைகள் வடிவமைத்துக் கொடுத்தி ருக்கின்றார். மெல்பேர்ணில் இயங்கும் வானமுதம் ரேடியோ, அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் (ATLAS) என்பவற்றிற்கான இலச்சினைகளை நான் தினந்தோறும் பார்த்து இரசிக்கின்றேன். அதில் 'அற்லஸ்' சங்கத்திற்கான இலச்சினை என் கண் முன்னே ஓரிரு மணி நேரத்தினுள் வரைந்ததாகும்.

அடுத்தவரின் படைப்புகளை வெற்றி மணியில் தவழவிடும் இவர், அவர்களின் படைப்புகளையும் நூல் உருவாக்கம் செய் கின்றார். தன்னுடைய ஓவியங்கள் சிற்பங்கள் சார்ந்த படைப்புகளை எப்போது ஆவண மாக்கப் போகின்றார் என்று நான் மனதில் நினைப்பதுண்டு. அந்த எண்ணம் தற்காலத்தில் கைகூடி வருவது கண்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றேன்.

மரபுகளையும் புதுமைகளையும் புதிய தொழில்நுட்பங்களால் இணைக்கும் இவரின் ஓவியங்கள், சிற்பங்கள் பார்ப்ப வர்கள் கண்ணுக்கு பலவாறாகத் தெரியும். பரவசத்தை ஏற்படுத்தும். பார்ப்பவர் கண்ணுக்குத் தெரிவேன் என்றான் பாரினில்.... ஆம் இவருக்கு 'கண்ணன்' என்றும் ஒரு பெயருண்டு.

❍❍❍



வேலையில்லா திண்டாட்டத்தைக் குறிக்கும் ஓவியம்

பாதையின் இருமருங்கிலும் பார்வையை செலுத்தியபடி, மிதமான வேகத்தில் நடை பயின்றுகொண்டிருந்தான்.

பார்வை தீர்க்கமாயிருக்கவேண்டும். ஒரு சிறு பாட்டிலைத் தவறவிட்டாலும் தொழிலில் நஷ்டமாகிவிடும்.

தொழிலில் கண்ணாயிருந்தவன், இவனை உரசியமாதிரி வந்து காலூன்றி நின்ற ஸ்கூட்டர்க் காரனைக் கண்டுகொள்ளாமல் நடையை எட்டிப்போட்டான்.

“சார், சார், கொஞ்சம் நில்லுங்க” என்கிற குரலுக்கு, வேகந்தணிந்து, அக்கம்பக்கத்தில் நோட்டமிட்டவனை, மீண்டும் அந்தக் குரல் வழிமறித்தது.

“சார், ஒங்களத்தான். கொஞ்சம் பிரேக் போடுங்க.”

“என்னையா சாமி கூப்ட்டீங்க?”

“ஒங்களத்தான்.”

“சார்ன்னு கூப்ட்டீங்களே?”

“ஆம்பளையாயிருந்தா சார்ன்னு கூப்புடு வேன். பொம்பளைன்னா மேடம் போடுவேன். நீங்க ஆம்பளைதானே சார்?

அட, இந்த இஸ்க்கூட்டர்க்காரன் ஒரு டைப்பான ஆளாகவல்லவா இருக்கிறான் என்று, கண்களை அகலத்திறந்து நோக்கி யவன், இவனுடைய எண்ணத்தை அவனிடம் வெளிப்படுத்தியும்விட்டான்.

“சாமி, நீங்க அயகாப் பேசறீங்க சாமி. இன்னா மேட்டர் சொல்லுங்க. இன்னாத்துக்கு பிரேக் போடச் சொன்னீங்க? நமக்கு இது ஆபீஸ் டைம் சாமி.”

இவனுடைய ஆபீஸ் டைம் பகிடிக்கு அந்த இஸ்க்கூட்டர்க்காரன் சிரித்தான். ஹெல் மெட்டைக் கழற்றிவிட்டு, திரும்பவும் சிரித்தான்.

“நீங்கக்கூட அழகாத்தான் பேசறீங்க சார். ஒங்க ஆ·.பீஸ் டைம வேஸ்ட் பண்ண விரும்பல. ஒங்களோட உழைப்புக்கு சின்ன அன்பளிப்பு ஒண்ணு குடுக்கலாம்னுதான் நா செயினப் புடிச்சி இழுத்தேன். இந்தாங்க சார், இதப் புடிங்க.”

இவனுடைய கையைப் பிடித்து, உள்ளங் கையை விரித்து, அதிலொரு நூறு ரூபாய்த் தாளை வைத்து அவன் அழுத்தியதை உணர்ந்த போது. இவன் உருக்குலைந்து போனான்.

முழுசா நூறு ரூவாயா? இவன் ஒரு நாள் முயுக்க அலைந்து திரிந்து பாட்டில் பொறுக்கிக் கடையில் போட்டாலும் நூறு ரூவா தேறுவது கஷ்டம்! இவனுக்குக் கையும் ஓடலை, காலும் ஓடலை. அந்த ஆளுடைய காலைத் தொட்டுக் கும்பிடவேண்டும் என்று மட்டும் தோன்றியது.

“அல்லா, என்ன இது! காலத் தொட்டுக் கும்புடற வேலையயல்லாம் செய்யக்கூடாது சார். நா கௌம்பறேன் நீங்க ஒங்க ஆ·.பீஸ் வேலயப் பாருங்க.”

அடுத்த நாளும் கிட்டத்தட்ட அதே நேரத்தில், அதே ஏரியாவில், அதே ஸ்கூட்டர்க்காரன், இவனை சமீபித்துக் காலூன்றினான், இவன் தொழிலிலிருந்தபோது.



அடுத்த நாளும் இவனுக்கொரு நூறு ரூபாயைக் கையளித்தான்.

காலைத்தொட்டு வணங்கி நன்றியைத் தெரிவிப்பது தடை செய்யப்பட்டு விட்டதால், ஒரு ''ரொம்பட் டாங்ஸ் சாமி''யோடு நிறுத்திக் கொண்டான்.

மூன்றாவது நாளும் ஒரு நூறு கைமாறியது. அதன்பிறகு, தினந்தோறும் என்று இல்லா விட்டாலும் வாரத்தில் ரெண்டுநாள் இந்த அன்பளிப்பு வாடிக்கையாகிப்போனது.

''சாமி யார்ன்னே எனக்குத் தெரியாது, அப்பப்ப வந்து நூறு நூறாக் குடுத்துட்டுப் போறீங்க. நீங்க நல்லாயிருக்கணும் சாமி'' என்று இவன் நெகிழ்ந்து போனதற்கு, ''ஆண்டவன் எனக்குத் தர்றான், நா ஒங்களுக்குத் தர்றேன், அவ்வளவுதான் சார்'' என்று புன்னகைத்தான் அவன்.

''ஆனா, என்ன சாமி.. சாமின்னு கூப்புடறத நிப்பாட்டுங்க. எம்பேரச் சொல்லட்டுமா?''

''ஐயோ சாமி, ஒங்கள நா பேரச் சொல்லிக் கூப்புடவா! அது சாமி குத்தமாப் போயிரும் சாமி. வாயில, சாமின்னுதான் சட்டுன்னு வருது. அப்டியேக் கூப்புடறேன் சாமி.''

''சரி, ஒங்கப் பிரியம் சார்.''

''என்னப்போய் நீங்க சார், சார்ன்னு கூப் புடறீங்களே சாமி!''

''வாயில, சார்ன்னுதான் சட்டுன்னு வருது. அப்டியேக் கூப்புடறேன் சார்.''

''நீங்க படிச்சவங்க. ஒங்கக் கைல வாயக் குடுத்துட்டு ஜெயிக்க முடியுமா சாமி?''

''நீங்க ஸ்கூலுக்குப் போனீங்களா? எது வரக்யும் படிச்சீங்க சார்?''

''பிளாட்பாரத்ல குடியிருக்கிற அனாதப் பய, எங்கிட்டிருந்து இஸ்கூலுக்குப் போவான் சாமி? நம்ம பிஸினஸ்க்குப் படிப்பெல்லாம் தேவையேயில்ல சாமி.''

''எங்கிட்ட சொல்லாம்னா சொல்லுங்க, ப்ளாட்ஃபாம்ல, எந்த ஏரியால இருக்கீங்க? கூட யாராச்சும் இருக்காங்களா?''

''நூறடி ரோட்ல, மேம்பாலத்துக்குக் கீய, ரெண்டு மூணு பாவப்பட்ட குடும்பம் குடியிருக்கு சாமி. ஒண்டிக்கட்ட நானும் அங்கதான் ஒண்டிக் கிறது. நம்ம சொத்து, ஒரு மரப் பொட்டி. அந்தப் பொட்டிக்குள்ளதான் நம்ம உடுப்புக் கீது. பொட்டிக்குள்ள மூணு உண்டியல் வச் சிருக்கேன் சாமி.''

''மூணு உண்டியலா!''

''ஆமாஞ் சாமி. மூணு. பஸ்ட் உண்டியல் புல்லாக் கீது. ரெண்டாவது உண்டியல் கால் வாசி புல்லாயிருச்சி. மூணுவது உண்டியல இப்பத்தான் வாங்கினேன்.''

''ரெண்டாவது உண்டியல்ல முக்காவாசி காலியாயிருக்கும்போது, மூணாவது உண்டியல் எதுக்கு சார்?''

''சொன்னா, சிரிப்பீங்க சாமி.''

''சிரிக்க மாட்டேன். சொல்லுங்க.''

''பஸ்ட் ரெண்டு உண்டியலும் நா பாட்டில் பொறுக்கி சம்பாரிச்ச காசு. அது, சொந்தமா ஒரு வூடு கட்றதுக்கு.''

''வீடு கட்டவா! அப்டிப்போடு! அட்வான்ஸ் வாழ்த்துக்கள் சார்!''

''நன்றி சாமி. அந்த மூணாவது உண்டி யல்லதான் சாமி, நீங்க குடுத்த நூறு ரூவா நோட்டையயல்லாம் போட்டு வச்சிருக்கேன். அது இன்னாத்துக்குன்னு கேட்டாத்தான் நீங்க சிரிக்கப் போறீங்க.''

''அல்லா, நா சிரிக்கவே மாட்டேன்னு சொன்னேனே, சொல்லுங்க.''

''அது, வந்து, சாமி....''

''ம். சொல்லுங்க.''

''அது, நம்மக் கண்ணாலத்துக்கு!''

''ஆஹா! வெரிகுட்! திரும்பவும் வாழ்த் துக்கள் சார்!''

''ஒங்கக் கைல ஒரு சந்தேகம் கேக்கணும் சாமி. நாப்பத்தெட்டு வயசுல கண்ணாலம் கட்டிக்கிறது ஒண்ணும் தப்பில்லியே சாமி?''

''தப்பேயில்ல சார். நெல்சன் மண்டேலா எம்பது வயசுல கல்ணாலங் கட்டிக்கிட்டார்.''

''அது யார் சாமி நெல்சன் மண்டேலா?''

''மஹாத்மா காந்தியத் தெரியுமா ஒங்க ளுக்கு?''

''மஹாத்மா காந்தியத் தெரியாத சோமா றியா சாமி நா? மஹாத்மா காந்தியயும் தெரி யும், கோட்சேன்னு ஒரு பேமானி அந்த மஹாத்மாவ சுட்டுக் கொன்னதும் தெரியும்.''

''நெல்சன் மண்டேலாங்கறவரு ஆப்பிரிக்கா நாட்டு மஹாத்மா. அவரோட நாட்டு மக்களோட விடுதலைக்காக இருவத்தேழு வரும் ஜெயில்ல இருந்த தியாகி.''

''அவரையும் போட்டுத் தள்ளியிருப் பானுங்களே சாமி?''

''இல்ல. அவர் இயற்கையாத்தான் கால மானார். ஆப்பிரிக்காலயயல்லாம் கோட்



சேக்கள் கெடையாது. நல்லவங்களப் போட்டுத் தள்றதெல்லாம் நம்ம பாரத்லதான். சரி, நீங்க ஒங்க வேலையப் பாருங்க. நா கெளம்பறேன். இந்தாங்க, இந்த நூறையும் ஒங்கக் கல்யாண உண்டியல்ல போடுங்க.”

“சாமி, சாமி, ஒங்கத் தலைமையிலதான் நம்மக் கண்ணாலம் சாமி!“

இஸ்கூட்டர் சாமி, ரெண்டு வாரமாய்க் கண்ணில் படவில்லை.

சரி, இவனுக்கு ஒரு தொயில் இருக்கிறமாதிரி அந்த ஆளுக்கும் ஒரு தொயில் இருக்காதா? வேலையாய்ப் போயிருக்கக்கூடும்.

கோணியைத் தோளில் சுமந்தபடி இவன் விறுவிறுவென்று நடந்துகொண்டிருந்தபோது, இருந்திருந்தாற்போல கிறுகிறுப்பாயிருந்தது. மேற்கொண்டு நடக்கமுடியாமல் ஒரு மயக்க நிலை. கோணியைக் கீழே கிடத்திவிட்டு, ஒரு மின் கம்பத்தில் சாய்ந்து, பாதையோரமாய் உட்கார்ந்தான். கண்களை மூடிக்கொண்டிருந்தவன், “சார், என்னாச்சி?“ என்கிற, அக்கறையான குரலுக்குக் கண்களைத் திறந்தால், எதிரே, இவனுடைய “சாமி“.

“தெரியல சாமி, இருந்தாப்பல கிறுகிறுன்னு வந்திருச்சி. அதான் ஒக்காந்துட்டேன். இதுக்கு முந்தி இப்டி வந்ததில்ல.”

“ஒண்ணுமில்ல. சரியாப் போயிரும். இந்தாங்க, தண்ணி குடிங்க.”

“தண்ணி குடிங்கன்னு சொன்னீங்க சாமி, தண்ணி அடிச்சிருக்கியாடான்னு கேக்கல.”

“அல்லா, ஒங்களப் பாத்து அப்டிக் கேப்பேனா சார்? ஒங்கள எனக்குத் தெரியாதா?”

“பாட்டில் பொறுக்கற பயதான், ஆனா, பாட்டில் பொறுக்கக்கூட சாராயக் கடப் பக்கம் போனது கெடையாது. என்னப்பத்தி நல்லாப் புரிஞ்சி வச்சிருக்கீங்க சாமி, எனக்கு ரொம்ப சந்தோசமாக் கீது.”

“மயக்கம் தெளிஞ்சிருச்சா? எந்திரிக்க முடியுமா?”

“சாமியப் பாத்தவொடன மயக்கமெல்லாம் பறந்து பூடுச்சி சாமி, இதோ எந்திர்ச்சிட்டேன்.”

“ஒங்களுக்கு சுகர் இருக்குன்னு நெனக்கிறேன் சார், அதான் இந்த திடீர் மயக்கம்.”

“சுகரா? சக்கரையா? நீங்க ஒண்ணு சாமி! அது பணக்கார வியாதி, பரதேசிக்கி ஏன் சாமி வருது!”

“அப்டிச் சொல்ல முடியாது சார், ஸ்ட்ரெய்ன் இருந்தா வரும். மனவுளைச்சல், கவலை இருந்தா, வரும்.”

“நமக்கு இன்னா சாமி மனவொளச்சல்! வூடு இன்னும் கட்டலியே, கண்ணாலம் கட்டிக்கலியேன்னுதான் கவல, கொஞ்சம் கீது. அப்புட்டுத்தான் சாமி.”

“நீங்க வூடும் கட்டுவீங்க, கண்ணாலமும் கட்டுவீங்க. அதுக்கு, நீங்க ஆரோக்கியமா இருக்கணும். ஒங்க மயக்கத்த அலட்சியமா விட்டுரக் கூடாது. ஒடனே நீங்க பிளட் டெஸ்ட் எடுக்கணும்.”

“என்னமோ இங்கிலீஸ்ல சொல்றீங்க, புரியல சாமி.”

“ரத்தப் பரிசோதனை. லேட் பண்ணாம, நாளக்கிக் காலைலயே ஆஸ்பத்திரிக்கிப் போங்க. சென்ட்ரல் ஸ்டேனுக்கு எதிர்க்க இருக்கே அரசாங்க ஆஸ்பத்திரி, அங்க போங்க.”

“சரி, சாமி, போறேன். சாமி சொல்றதுனால போறேன்.”

சொன்னமாதிரியே, அடுத்தநாள் காலையில் ஆஸ்பத்திரிக்குக் கிளம்பினான். இவன் ஒண்டிக்குடித்தனமிருக்கிற மேம்பால அடிவாரத்திலிருந்து கிட்டத்தட்ட எட்டு கிலோ மீட்டர். பஸ்ஸில்தான் போகவேண்டும்.

பஸ்ஸிலா? எதுக்கு அந்த ஆடம்பரச் செலவு அநாவசியமாய்? எதுக்கும் இருக்கட்டும் என்று ஓர் அஞ்சு ரூபாய் நாணயத்தையயடுத்து சட்டைப் பையில் போட்டுக்கொண்டு நடக்க ஆரம்பித்தான். இவன் நடக்காத நடையா!

இவனுடைய நூறடிச் சாலையில் தெற்கு நோக்கி நடந்து, அண்ணா நகர் மேற்கு பஸ் நிலையம், திருமங்கலம் ஸிக்னல் வழியாய் எட்டிநடை போட்டுப் பூந்தமல்லி நெடுஞ்சாலையைப் பிடித்து, நேரே, நேரே, நேரே நடந்தால் சென்ட்ரல் டேசன்.

பிடித்தான், நடந்தான்.

அண்ணா ஆர்ச், அமிஞ்சிக்கரைப் பள்ளி வாசல், பச்சையப்பன் கல்லூரி, பழைய தாசப்பிரகர் ஓட்டல், கீய்ப்பாக்கம் ஆஸ்பத்திரி, புராதன சங்கம் டாக்கீஸ், எல்லாவற்றையும் கடந்து வீறுநடை போட்டவனுக்கு, எழும்பூர் டேசனின் புறவாசலைக் கடக்கிறபோது என்னமோ செய்தது. சமாளித்துக்கொண்டு நடந்தான். கவின்கலைக் கல்லூரியை சமீபிக்கிறபோது, மயக்கம் கூடிப்போய், சமாளிக்க முடியாமற்போனது. நடைபாதையில் உட்கார்த்தால், உட்காரவும் முடியாமல், கண் களை மூடிப் படுத்துவிட்டான்.

முகத்தில் யாரோ தண்ணீர் தெளித்தபோது கண்விழித்துப் பார்த்தால், எதிரே, இவனுடைய “சாமி”.

“சார், என்னாச்சி, என்ன இப்டிப் படுத் திருக்கீங்க? மயக்கமா?” என்று அவன் விசாரித்தது சன்னமாய் இவனுடைய காதில் விழுந்தது.

“ஆஸ்பத்திரிக்கி ஒங்களப் பிக்அப் பண் ணிக்கிட்டுப் போகலாம்னு ஒங்க இருப்பிடத்தக் கண்டுபுடிச்சிப் போனேன். காலைலயே கௌம்பி நீங்க ஆஸ்பத்திரிக்கிப் போய்ட்டதா சொன்னாங்க. நீங்க போய்ச் சேந்திருப்பீங்கன்னு நெனச்சேன். நீங்க இங்க படுத்திருக்கீங்க. இப்ப எப்டியிருக்கு, எந்திரிக்க முடியுமா?”

“முடியல சாமி. அசையவே முடியல.”

இவன் அசையலே முடியாமல் கிடந்தபோது, ஆட்டோ ஒன்று இவர்களை சமீபித்து, நின்றது.

“என்னங்க ஐயா பிரச்சன?” என்கிற, பரிவான கேள்வியோடு, இறங்கி வந்தார் ஆட்டோ ஓட்டுநர்.

பிரசவத்துக்கு இலவசம் என்று பின்புறம் பிரகடனப்படுத்தியிருந்த, மனிதாபிமான வாகனம்.

“ஐயா, ஆஸ்பத்திரிக்கித் தூக்கிட்டுப் போவோமா? ஒரு கை குடுங்க சார், ஆட்டோல ஏத்துவோம்.”

ஆட்டோவில் ஏற்றப்பட்டு, பின் ஸீட்டில் படுக்க வைக்கப்பட்டான்.

“டிரைவர் சார், நீங்க கௌம்புங்க, நா பின்னாலயே ஸ்கூட்டர்ல வர்றேன். நல்ல சமயத்ல வந்தீங்க. ஜி ஹச்சுக்குப் போக எவ்ளவு ஆகும் சார்?”

“எதுவுமே ஆவாதுங்க ஐயா. பிரசவத்துக்கு மட்டும் இலவசம் இல்ல சார், அவசரத்துக்கும் இலவசம்தான்.”

ஆஸ்பத்திரியை நோக்கி ஆட்டோ விரைந்து கொண்டிருந்தபோது, லேசாய் சுய உணர்வு பெற்ற இவன், “டைவர்சாமி, கொஞ்சம் மொள்ள மாப் போங்க, நம்ம சாமி கைல ஒரு மேட்டர் சொல்லணும்” என்று வேண்டுகோள் ஒன்றை வைக்க, வேகந்தணிந்த ஆட்டோவை, ஒரு கேள்விக்குறியோடு நெருங்கிய இஸ்கூட்டரை நோக்கிப் புன்னகைக்க முயன்றான் இவன்.

“சாமி, ஒங்களாண்ட ஒரு மேட்டர் சொல்லணும் சாமி.”

“நீங்க ஒண்ணும் பேசாதீங்க, வீக் ஆயிரு வீங்க. பேசாமப் படுங்க.”

“அர்ஜன்ட் மேட்டர், சாமி.”

“சரி, சொல்லுங்க.”

“சாமி, சாமி, ஒங்கத் தலைமையிலதான் நம்மக் கண்ணாலம் சாமீ!”

○○○





இராமாயணச் சிந்தனைகள் 8

# வானரரா அல்லது வால் நரரா?



தமிழ்மணி அகளங்கன்

## குரங்கினத்தில் மாணவப் பருவம் உண்டா ?

சீதையைப் பிரிந்தபின் இராம இலக்குவர் கிஸ்கிந்தைக்குச் செல்கின்றனர். வாலிக்குப் பயந்து வாலி வரமுடியாத சாபத் தலமான இரலையங் குன்றில் சுக்கிரீவன் அனுமான் முதலியோர் ஒளித்திருந்த காலம் அது. இராம இலக்குவரை வாலியின் ஒற்றர்களாக இருப்பார்களோ என்று சந்தேகித்துப் பயந்த சுக்கிரீவனுக்காக அதன் உண்மையை அறிந்து கொள்ள அனுமான் மாணவ உருவத்தில் இராம இலக்குவரிடம் வருகிறான் என்கிறான் கம்பன்.

இதனைப் பிரம்மச்சாரி வடிவம் என்று வான்மீகி சொல்கிறார். **மாணவன்** என்றும் ***மாணி*** என்றும் கம்பன் சொல்கிறான். பிரம்மச்சாரி என்பது வடமொழியில் பிராமண ஆண்களுக்காகச் சொல்லப்படுகின்ற நான்குவகை நிலைகளில் முதலாவது நிலை. பிராமண ஆண்கள் திருமணத்திற்கு முன் வேதங்களை ஓதுகின்ற பருவமே பிரம்மச்சாரியப் பருவம். இப்பருவம் முடிந்ததும் வருவது கிருகஸ்தநிலை. கிருகஸ்தம் என்பது திருமணம் செய்து வீட்டில் இருந்து மனைவி மக்களோடு இல்லற தருமங்களைக் கடைப்பிடித்து வாழும் நிலை. அடுத்தநிலை வானப்பிரஸ்தம். இது இல்லறக் கடமைகளை முடித்துவிட்டு கணவனும் மனைவியும் காட்டுக்குச் சென்று தங்கியிருக்கின்றநிலை. வனம் என்றால் காடு. வனப்பிரஸ்தம் என்பது வானப்பிரஸ்தமாகிவிட்டது. காட்டில் கணவனும் மனைவியும் தங்கியிருந்து உலக போகங்களை முற்றாகத் துறந்து பக்குவமடைந்தபின் தனித்தனியாகப் பிரிந்து முத்தியை அடைய முயலுகின்ற நிலையை சந்நியாசம் என்பர்.

அனுமான் மனிதத் தோற்றத்தில் மாணவனாக வந்தானா? அல்லது வானரத் தோற்றத்தில் மாணவனாக வந்தானா? இராமனுக்குத் தன்னை அறிமுகப்படுத்தும்போது "யான் காற்றின் வேந்தர்க்கு அஞ்சனை வயிற்றில் வந்தேன். நாமமும் அனுமன்" என்று சொல்கிறான். அதாவது "நான் வாயுபகவானுக்கும் அஞ்சனா தேவிக்கும் பிறந்தவன். என் பெயர் அனுமன்" என்று சொல்கிறான். அத்தோடு சுக்கிரீவனுக்கு ஏவல் செய்பவன் என்றும் சொல்கிறான். "உங்களைக் கண்டு பயந்த சுக்கிரீவன் உங்களைப் பற்றி அறிந்துவரச் சொன்னதால் இங்கு வந்தேன்" என்று சொல்கிறான்.

அனுமானின் அறிவு ஆற்றலை வியந்த இராமன் இலக்குவனைப் பார்த்து இந்தச் "சொல்லின் செல்வன் யாராக இருக்கும்?" என்று ஆச்சரியப்பட்டதாகக் கம்பன் சொல்கிறான் "யார் கொல் இச் சொல்லின் செல்வன்" என்பது கம்பன் வாக்கு. அனுமானின் வடிவத்தையும் அறிவுத் திறத்தையும் உரையாடும் நுட்பத்தையும் பார்த்து இராமன் இலக்குவனிடம் சொல்லும் போது

**மாணியாம் படிவ மன்று மற்றிவன் வடிவம், மைந்த!**<br>
**ஆணியிவ் உலகுக் கெல்லாம் என்னலாம், ஆற்றற்கேற்ற**<br>
**சேணுயர் பெருமை தன்னைச் சிக்கறத் தெளிந்தேன், பின்னர்க்**<br>
**காணுதி மெய்ம்மை என்று தம்பிக்குக் கழறி------**

"இவனது வடிவம் சாதாரணமான பிரம்மச்சாரியின் வடிவம் அன்று. இந்த உலகுக்கு எல்லாம் ஓர் அச்சாணி என்று சொல்லகூடிய பராக்கிரமத்திற்கு தக்க மிகவும் அதிகமான மகிமையைக் கொண்டவன் இவன் என்பதை சந்தேகம் இல்லாமல் தெளிந்துகொண்டேன். அதன் உண்மையை பின்பு காண்பாய்." என்கிறான். இப்படி அடுத்த பாடலிலும் அனுமானை மாணி என்று இராமன் குறிப்பிடுகின்றான்.

“சுக்கிரீவனிடம் சென்று உங்களை யார் என்று சொல்வது” என்று அனுமான் கேட்க, இலக்குவன் தங்களைப்பற்றிய முழு விபரங்களையும் ஒளிவு மறைவின்றிச் சொல்கிறான். அவற்றைக் கேட்ட அனுமான் மகிழ்ந்து இராமனுடைய பாதங்களில் வீழ்ந்து வணங்குகின்றான். உடனே இராமன் அனுமானைத் தடுத்து ஒரு சத்திரியனின் காலில் அந்தணன் விழுந்து வணங்குதல் முறையாகாது என்று சொல்கிறான்.

**தாழ்தலும் தகாத செய்தது என்னை நீ.? தருமமன்றால்**
**கேள்விநூல் மறைவல்லாளா! என்றனன், என்னக் கேட்ட**
**பாழியந் தடந்தோள் வெற்றி மாருதி, பதுமச் செங்கண்**
**ஆழியாய் அடியேன் தானும் அரிக்குலத்து ஒருவன்**
**என்றான்.**

“அனுமான், இராமனின் காலில் விழுந்து வணங்கிய அளவில் இராமன் அவனை நோக்கி நூற் கேள்விகளையுடைய வேதங்களில் வல்ல பிராமணப் பிரம்மச்சாரியே! நீ என்னை வணங்குதலாகிய உனக்குத் தகுதியில்லாத காரியத்தைச் செய்தது என்ன காரணத்தால்? பிராமணன் சத்திரியனைப் பணிந்து வணங்குவது தருமம் அல்லவே! என்று சொல்ல, அதைக் கேட்ட வலிமையுள்ள அழகிய பெரிய தோள் வெற்றியையுடைய அனுமான், செந்தாமரை போலும் திருக்கண்களையும் ஆக்ஞா சக்கரத்தையுமுடையவனே! நான் உனது அடியவன். குரங்குகளில் ஒருவன்”. என்று கூறுவதாக இப் பாடலுக்கு வை.மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் உரை எழுதியுள்ளார்.

இதன்படி பார்க்கும்போது அனுமான் மனிதப் பிரம்மச்சாரி அதாவது மாணவ வடிவில், அந்தணர்களின் வேதங்கற்கும் பருவத்தவன் போன்ற வடிவத்தில்தான் வந்திருக்க வேண்டும். இதனையே மாணி என்ற சொல்லால் குறிப்பிடுகிறான் கம்பன்.

பிரம்மச்சாரியப் பருவம் பிராமணர்களுக்கு மட்டுமே உரியது. ஏனெனில் வேதங்களை வேறெவரும் கற்பதில்லை. இன்று திருமணமாகாத எல்லோரையும் பிரம்மச்சாரி என்றுதான் குறிப்பிடுகிறோம்.

குரங்கு வடிவத்தில் பிரமச்சாரியாக வந்திருந்தால் இராமன் சந்தேகப்பட்டிருப்பான். குரங்குகளுக்கு அத்தகைய மாணவப் பருவம் இருந்ததா? எல்லா வேதங்களையும் கற்றவனாக இவன் காணப்படுகிறானே இவன் பிரம்மதேவனா? அல்லது சிவபெருமானா? என்று இராமன் சந்தேகப்பட்டது ஒரு குரங்கைப் பார்த்தா? என்ற கேள்வி எழுகிறதல்லவா.



## மாற்று உருவம்

அரக்கர்கள்தான் மாற்றுருவம் எடுக்கும் வல்லமை பெற்றவர்கள் என்று கம்பன் பல இடங்களில் சொல்லியிருக்கிறான். சூர்ப்பனகை அழகிய காமவல்லியாக மாற்றுருவம் எடுத்தாள். மாரீசன் பொன் மானாக மாற்றுருவம் எடுத்தான். விபீடணன் வண்டாக மாற்றுருவம் எடுத்தான், இராவணன் சிவனடியாராகவும், ஜனக மகாராஜனாகவும் மாற்றுருவம் எடுத்தான் என்றும் கம்பன் சொல்லியிருக்கிறான். குரங்குகளை அப்படிச் சொல்லவில்லை.

இராமனைச் சந்தித்தபின்தான் அனுமானுக்கு பேராற்றல் கிடைத்தது. பிரமாண்டமான உருவம் கொள்ளவும் சிறிய உருவம் கொள்ளவும் முடிந்தது. ஆனால் அனுமான் ஒருபொழுதும் மாற்று உருவம் எடுக்கவில்லை. அந்தச் சக்தி இருந்திருந்தால் பறவை உருவம் எடுத்துப் பறந்து கடலைத் தாண்டி இலங்கைக்குச்

சென்றிருக்கலாமே. கடலைத் தாவிப்பாய்ந்து கடந்துதானே இலங்கைக்குச் சென்றான். அந்தச் செய்தியைச் சொல்லும் படலத்துக்கு ''கடல்தாவு படலம்'' என்றுதான் கம்பன் பெயர் வைத்திருக்கிறான்.

## வால் நரரா அல்லது வானரரா

உருத்திர அம்சமான அனுமான் குழந்தைப் பருவத்திலே இளஞ் சூரியனைக் கனிந்த பழம் என்று கருதிப் பிடிக்கப் பாய்ந்தெழுந்து மேலே சென்றபொழுது அதனைக் கண்டு கோபித்த இந்திரன் தனது வச்சிராயுதத்தால் அனுமானின் முகத்திலே அடித்தான்.

இந்திரனின் வச்சிராயுத அடிபட்ட கன்னமும் பூமியிலே விழுந்து மோதுப்பட்ட கன்னமுமாக இரண்டு கன்னங்களும் சிதைந்துபோய் முக அழகிழந்தவனாக அனுமான் மாறினான். அனுமான் என்பது ''கன்னம் சிதைந்து போனவன்'' என்ற பொருளைக் கொண்ட சொல்.

முகம் சிதைந்து போனதனாலேயே அழகிழந்து குரங்கின் முகத்தைப் போன்ற முகம் அனுமானுக்கு ஏற்பட்டது. அனுமான் இராமாயணத்தில் பெரும் புகழ் பெற்றதன் காரணமாகவும் அனுமான் வானரக் கூட்டத்தில் ஒருவன் என்பதனாலும் வானரங்களின் முகங்கள் எல்லாம் அனுமானின் முகத்தைப் போலவே இருக்கும் என்று கருதி வானரர்களைக் குரங்கு முகம் கொண்டவர்களாகக் கருதுகின்ற வழக்கம் ஏற்பட்டிருக்கலாம். இதனால் வானரர்கள் குரங்குகள் என்று அழைக்கப்பட்டிருக்கலாம். பிற்காலத்தில் குரங்குகளிற்கு வானரம் என்ற பெயர் ஏற்பட்டு இரண்டும் ஒன்றே என்ற எண்ணத்தை ஏற்படுத்தியிருக்கலாம்.

கம்பனின் இராமாயணத்தின்படி இவ் வானரக் கூட்டத்தார் குரங்குகளா? மனிதர்களா? வாலுள்ள நரர்களா? அதாவது வாலை மேலதிக உறுப்பாகக் கொண்ட மனிதர்களா? என்பதைத் திடமாகச் சொல்லமுடியாத சிக்கல் ஏற்பட்டிருக்கிறது. குழப்பம் ஏற்பட்டிருக்கிறது. இக்குழப்பம் கம்பனுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

தனது ஆன்ம ஈடேற்றத்துக்குரிய ஒரு குருவைக் காட்டும்படி அனுமான் தன் தந்தையிடம் கேட்டதாகவும் ''நீ யார் முன்னிலையிலே பக்திப் பரவசம் அடைகிறாயோ, அவரையே குருவாகக் கொள். அதன்பின் உனக்கு எல்லாம் கிட்டும்'' என்று அறிவுறுத்தியதாகவும், இராமனைக் கண்ட மாத்திரத்திலேயே அனுமானின் ஐம்புலன்களும் அடங்கி பக்திப் பரவச நிலை ஏற்பட்டதாகவும் அதன் பின்பே அனுமனுக்குச் சகல ஆற்றல்களும் வந்து சேர்ந்ததாகவும் இராமாயணத்தில் செய்தி உண்டு.

அப்படியிருக்க இராமனைச் சந்திக்கும் முன்பே அனுமானுக்கு பிராமண பிரம்மச்சாரிய மனித வடிவம் எடுக்க எப்படி முடிந்தது. அனுமான் தன்னைக் குரங்குகளில் ஒருவன் என்று இராமனிடம் கூறிவிட்டு தனது சொந்த உருவத்தை எடுத்துக் கொண்டான் என்கிறான் கம்பன். வான்மீகியும் இப்படியேதான் சொல்கிறார்.

அனுமான் இராமனைச் சந்திக்கும்போது வேற்று வடிவம் எடுக்கும் ஆற்றல் பெற்றவனாக இருந்திருக்கவில்லை, பின்பும் பெரிய வடிவம் எடுத்தான் என்று பல இடங்களில் கம்பன் சொல்லியிருந்தாலும் மாற்று வடிவெடுத்தான் என்று சொல்லவில்லை.

அதனால் மனித உருவில் அந்தணப் பிரம்மச்சாரியாக மாணவ வடிவம் பெற்றான் என்பது பொருந்தாது. அவன் தனது சொந்த உருவத்தில்தான் இராம இலக்குவரைச் சந்தித்திருக்கவேண்டும்.. மாணவனுக்குரிய பணிவோடு கைகட்டி வாய் பொத்தி கூனிக் குறுகி பக்திப் பரவச நிலையில் நின்றிருக்க வேண்டும் என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. மாணி என்பதற்கு ''பக்திப் பரவச நிலையிலுள்ளவன்'' என்றும் பொருள் கொள்ளலாம்.

இப்பொழுதும் இந்தச் சந்தர்ப்பத்தை படமாக வரைபவர்களும் காட்சியாகப் படம் பிடிப்பவர்களும் அனுமான் சொந்த உருவத்தில் இராம இலக்குவர் முன்னிலையில் கைகட்டி வாய்பொத்தி கூனிக்குறுகி நிற்பதாகத்தான் சித்திரிக்கிறார்கள். வான்மீகி, பிராமணப் பிரம்மச்சாரியாக மனித வடிவெடுத்துவந்தான் என்று சொல்லியிருந்தாலும் கம்பன் அதைப்பற்றி யோசிக்கால் ஏன் அப்படியே பொருந்தாததைச் சொன்னான்.?

❍❍❍







கலாநிதி
ஜெகநாதன் தற்பரன்
(L.L.M.)


# இருளில் இருந்து இருளுக்கு

**ச**சி தாயின் வயிற்றில் இருக்கும்போதே அவனுக்குத் தெரிந்திருந்தது. இந்த உலகம் அவனை வரவேற்பதற்காகக் காத்திருக்கவில்லை என்று. நிறை குறைதான் ஆனாலும் பிறந்தான். சசி ஆண் குழந்தை என்று சொன்னார்கள். வீட்டில் ஒருமுறை அனைவரும் அம்மாவுக்கு வாழ்த்துக் கூறிச் சிரித்தார்கள். அந்தச் சிரிப்பிலும் ஏதோ ஒரு கணக்கு இருந்தது. “இவன் வளர்ந்து பெண் பிள்ளைகளையும், அம்மாவையும் காக்கச் சம்பாதிப்பான்” என்ற நம்பிக்கையும், அன்பும் வந்தோரிடம் அதிகமாகவே இருந்தது. இருந்ததுவா - அல்லவே என்றோ இல்லை என்று சொல்லத் தந்தைக்கும் துணிவிருக்கவில்லை. பாதிப்புக்குள்ளானவர்களின் பட்டியலில் அவர்தானே முதலாவது. மூன்று வயதில் சசியைப் பள்ளியில் விட்டார்கள். தாயிடம் இருந்து பிரிந்த அந்த முதல் நாளில் அவன் அழுதான். ஆசிரியை சொன்னாள்: “ஆண்பிள்ளை அழக்கூடாது.” அன்றுமுதல் அவன் தன் மனதுக்கும், கண்களுக்கும் ஒரு பூட்டு போட்டான். அந்தப் பூட்டின் சாவி எங்கே விழுந்தது என்று அவனுக்கே தெரியாது. வீட்டில் மூன்று அக்காவுக்கும் சிறப்பு சாப்பாடு. தாய்க்குப் பட்டு ஆடை. அவனுக்கு? ”நீ ஆம்பளப்பயல், இரவிலும் கடைக்குப் போய் பண்டம் வாங்கிட்டு வரக் கூடியவன்.” இருட்டில் தனியாக நடந்தான். பயம் கேட்காது. ஆனால் அவனது ஆண்மை கேட்கும்.

பதினான்கு வயதில் சசியின் உடல் மாறியது. குரல் உடைந்தது. முகத்தில் ஏதோ முளைத்தது. யாரிடம் கேட்பது? யாரும் சொல்லவில்லை. யாரும் கொண்டாடவில்லை. அக்காவுக்கு பூப்படைந்த நாளில் வீடே திருவிழாவானது. சிறப்பு சமையல், உறவினர்கள், மஞ்சள், சந்தனம். அவன் அந்த வீட்டின் மூலையில் தன் மாற்றங்களை மறைத்தபடி நின்றான் இருட்டாக, தனியாக, வார்த்தையற்று. இளமையில் வெளியே போனால் சந்தேகம். ஒரு பெண்ணை நோக்கினால் குற்றவாளி. சிரித்தால் ஆபாசம். அவன் எப்போதும் தன்னைத் தனக்கே குற்றமற்றவன் என நிரூபிக்க வேண்டியிருந்தது. நான் நல்லவன் என்று சசி தன்னைத் தானே தேற்றிக் கொண்டான். ஆனாலும் சசி நல்லவன் என்று யாரும் சொல்லவில்லை. படிக்கச் சென்றான். சம்பாதிக்கச் சென்றான். திரும்பி வந்தான். “நீ ஆணாக இருக்கிறாய், நீ இதைத்தான் செய்யவேண்டும்”. அந்த இது மட்டுமே அவனுக்கான அடையாளம். சசிக்கும் திருமணமானது. தாய் அதிகாரத்தை மனைவியிடம் கையளித்தாள். மனைவியும் கையளித்தவற்றுக்கு அதிகமான தரம்மிக்கதானதொரு தாரமானாள். உள்ளகப் பொறிமுறை பொறுப்புடன் இருப்பதாகப் பேசிக்கொண்டனர். எவருக்கும் சிதம்பரம் மதுரையினால் புதைக்கப்பட்டிருப்பது தெரிந்திருக்கவில்லை. சசிக்கும் இதனால் கொஞ்சம் கௌரவம். ஆனாலும் வெளியுலகத்திற்குத் தெரியாமல், வார்த்தை இல்லாமல், வழி இல்லாமல், சடங்காக ஒரு சேவகன் போல் மாறினான். தன்னை மாற்றி அமைத்தான். வீட்டிற்கு வெளியே ஒரு முகம் வீட்டிற்கு உள்ளே மற்றொரு முகம். இரண்டுமே அவனுடையது இல்லை. நண்பர்கள் தொலைந்தார்கள். சமூகம் விலகியது. “குடும்பத்தை பார்”

என்று சொன்னார்கள். குடும்பம் அவனைப் பார்க்கவில்லை.

முதுமையில் பேரன் பேத்தி வந்தார்கள். "தாத்தா, பள்ளி கூட்டிட்டு பேர் காத்திருந்து திரும்பி கூட்டிட்டு வா." காவலாளி ஆனான். ஆனால், யாரும் அவனுக்கு காவல் இருக்க வில்லை. ஒரு நாள் வலியில் சொன்னான்: "என்னை யாரும் கேட்கவில்லை" எண்டு. மனைவி சிரித்தாள். மகன் திரும்பினான். மகள் "அப்பா இப்படித்தான்" என்று சொன்னாள். பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மட்டும் வெளியே கவனத்தில் கொள்வதாகவே உலகு கருதியது. நீதிமன்றம் சென்றால்கூட அவனை "இவர் இப்ப இப்படித்தான்" என்றுதான் முத்திரை குத்தும். அவன் கத்தியே இல்லாமல், வாயே திறக்காமல் குற்றவாளியானான். அங்கும் மனைவியும், மகளுமே நீதவான் களானார்கள். மகன்தான் வழக்கு கூப்பிடும் குமாஸ்தா என்பதில் உறுதியானான். சிறு வயதிலேயே பக்குவப்பட்டுக் கொண்டான் போலும். இறுதியில், சசி வெண்ணிற ஆடை அணிந்து படுக்கையில் கிடந்தான். யாரும் அழவில்லை. ஏனெனில் அவன் ஆண். ஆண் களுக்காக யாரும் அழுவதில்லை என்று கற்றுக் கொடுத்திருந்தார்கள். இருளில் பிறந்தான். இருளில் வாழ்ந்தான். இருளில் மடிந்தான். நீதிதேவி கண்ணை மூடியிருந்தாள். ஆனால், அவளது தராசு - எப்போது சரியாக நிற்கும்? அவளது தலை ஆண்கள் நோக்கியும் ஒருநாள் திரும்புமா? திரும்பும் என்று ஆண்கள் நம்புவதும் ஒரு வலியே. ஒவ்வொரு ஆண்களின் உள்ளத்திலும் (நீதி) தேவதைகளினால் கேட்கப்படாத கதை களும் உண்டு. சசி பல உள்ளங்களில் குடிகொண்டுள்ளான். எப்போதும் தேவதை களினால் வெளியே வருவிக்கப்படக் கூடும்.

○○○

# மௌனம் பேசும் மொழிகள்

மௌனம் என்றால் மற்றவர்க்கோ
அது வெறும் நிசப்தம்,
ஆனால் நமக்கோ சொல்லிவிட முடியாத
ஆயிரம் மொழிகள் அல்லவா!
உள்ளமதில் ஆயிரம் நினைவலைகள்
அந்த அலைகளின் பின்னோடும்
மனவலிகள்.
நம்மை காட்டுவது கண்ணாடி.
ஆனால் அது நம்மை நாமே
ஏமாற்றிக் கொள்ளும் மாயை அல்லவா...?
புறக்கணிக்கப்பட்ட அந்தத்
தனிமைத் தருணங்கள்.
விடாது நம்மை துரத்திய பசிப்பிணி....
சொல்லத் துடித்த வார்த்தைகளோ
இங்கு ஏராளம்,
சொன்னால் மட்டும் என்ன?
எல்லாம் சரியாகுமோ
என்கின்ற விரக்தி....
அன்னையின் துயர் துடைக்க வழி தேடி
அலைந்த நாட்கள்
அவை இன்றும்
அழியாத சுவடுகளாய் நெஞ்சில்...
நாம் செல்லும் பாதை சரியென்றே
தோன்றினாலும்,
மனதின் ஏக்கமோ இன்னும் தீரவில்லை....
மனக்குமுறல்கள் இன்னும் போகவில்லை.
இதுவோ யாருக்கும் புரிவதில்லை...
வெளிப்படுத்திவிட முடியாத
மொழிகள்தான்
மௌனம் பேசும் மொழிகள் அல்லவா...?



**சுமேகா முருகேசு**
(பேராதனைப் பல்கலைக்கழகம்
– இரண்டாம் வருடம்)




# என்றும் அன்புடன்



**எம்.ஸி.யே. பரீத்**
சாய்ந்தமருது

மட்டக்களப்பு நோக்கி செல்லும் பஸ்சை காத்துக்கொண்டு கல்முனை பஸ் தரிப்பிடத்தின் ஒரு ஓரமாக நின்றுகொண்டிருக்கின்றேன். மாலை நேரத்தில் அலுவலகம்விட்டு வந்தவர்களும் வேறுவேறு தேவைகளுக்காக வந்து ஊருக்கு போவதற்காக அவரவர் ஊருக்கான பஸ்ஸை எதிர்பார்த்துக்கொண்டு அங்கும் இங்குமாக நேரத்தை கடத்திக்கொண்டவர்களாக பிர யாணிகள் என்ற பட்டத்தை சுமந்துகொண்டு அந்த தரிப்பிடம் நிறைந்துகொண்டிருந்தது.

சற்று நேரத்தில் வந்து நின்ற பஸ்சுக்குள் ஜன்னல் ஓரமாக அமர்ந்து கொள்கிறேன். பக்கத்தில் எனது வயதை ஒத்த, அல்லது என்னை விட ஓரிரு வருடங்கள் மூத்தவராக இருக்கக் கூடும் ஏதோ சிந்தனையில் மூழ்கிக்கொண்டி ருந்தார். நான் அவரை நோக்கி புன்னகைத்துப் பார்த்தேன். அவர் பதில் தருவதாக இல்லை. தனது பார்வையை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார். இயற்கை காற்றில் என்விழிகள் மூடிக்கொள்கின்றது.

“ரயில்வே ஸ்டேஷனுக்கு போறவங்க இறங்கிக் கொள்ளுங்க” நடத்துனரின் அறி விப்பால் விழித்துக்கொள்கிறேன் பக்கதில் இருந்த பெரியவர் எப்போதோ இறங்கிவிட்டார் போலும்.

“வடை வடை இறால் வடை..” படிக்க வேண்டிய வயது, பாவம் தலையில் தண்ணீர் போத்தல்களுடன் இன்னும் ஏதேதோ.. சுமந்து கொண்டு யார் பெற்ற பிள்ளையோ இவனது உழைப்பை நம்பி எத்தனை வயிறுகள் காத்துக் கிடக்கின்றதோ.

ரயில் குறித்த நேரத்தை நெருங்கியதும் மெல்லமெல்ல நகரத் துவங்கியது. எனது நினைவு களும் பின்னோக்கி நகரத் துவங்கியது. சுமார் இருபத்தைந்து வருடங்களுக்கு முன்.. நான் ஒரு பயிற்றப்பட்ட கணித ஆசிரியன். அது ஒரு பின்தங்கிய மலையக கலவன் பாடசாலை. உயர்தர வகுப்பு இருந்தபோதும் சரியான முறையில் மாணவர்களுக்கு பயிற்றுவிக்கப் படுவதற்கான ஆசிரியர்கள் இல்லாத காரணத்தால், பல்கலைக்கழகம் போவதற்கான வாய்ப்புகள் நீண்டநாட்களாக ஒரு குறையாகவே இருந்து வந்தது. நான் இடமாற்றலாகி சென்ற புதிதில் சக ஆசிரியர்கள் என்னிடம் வினாவியது என்னவென்றால் “சார் எப்போது திரும்பப் போவீர்கள்”

“அப்படி யென்றால்..”

“அதுதான் சார் இங்கு வருகிறவர்கள் எல்லோரும் கொஞ்ச நாட்களுக்குத்தான் இருப் பார்கள். எப்படிசரி அரசியல்வாதிகளையாவது பிடித்து, ஊருக்கு போய்விடுவார்கள்”

நான் அவனல்ல என்று மனதிற்குள் நினைத் துக்கொண்டு ஒரு புன்னகையை மட்டும் அவர்களுக்கு ஒரு பதிலாக விட்டுவிடுகிறேன்.

காலங்கள் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தது. நான் உயர்தர மாணவர்களுக்கு பிரத்தியேக வகுப்புகளை இலவசமாக தினமும் நடாத்திக் கொண்டிருந்தேன். நான் சேர்ந்த அந்த வருடம் குறிபிட்டு சொல்லக்கூடிய மாணவர்கள் திருப்தி யான முறையில் சித்தியடைதிருந்தார்கள் ஆனால், பலக்லைக்கழகம் செல்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருந்தபோதும் எனது

முயற்சியை நான் கைவிடவில்லை. அடுத்தடுத்த வருடங்கள் எனது முயற்சிக்கு பலன் கிடைத்தது முதல்முறையாக மூன்று மாணவர்கள் பொறியியலாளர்களாகத் தெரிவானார்கள். அதில் இரண்டு பெண்கள், ஓர் ஆண். அந்த வருடம் ஊரே விழாக்கோலம் பூண்டது. அதேவேளை எல்லா மணவர்களும் சித்தியடைந்திருந்தார்கள் என்பதுதான் மறக்கமுடியாத விடயம்.

"உனெக்கென்ன பைத்தியமா இலவசமாக டியூஷன் நடத்துவதற்கு எங்கட வயிற்றில மண்போடுகிறாய் உடனே மாறிப்போயிடு இல்லாட்டி நடக்கிற விடயம் வேற"

டியூஷன் மாபியாக்களின் அச்சுறுத்தல்கள் எழுத்து வடிவிலும், செயல் வடிவிலும் என்னை பின்தொடர்ந்தன.

"மகன் அங்கு உனக்கு சரி வராது ஊரோடு வந்து சேரு"

"நான் என்ன செய்வது வாப்பா ஐந்து வருடங்கள் சென்றால்தானே இடமாற்றம் தருவார்கள். எனக்கு இந்த பிள்ளைகளை விட்டுப்போட்டு வருவதற்கு விருப்பமேயில்லை வாப்பா.. பாவம் அதுகள்"

எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. எனது கைபேசி அலறியது

"தம்பி நீங்க அடுத்தகிழம ஊருக்கு போக றெடியாகுங்க" அந்த ஊரின் அரசியல்வாதியின் குரல் அது.

அடுத்த நாள் இடைவேளை நேரம். அதிபர் என்னை அவசரமாக ஒபிசிக்கு வரும்படி அழைத்தார், என்னால் நம்பவே முடியவில்லை. அதிபரின் மேசையில்.. உடன் அமுலுக்கு வரும்வகையில் எனக்கான இடமாற்றக்கடிதம் எனக்காக காத்துக்கிடந்தது

"இந்த விடயத்தில் எது வந்தாலும் சரி விடுவதில்லை. உடனே இதை ரத்துசெய்ய வேண்டும். அது எப்படி வந்து மூன்று வருடங்கள் கூட ஆகவில்லை எப்படி சாத்தியப்படும்"

"அது நடக்காது நாங்கள் விடமாட்டோம்"

"உடனே பெற்றோர்களுக்கு அறிவிக்க வேண்டும். ஆர்ப்பாட்டம் செய்யவேண்டும். இந்த அநியாயத்தை சும்மா விடமுடியாது"

சக ஆசிரியர்கள் கொதித்தெழுந்தார்கள். நான் அமைதியாக இருந்துவிட்டு "இது நடக்கும் என்று எனக்கு எப்பவோ தெரியும் எனக்கு டியூஷன் மாபியாக்களின் அச்சுறுத்தல்கள் தொடர்ந்து எழுத்து வடிவிலும், சில



நேரங்களில் செயல் வடிவிலும் வந்தன. நான் யாரிடமும் சொல்லவில்லை. காரணம் இது எல்லாம் கடந்துபோகும் என்றுதான் நினைத்திருந்தேன் ஆனால், நேற்று வந்த போன்தான் இதற்கெல்லாம் காரணம். அது ஒரு அரசியல்வாதியிடம் இருந்து வந்தது. இதற்கு நான் முன்னால் நானோ நீங்களோ நடவடிக்கை எடுத்து எதுவும் நடக்கப்போவதில்லை. ஆனால், நான் எங்கு இருந்தாலும் பிள்ளைகளை கைவிடமாட்டேன். விடுமுறைகளில் வந்து கற்பிப்பேன். நான் இதை ஒரு சவாலாக எடுத்துக்கொள்கிறேன். யாரும் எதுவும் செய்ய வேண்டாம்"

"என்னதான் இருந்தாலும் தொடர்ந்து படிப்பிப்பது போன்று இருக்காதே" இது அடுத்த வருடம் ஓய்வுபெற இருக்கும் ஆசிரியரின் ஆதங்கம் "சார் அதப்பத்தி கவலைப்படத் தேவையில்லை. முயற்சி எடுப்போம்."

நேற்றுப்போல் இருக்கிறது இருபத்தைந்து வருடங்கள்..

ஒவ்வொரு வருடமும் அந்த பாடசாலையில் இருந்து மாணவர்களும் மாணவிகளுமாக பல்கலைகழகம் சென்றுகொண்டிருந்தார்கள். நான் இடமாற்றம்பெற்று ஊர் வந்தபோதும் என்னிடம் படித்து சிற்றியடைந்தவர்கள் என்னைப் போல் மற்ற மாணவர்களுக்கு இலவசமாக பாடம் எடுத்தார்கள். அதேபோல் அவர்களிடம் படித்தவர்கள் மற்றவர்களுக்குப் பாடம் எடுத்தார்கள். அது ஒரு சங்கிலி இணைப்பாக இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கிறது, என்றால் யார்தான் நம்புவார்கள். அதன் பிரதிபலிப்புதான் இன்று அகில இலங்கையிலும் மாவட்டத்திலும் முதலாம் இடமாக சிற்றியடைந்து அகில இலங்கைக்கும் ஒரு முன்மாதிரியாக அந்த பாடசாலை இடம் பிடித்துவிட்டது. அதிலும் விசேடம் என்ன

வென்றால் ஒரு வகுப்பில் தோற்றிய எல்லா மாணவர்களும் பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியிருக்கின்றார்கள்.

அந்த மாணவர்களை பாராட்டும் நிகழ்வுக்குத் தான், நான் கௌரவ அதிதியாக அழைக்கப்பட்டு ரயிலில் பயனித்துகொண்டிருக்கிறேன். இறுதியாக நான் அந்த பாடசாலையை விட்டு வெளியானபோது “சார் என்னால் இது மட்டும் தான் தரமுடியும்” என்று அன்று அழுதுவிட்டு சென்ற மாணவியை இன்றும் என்னால் மறக்க முடியவில்லை. “என்றும் அன்புடன்..” என்று ஒற்றை வரியை மட்டும் ஒரு காகிதத்தில் எழுதி தந்துவிட்டு சென்ற அந்த மாணவி இன்று பேரப்பிள்ளைகளுடன் இருக்கக்கூடும். ஆனால் அந்த வாசகம் அந்த நினைவுகள்.. இன்றும் என்னை விட்டு மறைந்ததாக இல்லை. அந்த ஊரின் நினைவுகள் வருபோதெல்லாம் அந்த மாணவியின் அந்த அழுகை வந்துபோகும்.

அன்று என்னோடு கடைமையாற்றிய ஆசிரியர்கள் ஓய்வு நிலையில் இருக்கலாம். சிலர் மறைந்தும் இருக்கக்கூடும். அதேபோல் என்னிடம் கற்ற மாணவ மாணவிகள் பொறியலாளராக, டாக்டர்களாக, கணக்காளர்களாக, ஏன் பெரும் பெரும் தனவந்தார்களாககூட இருக்கக் கூடும், ஆனால் அந்த அரசியல்வாதி சொந்த முகவரியும் இல்லாமல் ஓய்வூதியமும் இல்லாமல் இருப்பதாக கேள்வியுற்றபோது, கவலையாகத்தான் இருந்தது, அன்றைய எனது மாணவ மாணவிகள் இன்று விசேட அதிதிகளாக அழைக்கப்பட்டு அவர்களுக்காக முன்வரிசை ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. என்னைக் கண்டதும் அவர்களின் ஆசனங்களை விட்டு என்னை சூழ்ந்து கொண்டு புகைப்படம் எடுப்பதிலும் செல்பி எடுப்பதிலுமாக இருந்தார்கள். இன்னும் ஒருபடி மேலே போய் தங்களது மடிக்கணணிகளில்” ஏதாவது நினைவுக்கு எழுதுங்கள் சார்” என்று விடாப்பிடியாக நின்று கொண்டிருந்தார்கள். எல்லோரின் கணினியிலும் “அன்புடன்.. ” என்று எழுதி எனது ஒப்பத்தை இட்டேன். தனது பேரப்பிள்ளையுடன் வந்திருந்த.. என்னால் மறக்க முடியாத அந்த மாணவிக்கு மட்டும் “என்றும் அன்புடன்..” என்று எழுதி எனது ஒப்பத்தை இட்டு கொடுத்தேன். அதைப் பார்த்துவிட்டு சில நொடிகளில் தனது கைக்குட்டையால் கண்களை துடைத்துக்கொண்டாள்.

○○○

# காத்திருப்பின் கனதி

காத்திருப்பின் கனதியை விளக்கவியலாது...!!!
கருவில் உருவான உயிர்
கைகளில் தவழும் நாளை
எண்ணிக் கடக்கும் ஆவலுடனான
தாயின் காத்திருப்பு...
தன் சேய் விரும்பிய
விளையாட்டு பொம்மையைப்
பரிசளிக்கப் பல மாதங்களாகுமே
என்ற ஏக்கத்துடனான
கூலித்தொழிலாளியின் காத்திருப்பு...
வெற்றுத் தட்டை ஏந்தியபடி
என்றாவது நிறையும்
என்ற நம்பிக்கையுடனான
யாசகனின் காத்திருப்பு...
கடின உழைப்பால்
பல்கலை வரை முன்னேற்றிய
நடமாடும் தெய்வங்களை
மகிழ்விக்கும் கனவுகளுடனான
பட்டதாரியின் காத்திருப்பு...
காலம் கடந்தாலும்
மனம்விரும்பியவரைக்
கரம்பிடித்தலில்
தம் காதல் நிறைவேறும்
என்ற உறுதியுடனான
காதலர்களின் காத்திருப்பு...



இவ்வாறான
காத்திருப்பின் கனதியை,
விரும்பிய பதிவொன்றைக் காண
சில நிமிட
விளம்பரத் திணிப்பைக் கூட
ஸ்கிப் செய்து கடக்கும்,
இன்றைய அவசர தலைமுறைக்கு
என்றென்றும் விளக்கவியலாது..!!!



**சரண்யா புண்ணியராஜா**
தவசிகுளம், வவுனியா.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

## நீதியே நீ கேள்!

நமது நாடு படும் பாடு, அப்பப்பா சொல்லும் தரமன்று. உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் உயிரிழந்தோர், காயப்பட்டோர், அவர்களால் இன்றும் வேதனையில் வெம்பித்தவிக்கும் உற்றார் உறவினர்கள் ஒருபுறம். அவர்களைப் பற்றிக் கொஞ்சம்கூட அனுதாபம் இல்லாமல், அந்தத் தாக்குதலின் சூத்திரதாரிகளைப் பாது காப்பதற்காகப் பொய்யும், புளுகும், நடிப்பும் காட்டும் ராஜவம்சத்தின் கொத்தடிமைகள் இன்னொரு புறம். இந்தக் கொத்தடிமைகளுக்குக் கொஞ்சம் கூட மனச்சாட்சி என்பதே கிடையாது. மேடைமேடையாகக் கூட்டம் போட்டு, கொலை காரப் பாதகர்களைக் காப்பாற்றத் துடிக்கும் இவர்கள் என்ன மனுசப் பிறவிகளோ தெரிய வில்லை. மகாகவி பாரதியின் வார்த்தைகளில் கூறுவதாக இருந்தால், "வீரமிலா நாய்கள்." இந்தக் கேடுகெட்ட ஜன்மங்களுக்கும் ஆமாம் சாமி போட ஒரு கூட்டம் இருக்கிறது. ஆனாலும், பெரும்பாலான மக்கள் தெளிவாகத்தான் இருக் கிறார்கள்.

நீண்ட காலமாக ராஜவம்சத்தின் முன்னாள் நாட்டு முக்கியஸ்தர் ஒருவரின் அடிவருடியாக இருந்து, பாதகச் செயல்களைப் பக்குவமாகச் செய்துவந்த ஒருவர் தற்போது சட்டத்தின் பிடியில் வசமாகச் சிக்கியுள்ளார். தாம் முன்னர் செய்த அநியாயங்களுக்கு எல்லாம் தற்போது வட்டியும் முதலுமாக அனுபவித்துக் கொண்டிருக்கிறார். அதேவேளை, தமது எசமானனுக்கு எந்தவிதப் பிரச்சினையும் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதிலும் கவனமாக இருக்கிறார். அவரின் மனைவியோ, நாட்டின் முன்னாள் முக்கியஸ்தரின் அடிவருடிகள், கொத்தடிமைகளால் ஆட்டுவிக்கப்பட்டுக்கொ ண்டிருக்கிறார். "ஆட்டுவித்தால் ஆரொருவர் ஆடாதாரே கண்ணா!" என்னதான் பூசை வழிபாடுகளில் இந்த ஜன்மங்கள் கலந்து கொண்டாலும், இயற்கையின் தண்டனையை இவர்கள் அனுபவித்துத்தான் ஆகவேண்டும். நீதியே நீ கேள்!

## ஓர் இமயத்தின் மறைவு

தமிழ்த் திரைப்படத்துறையில் காலம் தோறும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தி வந்த இயக்குநர்களான ஸ்ரீதர், பாலச்சந்தர் ஆகியோரை அடுத்து, அதனை இன்னொரு பரிமா ணத்துக்கு இட்டுச்சென்றவர், இயக்குநர் இமயம் என்று பாராட்டப்படும் **பாரதிராஜா**. அவர் அண்மை யில் உலகை விட்டுப் பிரிந்தமை, ஒரு சோகச் செய்தி. சின்னச்சாமி என்ற இயற்பெயரைக் கொண்ட பாரதிராஜா, தமது ஏழு, எட்டு வயது களிலேயே பாடசாலைப் படிப்பின்போது நாடகம், இசை ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவராக விளங்கினார். அந்தச் சின்ன வயதிலேயே நடிப்பு, இயக்கம், இசை ஆகியவற்றுக்கான பரிசுகளைப் பெற்றுக்கொண்டார். பாடசாலைக் கல்விக்குப் பின், சுகாதாரப் பரிசோதகராகப் பணியாற்றினார். ஆனால், திரைப்பட ஆசை, அவரையும், இளையராஜா, கங்கை அமரன் ஆகியோரையும் சென்னைக்கு அழைத்துவந்தது. தமிழ்த் திரைப்படத்துறை அவர்களை அப்படி ஒன்றும் இலகுவில் வரவேற்கவில்லை. அக் காலத்தில் பிரபல்யமான புட்டண்ணா போன்ற இயக்குநர்களிடம் திரைப்படத்துறை தொடர்பாகப் போதிய அனுபவம் பெற்ற பின்னரே திரைப் படத்துறை அவரை உள்வாங்கியது.

அவரது இயக்கத்தில் வெளிவந்த 16 வயதினிலே (அப்படத்துக்கு முதலில் மயிலு என்றே பெயரிடப்பட்டிருந்தது. பின்னர் பெயர் மாற்றப்பட்டது.) தமிழ்த் திரைப்படத்துறையில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்தியது. பாரதி ராஜா, கமலஹாசன், ஸ்ரீதேவி, ரஜனிகாந்த் ஆகியோரை அப்படம் உச்ச ஏணியில் ஏற்றிவைத்தது. அதைத் தொடர்ந்து அலைகள் ஓய்வதில்லை, கிழக்கே போகும் ரயில், புதுமைப்பெண், கைதியின் டைரி, முதல் மரியாதை எனப் பல படங்களை இயக்கினார். சில படங்களில் அவரும் நடித்துள்ளார். பாரதிராஜா, தாம் அறிமுகப்படுத்திய நடிகை களுக்கு ரகர வரிசையிலேயே பெயர் வைப்பது வழக்கம். ரதி, ரஞ்சிதா, ராதா, ரேகா, ரேவதி

என அப்பெயர்கள் அமைந்துள்ளன. பல புதிய நடிகர்களையும் அவர் அறிமுகப்படுத்தியுள்ளார். அவரது கிழக்கே போகும் ரயிலுக்குப் பின், தமிழ்த் திரைப்படத்துறை கிராமங்களை நோக்கி நகரத் தொடங்கிவிட்டது. பாரதிராஜா சில தெலுங்கு, ஹிந்தித் திரைப்படங்களையும் இயக்கியுள்ளார் பாரதிராஜா பற்றி எழுதிமுடிக்கும் இவ்வேளையில் **பாக்யராஜின்** மறைவுச் செய்தி வந்துசேர்ந்தது.

## மாநாடும் மகிழத்தக்க நிகழ்வுகளும்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையின் பத்தாவது சர்வதேசத் தமிழியல் ஆய்வு மாநாடு அண்மையில் சிறப்பாக நடைபெற்றது. கலாநிதி எஸ். சுதர்சனின் வரவேற்புரையுடன் தொடங்கிய மாநாடு, தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தனின் தலைமையில் தொடர்ந்தது. மாநாட்டின் பிரதம விருந்தினராகப் பேராதனைப் பல்கலைக்கழகப் பிரதித் துணைவேந்தர் கலாநிதி ரஞ்சித் பல்லேகமவும், சிறப்பு விருந்தினர்களாகக் கலைப்பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏக்கநாயக்கவும், தமிழ்நாடு காந்தி கிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பா. ஆனந்தகுமாரும் கலந்து சிறப்பித்தனர். தமிழ் அடையாளத்தைக் காட்சிப் படுத்தல்: கலை – அரசியல் - மாற்றம் என்ற தலைப்பில் மாநாட்டின் ஆதார சுருதி உரையை யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை சார்ந்த பேராசிரியர் தா. சனாதனன் நிகழ்த்தினார்.

அமரர்களான பேராசிரியர்கள் சி. தில்லைநாதன், ஆ. சதாசிவம், க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம் ஆகியோரின் பெயர்களில் அமைந்த அரங்குகளுக்கு முறையே பேராசிரியர் எம்.ஏ. நு:்மான், துரை. மனோகரன், பா. ஆனந்தகுமார், கலாநிதி இரா. மகேஸ்வரன் ஆகியோர் தலைமை தாங்கினர். தமிழுக்கும், பிற துறைகளுக்கும் இடையிலான தொடர்புகளை இலங்கை, இந்திய ஆய்வாளர்கள் சிறப்பாக வெளிக்கொணர்ந்தனர். ஆய்வரங்குகளின் பின்னர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் நிறைவு விழா இடம்பெற்றது. நிறைவுப் பேருரையை பேராசிரியர் பா. ஆனந்தகுமார் நிகழ்த்தினார். இறுதியில், இந்தியாவில் இடம்பெற்ற பயிலரங்கில் பங்குபற்றிய தமிழ்த்துறை மாணவர்களுக்குப் பேராசிரியர்கள் பா. ஆனந்தகுமார், எம்.ஏ. நு:்மான், துரை. மனோகரன் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர். மாநாட்டு நிகழ்வுகளில் அழகாகத் தமிழ் வாழ்த்துப் பாடியவர்களும், தமிழிலும், ஆங்கிலத்திலும் சிறப்பாக அறிவிப்புகளைச் செய்தவர்களுமான தமிழ்த்துறை மாணவிகளும் நமது பாராட்டுக்கு உரியவர்கள். அடுத்த நாள் நிகழ்வுகள் பல்வேறு அரங்குகளில் இணைய வழியில் சிறந்த முறையில் இடம்பெற்றன.

## நல்ல ஒரு நடன அரங்கேற்றம்

கண்டியில் அண்மையில் நடைபெற்ற ஓர் அருமையான நடன அரங்கேற்றம் பற்றியும் குறிப்பிட்டே ஆகவேண்டும். நடன ஆசிரியை தனுஜா சுதர்சனின் மாணவிகளான தர்ஷிகா, நிவேதிதா, லிதுஷா ஆகியோரின் அற்புத நடன அரங்கேற்றம் அது. பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழக நடனத்துறைத் தலைவி கலாநிதி ஆனந்தஜோதி சண்முகநாதனும், சிறப்பு அதிதிகளாகப் பேராசிரியர் துரை. மனோகரனும், பேராசிரியர் லக்ஷ்மன் விஜெய வீராவும் கலந்துகொண்டனர். தனுஜா சுதர்சனின் சிறந்த நட்டுவாங்கம், பிரபல பாடகர் சுபாகரனின் இனிய குரல்வளம், பக்கவாத்தியக் கலைஞர்களான லோகேந்திரனின் மிருதங்கம், நிரோஜனின் வயலின், குகனேஸ்வரனின் புல்லாங்குழல், யாழ். பல்கலைக்கழக நடனத் துறை மாணவி சந்தியாவின் ஒப்பனை என அனைத்தும் சேர்ந்து, நடன அரங்கேற்ற நிகழ்வைக் களைகட்டச் செய்தன.

நிகழ்ச்சியில் இடம்பெற்ற புஷ்பாஞ்சலி, விநாயகர் ஸ்துதியுடன் இணைந்த அலாரிப்பு, அதன் பின்னர் இடம்பெற்ற ஜதீஸ்வரம், கோணேஸ்வர கௌத்துவம் ஆகியன தர்ஷிகா, நிவேதிதா, லிதுஷா ஆகியோரின் அபாரத் திறமையை வெளிப்படுத்தின. இடைவேளைக்குப் பின் மூவரின் அருமையான தனி நடனங்களும் இடம்பெற்றன. தர்ஷிகா பதம் ஆடியபோது, மிக அற்புதமாகத் தமது முழுத் திறமையையும் வெளிப்படுத்தினார். பார்ப்பதற்கு மிகவும் பரவசமாக இருந்தது. லிதுஷாவின் சிவகீர்த்தனம், அவரது நடன ஆற்றலைச் சிறப்பாக வெளிப்படுத்தியது. நிவேதிதா காவடிச் சிந்து நடனம் ஆடி, தமது ஆடல் திறமையைப் புலப்படுத்தினார். நடன அரங்கில் இறுதி நடனமாக அமையும் தில்லானா, இந்நடன அரங்கேற்றத்திலும் இம்மூவராலும் சிறப்பாக ஆடப்பட்டு, அனைவரையும் கவர்ந்து, உள்ளம் மகிழச் செய்தது.

❍❍❍




# கதைத்துணை



ந.பார்த்திபன்
வவுனியா

கிராமசேவகரிடம் நற்சான்றிதழ் பத்திரம் பெறக் கேட்டபோது "இப்ப காரியாலயத்தில் நான் நிற்கிறேன். வாங்க வந்து எடுத்துட்டுப் போங்க" என்று கூறியதால் குணரட்ணமும் ஜீ.எஸ். ஒப்பீஸுக்குப் போகிறார்.

ஜீ.எஸ்ஸிற்கு முன்னுள்ள கதிரைகளில் ஒன்றில் ஒரு வயோதிபப் பெண் இருப்பதால் குணரட்ணம் வெளியில் நிற்க "ஐயா" என்று ஜீ.எஸ். அழைக்க, அவரும் போய் நிற்கிறார்.

அந்த வயோதிப மாது "தம்பி நீங்க இதில இருங்கோ" என்று தன் பக்கத்தில் இருந்த கதிரையைக் காட்டுகிறார்.

"ஆச்சி வந்து கன நேரமாகுது. நான் உங்களுடைய "கரெக்ரரை" எழுதித் தாறன்" என்று ஜீ.எஸ். சொன்னபோது ஆச்சியும் சம்மதமெனத் தலையை ஆட்டுகிறார்.

"தம்பி எங்கை இருக்கிறீங்க" ஆச்சி கேட்க "அவர் உங்கடை ஒழுங்கைக்கு எதிர் ஒழுங்கை" என்று ஜீ.எஸ். சொல்ல, தனக்குத் தெரிந்த ஒரு சிலரை ஆச்சி கேட்க "ஓம் அவர்களைத் தெரியும்" எனக் குணரட்ணமும் கூறுகிறார்.

ஆச்சி "தம்பி எனக்குப் தொண்ணூற்றி மூண்டு வயசு" எனக் கூறுகிறார்.

குணரட்ணம் "சந்தோசமாய் இருக்குது. இப்பவும் உங்களுடைய தெளிவாக, உஷாராகக் கதைக்கிறியள்" என்று கூறுகிறார்.

ஜீ.எஸ் "ஆச்சிக்கு கதைத்துணை இல்லை. முன்பு கணேசதாசன் அதிபர் இருக்கேக் குள்ளை மாதாந்தம் ஒரு ஒன்றுகூடல் வைச்சு இந்தக் கிராமத்திலுள்ள முதியோரைக் கூப்பிட்டு கதைக்க விடுகிறவர். இப்ப அவரும் இல்லாத தால்..."

கணேசதாசன் அதிபர் காலமாகிவிட்டார். ஜீ.எஸ். பழைய நாட்களுக்குச் சென்றுவிட்டார்.

"ஏனம்மா நீங்க அதைச் செய்தாலென்ன?" குணரட்ணம் தன் ஆதங்கத்தையும் வெளிக் காட்டுகிறார்.

"செய்யத்தான் வேணும்" எனச் சொன்னபடி" ஆச்சி இப்ப வந்தது அது தொடர்பான ஒரு விசய மாகத்தான்" என்கிறார்.

குணரட்ணம் உற்சாகமாக கதையைக் கேட்கும் ஆவலுடன்...

ஆச்சி "என்ரை மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகள் ஒரு கண்டறியாத போனைக் காதுக்குள்ளை வைச்சுக்கொண்டு..." கோபத்தில் ஆச்சிக்கு வார்த்தைகள் தொடர்ந்து வரவில்லை.

ஜீ.எஸ் "இப்ப ஆச்சி வந்தது அதுக் குத்தான். தன்னுடைய வீட்டாக்களுக்கு ஒருக் கால் சொல்லுங்கோ என்று நிற்கிறார்."

தன்னுடைய ஆக்களுக்கு ஜீ.எஸ்.ஐக் கொண்டு புத்தி சொல்லும்படி கூற ஆச்சி வந்திருக்கிறார் என்பது குணரட்ணத்துக்கு ஏதோ செய்கிறது.

ஆச்சி கைத்தொலைபேசியில் மூழ்கிற, ரீ.வியில் ஆழ்ந்து போகிற, கதைப் புத்தகம் வாசிக்கிற... எல்லையைத் தாண்டிவிட்டார்.

ஆச்சி "மகள்களும் மகன்களும் மரு மக்களும் கூடத் தன்னோட கதைப்பதில்லை என்ற ஆதங்கத்தில் மகள்களைக் கூப்பிட்டு விசாரிக்கச் சொல்லியே ஜீ.எஸ்ஸிடம் வந்தி ருக்கிறார்.

ஜீ.எஸ்ஸிற்கு குணரட்ணம் அந்த நேரத்தில் நிற்பது பெரிய உதவியாக இருந்தது. அதனால்தான் அந்தப் பிரச்சினையை அவரி டமும் ஆச்சியின் சம்மதம் கேட்காமல் தெரிவித்தார்.

இதனை உணர்ந்த குணரட்ணம் "ஆச்சி, நீங்க தொண்ணூற்றி மூண்டு வருசங்கள் வாழ்ந்த ஒரு ஆரோக்கியமான ஆள். இதற்கே உங்களைக் கையெடுத்துக் கும்பிடலாம். இப்பவும் யாருடைய துணையுமில்லாமல் தனிய நடந்து



வந்து உங்களுடைய ஆதங்கத்தைத் தெரிவித்தது சந்தோசம். ஆனால் ஆச்சி உங்களுக்குத் தெரியாத தல்ல...” என்று சொல்லியபடி ஆச்சியைப் பார்க்கிறார்.

ஆச்சியும் சுவாரஸ்யமாக கதையைக் கேட்கிறார்.

ஜீ.எஸ் “உண்மையில் ஐயா, கதைத்துணை இல்லாத குறைதான் இன்று பெரிய பிரச்சினை” என்கிறார்.

“ஆச்சி உங்களுடைய காலமில்லை இந்தக் காலம். ஆளாளுக்கு ஓட்டம், அலுவல் கூடிப் போச்சு. ஒரு வேலை செய்து சமாளிக்க ஏலாது.”

“இது ஒரு வேலையுமில்லை. அவையளும் பென்சன்தான். ஆனா ஆளாளுக்கு போனை நீட்டிக் கொண்டு... அவையும் ஆளோடை ஆள் கதைக்கிறேல்லை.”

“அப்ப உங்களோடை கதைக்க அவைக்கு எங்கை நேரம் கிடைக்கப் போகுது.”

“ஐயா உண்மையில முதியோர் இல்லந்தான் இணைக்கும் சரியென்றால்” ஜீ.எஸ்.

ஆச்சி உடனே இடைமறித்துக் “அவைக்கு வெக்கமாம்” என்று ஒரு நக்கல் சிரிப்போடு கூறுகிறார்.

“அப்ப ஜீ.எஸ் நீங்க கூப்பிட்டுக் கதைக க்கத்தான் வேணும்” என்று சொல்லியபடி ஜீ.எஸ் நான் போயிட்டு வாறன், ஆச்சி நான் போயிட்டு வாறன்” என்று குணரட்ணம் வெளியேறுகிறார்.

அவர் தனக்குள் தன் மனைவி இல்லை என்றாலும் தான் போகவேண்டும் என நினைத்த முதியோர் இல்ல நினைப்போடு...

இப்பவும் தெளிவாக, உஷாராக “முதியோர் இல்லந்தான் இவர்களுக்கு சரி” என்றார் ஜீ.எஸ்.

○○○

# ஹைக்கூ கவிதைகள்

Dr. **ஜலீலா முஸம்மில்**
(ஏறாவூர், இலங்கை)

1 அஞ்சலியா, ஆராதனையா?
வேரின் அடியில்
உதிர்ந்த மலர்கள்

2 சுவாசிக்கக் காற்று
ஞாபகம் கொள்
மரங்களின் நன்கொடை

3 கூவி விற்கும் வியாபாரி
ஓய்வெடுக்கவில்லை
ஓவியத்திலும்

4 சாய்ந்த மரம்
பிடித்திருந்தது
ஆணிவேர்

5 என்ன காதலோ?
வலம் வருகின்றன
தீபத்தைச்சுற்றி பூச்சிகள்

6 வெறுமையான நாற்காலி
அமர்ந்திருக்கும்
நினைவு

7 உதிர்ந்த மலர்
தொலைதூரம் பயணிக்கும்
நறுமணம்

8 ஓவியப்பாடத்தில்
ஆசிரியை ஆனாள்
விதவைப்பெண்

9 இனிய போதையோ?
தள்ளாடி நடக்கும்
எறும்பிடம் சீனிக்கல்

சிறுகதை



# தீராக்காதல்




மகேந்திரன் கோவர்த்தனா BA
மகிழவட்டவான்
ஆயித்தியமலை




அன்று புதன்கிழமை, எனக்கு பல்கலைக் கழகத்தில் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருந்தது. படித்த பரப்பிலிருந்தே கேள்விகள் வந்திருந்த மையால் மனத்திருப்தியாக விடை எழுதி விட்டு பரீட்சை நிலையத்தை விட்டு வெளியே வந்தேன். மழை பெய்து விட்டிருந்தமையினால் காலநிலை மிகவும் அழகாக இருந்தது. உடலை சிலிர்க்க வைக்கும் மெல்லிய காற்று உரசிச்சென்றது. நானும் எனது தோழிகள் இருவருமாக சேர்ந்து நடந்த பரீட்சையைப் பற்றி கதைத்துக்கொண்டு நடந்தோம்.

வரும் வழியில் இருந்த ஒரு சிற்றுண்டிசாலைக்குச் சென்று உணவு வாங்கிக்கொண்டு வரும்போது வழியில் இருந்த ஒரு ஆலமரத்தின் கீழ் போடப்பட்டிருந்த கதிரைகளில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம். அந்த ஆலமரத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் அமர்ந்திருந்த எங்களது சீனியரை நாங்கள் கவனிக்கவில்லை. நாங்கள் எங்களது பாட்டுக்கு சிரிப்பதும் சத்தம் போடுவதுமாக இருந்தோம். சிறிது நேரத்தில் யாரோ தெரியாது, ஒரு பெடியன் பெரும்பாலும் அவனும் முதலாம் ஆண்டைச் சேர்ந்தவனாகத்தான் இருப்பான். ஓடிவந்து "உங்க மூன்று பேரையும் அந்த அண்ணா வரட்டாம்" என்று சொல்லிவிட்டு போனான். சற்று தலையை சாய்த்து மரத்திற்கு அப்பால் பார்த்தேன். அப்போதுதான் என் புத்திக்கு உறைத்தது. அடடா சீனியர் இருப்பதை கவனிக்காமல் பெரிய சத்தம் போட்டு சிரித்து வம்பை விலைக்கு வாங்கிவிட்டோமே என்று. என்ன செய்வது சீனியரிடம் அழைத்த காரணத்தை அறிய போகத்தான் வேண்டும். மூன்று பேரும் எழுந்து மெதுமெதுவாகச் சென்றோம். பயமும் பதட்டமும் ஒரு பக்கம் நடுக்கத்தை என்னுள் பிறப்பித்தது. அந்த குளிர்ந்த கால நிலையிலும் எனக்கு வியர்த்துக் கொட்டியது. ஆனால் நான் நினைத்தாற்போல் அந்த சீனியர் எங்களைக் கஷ்டப்படுத்தவில்லை. மூன்று பேரையும் பற்றி விசாரித்தார் அவர் முக கவசம் அணிந்திருந்ததால் அவரின் முகம் தெரியவில்லை. ஆனால் அவரின் கண்கள் மிகவும் அழகாய் இருந்தன. பதட்டத்தில்கூட நான் அவரின் கண்களை ரசிக்கத் தவறவில்லை என்றே கூறவேண்டும். இரு புருவங்களும் அவ்வளவு அழகு. அவர் கேட்கும் கேள்விகளுக்கு எல்லாம் பதில் சொல்லிவிட்டு வந்துவிட்டோம்.

அன்று இரவு சாப்பிடும்போது அதே கண்களின் நினைவுகள் வந்தது. என்னை அறியாமல் ஒரு புன்னகை இதழ்களில் ஒட்டிக்கொண்டது. ஏனோ தெரியவில்லை மீண்டும் அந்த கண்களை சந்திக்க மனம் ஆசை கொண்டது. நடப்பது நடக்கட்டும் என்று நினைத்துக் கொண்டு தூங்கச் சென்றுவிட்டேன்.

சில நாட்கள் கழித்து, எனக்கு பரீட்சை முடிந்ததும் நான் எனது வீட்டுக்கு சென்றுவிட்டேன். அடிக்கடி

அந்த கண்கள் நினைவுக்கு வரும். ஏனோ தெரியவில்லை இதுவரை காலமும் அப்படி ஒரு உணர்வு இருந்ததில்லை. சரியோ தவறோ தெரியாது. ஆனால், அந்த கண்கள் எனக்கு பிடித்திருந்தது என்பதில் மாற்றமில்லை. விடுமுறை முடிந்து பல்கலைக்கழகத்திற்கு திரும்பினேன்.

ஒருநாள் வகுப்பு முடிந்ததும் என் நண்பியுடன் மெதுவாக நடந்துவந்து கொண்டிருந்தேன். நூலகத்திற்குப் பக்கத்தில் இருந்த ஆலமர நிழலில் அந்த சீனியர் அமர்ந்திருப்பதைக் கண்டேன். என் நண்பியும் கண்டுவிட்டாள். "ஏய் அங்க பாருடி இது நம்மள கூப்பிட்டு கதைச்ச அந்த சீனியர் அண்ணாதானே. அவர் என்ன எப்ப பார்த்தாலும் முகக் கவசத்தோட தான் இருக்காரு. ஆனா வடிவான ஆளா தான் இருப்பாருபோல.. " என்று சொன்னாள். அவள் அப்படிச் சொன்னது எனக்குள் சிறு பொறாமையை கொண்டு வந்தது. "கொஞ்ச நேரம் சும்மா வாரியா அவரு வடிவா இருந்தா உனக்கென்னடி" என்று கூறிவிட்டேன். அவள் எதுவும் பேசவில்லை. விடுதிக்குச் செல்லும்வரை அவனது நினைவுதான். ஆனால் "அவருக்கு உன்னை நினைவு இருக்காது அப்படி இருந் திருந்தால் இன்றைக்கு கூப்பிட்டு கதைத்து இருப்பாரே. வீண் கற்பனை பண்ணாமல் உன் வேலையை பாரு" என என் மனம் கூறியது. அப்படியே அந்த நாளும் முடிந்துவிட்டது.

ஒருநாள் வெள்ளிக்கிழமை, நான் ஒரு அலுவலாக பல்கலைக்கழகத்தில் இருந்து புறப்பட்டு செங்கலடிக்குச் சென்று இருந்தேன். ஒரு புத்தகம் வாங்க வேண்டிய வேலை இருந்தது. ஆனால், அந்த புத்தகக் கடையில் நான் தேடிய புத்தகமில்லை. கவிஞர் கண்ண தாசனின் எழுத்துக்கள் எனக்கு பிடிக்கும் என்பதால் துன்பங்களிலிருந்து விடுதலை என்னும் புத்தகத்தை எடுத்துக்கொண்டு பணம் கொடுக்க வந்து நின்றேன். அன்று கடையில் கூட்டம் கொஞ்சம் அதிகம்தான். எல்லோரும் வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். என்முன் ஒருத்தர் நின்று கொண்டிருந்தார் ஆறடி உயரம் இருப்பாரு. அவரின் பின்னால் நின்று கொண்டிருந்தேன். என் முன்னால் நின்றவர் திடீரென்று திரும்பி பார்த்தார் நானும் பார்த்துவிட்டு குனிந்துவிட்டேன். அந்த கண்கள்.. ஆம், அதே கண்கள்தான் ஐயோ இது அந்த சீனியர்தான், என மனம் முடிவு கட்டிவிட்டது. அவர் முக கவசம் போடவில்லை. அந்த கண்கள் மட்டுமே எனக்கு தெரியும் அதனை வைத்துதான் முடிவெடுத்தேன். அது அவர்தான் என்று அதை உறுதிப்படுத்திக் கொள்ள என்னிடம் வழி இல்லை. ஆனால் என் மனம் என்னவோ என்னிடம் இல்லை என்பதே உண்மை.

எனக்கு முதல் அவர் பணத்தை செலுத்தி விட்டு வெளியேற நானும் அவசரமாகப் பணத்தைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தேன். முன்னால் ஒரு சிக்னல் இருந்தது. அதில் அவர் பாதையைக் கடக்க நின்று கொண்டிருந்தார். நானும் பாதையைக் கடக்க அவர் அருகில் போய் நின்றேன். "ஹலோ" என்று ஒரு சத்தம். உடனே நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சிறு புன்னகையுடன் அவரது கண்கள் என்னை பார்த்துக் கொண்டிருந்தன. "என்னை ஞாபகம் இருக்கிறதா.." எனக் கேட்டார். யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்டாயடா என நினைத்து சிரித்துக் கொண்டு "ஓம் இருக்கிறது" என பதில் சொன்னேன். இருவருமாக பாதையை கடந்து மறுபக்கம் சென்றோம்.

"நான் பஸ் ஏறும் இடத்திற்கு செல்கிறேன். நீங்க எங்க போறீங்க என்று கேட்டார்.." "நானும் அங்குதான்" என்று பதில் கூறினேன். இருவரும் பஸ் ஏறும் இடத்தில் காத்திருந்தோம். ஆனால், எதுவும் பேசிக் கொள்ளவில்லை. ஏதோ பதட்டம் என்னை தடுத்துக்கொண்டே இருந்தது. ஆனால், மனதில் ஏற்பட்ட சந்தோ சத்திற்கு அளவேயில்லை. பஸ் வந்ததும் ஏறிவிட்டோம். பஸ்க்குள் ஒரே நெரிசல் இடமே இல்லை. ஒரு கம்பியை சுற்றி பல கைகள் பற்றி கொண்டிருந்தன. அவர் என்னருகிலே ஏன் நின்று கொண்டிருந்தார். நான் ஒரு இருக்கையின் கம்பியைப் பிடித்து நின்று கொண்டிருந்தேன். ஒரு வழியாகப் பல்கலைக்கழகம் வந்துவிட்டது. இருவரும் இறங்கி நடக்க தொடங்கினோம். பேசுவதற்கு ஒரு தைரியம் வந்து பேசிவிட்டேன். நான் முதலில் கேட்டது அவர் பெயர்தான். அவரது பெயர் சரண் என பதில் கூறினார். சற்று தூரம் நடந்ததும் பிரிந்து வேறுவேறு வழியில் செல்ல வேண்டிய இடமும் வந்தது. சரி நான் போகிறேன் எனக்கூறி சில அடிகள் எடுத்து வைத்தபிறகு "மீனு.." என்று ஒரு குரல். உடனே திரும்பினேன்

அவர் தான் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டு நின்றிருந்தார். ஒன்றுமே புரியவில்லை மீனு என்பது எனது வீட்டுப் பெயர். அதை எப்படி இவர் அறிந்திருப்பார். இந்த சீனியருக்கு எப்படி தெரியும் என யோசித்துக் கொண்டே அருகில் சென்றேன்.

நான் எதுவும் பேசவில்லை. எனக்கு உன்னைப் பிடிக்கும் என்று ஒரு வார்த்தையில் என்னைச் சாய்த்துவிட்டார். என் தொலை பேசியை என் கையில் இருந்து பிடிங்கி அதில் அவரது தொலைபேசி இல்கத்தை பதிந்து கையில் தந்துவிட்டு போய்விட்டார். நான் முழுவதுமாக குழம்பிவிட்டேன். நான் பலமுறை சந்திக்கவில்லை, என்னுடன் அவர் ஒரு முறைதான் பேசி உள்ளார். பின்பு எப்படி எனது வீட்டுப் பெயர் தெரியும் என யோசித்துக் கொண்டது எனது மூளை. மனம் என்னவோ எல்லை தாண்டி சிறகடித்துப் பறக்கத் தொடங்கியது. அன்று பின்னேரம் நான் எனது தொலைபேசியில் இருந்து "உங்களுக்கு எப்படி எனது பெயர் தெரியும்.." என்று ஒரு குறுஞ்செய்தி அனுப்பினேன். அதற்கு அவர் "முதல் சந்திப்பிலேயே உன்னை எனக்கு பிடித்திருந்தது. உன்னுடன் இருந்த இரு பிள்ளைகளில் ஒருவரை மறுநாள் நான் நூலகத்திற்குச் சென்ற நேரத்தில் சந்திக்க நேர்ந்தது. அப்போது அவளிடம் உன் சார்ந்த விடயங்களைக் கேட்டு அறிந்தேன். ஆனால் அதை உன்னிடம் கூற வேண்டாம் என கூறி இருந்தேன்..." என்று கூறினார்.

எது என்னவோ நான் நானாக இல்லை என்பதே உண்மை. இப்படியாக நாட்கள் நகர்ந்தன. அவர் மீதான காதலும் அதிகரித்துச் சென்றது. எனக்கு அனைத்தும் அவரே என்ற எண்ணத்தை எனக்குள் விதைத்தார். சிறு பிள்ளை போல் பார்த்துக்கொண்டார். அவர் விரல் பற்றி நடக்கும் ஒவ்வொரு நொடியும் ஆனந்தமாய் உணர்ந்தேன். உயிருடன் உயிராய்க் கலந்தார். எனது முக்கியமான உயர்ந்த உறவு அவர்தான். இப்படியே ஈராண்டுகள் கடந்தன. அவரது படிப்பு முடிந்து வேலைக்காக காத்திருந்தார்.

ஒருநாள் மதியம் 2 மணி இருக்கும் நான் விடுதியில் இருந்தேன். எனக்கு சரணின் நண்பன் குகனின் இலக்கத்தில் இருந்து ஒரு அழைப்பு வந்தது. ஒரே வாகன சத்தம் கூடவே சனத்தின் சத்தமும் அதிகமாக இருந்தது. ஏதோ நடந்துவிட்டது என்று மனம் கிடந்து அடித்துக்கொண்டது. "ஹலோ விளங்குதா அண்ணா" என்று கேட்டுக் கொண்டே இருந்தேன். ஏனோ தெரியவில்லை காரணம் அறிய முதலே கண்கள் கலங்கத்தொடங்கின. அந்த அழைப்பை துண்டித்துவிட்டு அதே இலக்கத் திற்கு அழைத்தேன். ஆன்சர் பண்ணிவிட்டு அவன் என்னுடன் பேசவில்லை. "சரண்.. சரண்.. எழும்புடா என்று ஒப்பாரி வைத்துக் கத்தியது இன்னமும் என் காதுகளில் ஒலித்துக் கொண்டி ருக்கின்றது. "என் சரணுக்கு ஏதோ நடந்து விட்டது.. ஏதோ நடந்துவிட்டது..." என்று தொலைபேசியை எறிந்து அழுது விழுந்தேன். என் அறையில் இருந்த என் நண்பிகள் என்னை தாங்கிக் கொண்டார்கள். ஒன்றும் நடந்திருக்காது என்று கூறி ஷர்மி அதே இலக்கத்திற்கு மறுபடியும் அழைத்தாள்.

சரணும் அவரது நண்பனும் ஒரு வீதி விபத்தில் அகப்பட்டு அதில் சரணுக்குப் பலமாக அடிபட்டு மயக்கமடைந்ததாகவும், வைத்தியசாலைக்கு கொண்டு போகும்போது பாதியிலயே உயிரிழந்தாகவும் தெரியவந்தது.

ஏன்? எப்படி? எனக்கு மட்டுமே ஏன் இப்படி நடக்க வேண்டும்? என்று தலையில் அடித்துக் கொண்டு அழுது புரண்டேன். என் வாழ்வே சூனியமாகிவிட்டது. எல்லாமே முடிந்துவிட்டது. எனக்கு வாழவே பிடிக்கவில்லை. சரணின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டேன். அந்த இழப்பை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. மூன்று தடவைகள் தற்கொலை முயற்சியில் என்னை எனது நண்பர்களும், வீட்டார்களும் காப்பாற்றி விட்டார்கள். என்னைப் பெற்றவள் வயிற்றில் அடித்து கதறினாள் "எனக்காக உயிரோடு இருடி.." என்று. சரி என்று இருந்துவிட்டேன். படிப்பையும் முடித்தேன். வேலையும் கிடைத்தது. வாழ்வில் ஏற்பட்ட எந்த ஒரு மாற்றமும் என் மனதை மாற்றவில்லை. என் மனம் முழுவதும் அவன்தான்.. அவன் மட்டும்தான். எப்படித் தீரும் அவன் மீதும், அவன் கண்கள் மீதும் நான் கொண்ட காதல். அது என்றுமே தீராக் காதல்தான்......

# சுருக்க வரலாறு

முப்பது வருட போரின்போது
நாம் எல்லோரும்
திறந்த வெளியில்
நடந்து சென்றோம்
வொலன்ஸ்டைனின்
கூலிப்படையினர் எம்மை
கண்டுபிடித்து விடுவார்களோ
என்ற அச்சத்தில்

அந்த மாபெரும் மனித
தேடுதல் வேட்டையில்
நாங்கள் கண்டு பிடிக்கப்பட்டு
விடுவோமோ என்ற
அச்சத்தில் கூரை ஓடுகளுக்குள்
ஒளிந்து கொண்டோம்

இன்று நாங்கள் எங்கள்
அறைகளை மூடிவிட்டு
தாழ்வாரங்களில்
நடக்கின்றோம்
எங்களை எவரும்
தேடி வர மாட்டார்கள்
என்ற ஒரே ஒரு
அச்சம் தான் அது

**ஜர்ஸி ஜானேவிக்ஸ்**
போலந்தின் நவீன கவிஞர்,
ஆங்கில கவிதை மொழிபெயர்ப்பாளர்
– வொலன்ஸ்டைன் மத்திய ஐரோப்பாவின்
30 வருட கால யுத்தத்தின்போது
தலைமை தாங்கிய
செக்கோஸ்லாவக்கிய
தேசிய ராணுவ தளபதியாவார்.

சிங்கள மொழி மூலம்:
**பராக்கிரம கொடிதுவக்கு**

தமிழ் வடிவம்:
**கலாபூஷணம் மாவனல்லை எம்.எம்.மன்ஸூர்**

# புதிய அன்றில்

ஐயா, அன்புருவே!
உமது பிரிவின் கண்
காவியம் ஒன்று பாட
உள்ளம் துடிக்கிறது.
கண்ணீர் அஞ்சலியை
கவிதைப் பூவாகத் தூவுகிறேன்
அறிவே,
உங்களுடன் வாழ்ந்த
ஐம்பத்தைந்து வருட நல்லறத்தை
ஞான காவியமாக
நெஞ்சில் வரைந்துள்ளேன்.
எமது
இல்லற மாளிகையின்
ஒவ்வொரு சின்னத்தையும்
கல்வெட்டுகளாக்கிய
இதய நாயகனே,
எனது வாழ்வில்
வசந்த காலங்களை
அள்ளித்தந்த வள்ளல்
நீங்கள்தானே:
இல்லற வாழ்வுடன்
இலக்கியப் பயணத்திலும்
என்னையும் இணைத்த
எனதுயிர் ஏந்தலே:
நான் வயிற்றில் சுமந்தது
மூன்று பிள்ளைகளைத்தான்
நீங்களோ இருபத்தைந்து
புத்தகப் புதல்வர்களை
இதயத்தில் சுமந்தீர்கள்
முந்நூறு ஞானக்குழந்தைகளை
முழுமையாய் வளர்த்தீர்கள்
அன்றில் பறவையாக நானும்
உம்முடன்வர ஆசைதான்
நீங்கள் விட்டுச் சென்ற
பணிகளைத் தொடரும்
புதிய அன்றில் பறவையாக
வாழ்கிறேன்...
என
உங்கள் துணை துடிப்பது
என்மனக்கண்ணில் தெரிகிறது

**– தம்பிலுவில் ஜெகா**

**மாறுபாடில்லா உண்டி (எழுநா – 2025)**
**தியாகராஜா சுதர்மன்**




யாழ்ப்பாண சித்தமருத்துவ நூலான அமிர்தசாகரம் பதார்த்த சூடாமணி எனும் நூலினை ஆதாரமாகக் கொண்டு, யாழ்ப்பாணத்தில் பாரம்பரியமாக உணவுப் பயன்பாட்டில் இருந்த உணவுகளை, தானியங்கள், சிறுதானியங்கள், பருப்பு வகைகள், மரக்கறி வகைகள், அசைவ உணவுவகைகள், பால்சேர் உணவுகள், சுவையூட்டிகள், பழங்கள், பனைசார் உணவுகள் என வகைப்படுத்தி அவற்றின் சாதக - பாதகங்களை இந்நூலின் ஊடாக ஆசிரியர் தொகுத்துத் தந்துள்ளார். சித்தர்களால் கூறப்பட்ட உணவுப்பொருட்களின் பயன்பாடு, ஆரோக்கியத்தை நல்கும் என்பதை நூல் வலியுறுத்துகின்றது.

**சுவடுகள் – நாவல் (மறுபதிப்பு 2023)**
**எஸ். அகஸ்தியர்**

2026ஆம் ஆண்டு அகஸ்தியரின் நூற்றாண்டாக (1926-1995) அமைகின்றது. இந்நாவல் 1959ஆம் ஆண்டு எழுதப்பட்டது. ஐம்பது வருடகால (1909 - 1959) இலங்கையின் சரித்திர நிகவுகளை கொண்டு விவரண நாவலாக எழுதப்பட்டுள்ளது. ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பகாலத்தைப் பற்றிய ஓர் இலக்கியப்பதிவாகும். இந்நாவலில் வரும் பாத்திரங்கள், அவலங்கள், இராணுவ சுற்றிவளைப்புகள், முதலானவற்றை அகஸ்தியர் தமது அனுபவங்களில் கண்டு அவற்றை இலக்கியமாக்கியுள்ளார். ஈழத்து நவீன இலக்கியத்தின் ஆரம்பகால படைப்பொன்று மீண்டும் வெளிவருவது மகிழ்வுக்குரியது.







**வடக்குப் பிராந்தியக் காலநிலையியல் (எழுநா – 2025)**
**நாகமுத்து பிரதீபராஜா**
வடக்கு மாகாணத்தினுடைய காலநிலையியல் தொடர்பான பாரம்பரிய முறைகளிலான மற்றும் நவீன முறைகளிலான ஆய்வுகளின் முடிவுகளை உள்ளடக்கிய விஞ்ஞான ரீதியிலான நூலாக இந்நூல் அமைந்துள்ளது. மேலும் தமிழ் மொழியில் வடக்கு மாகாணத்தினுடைய காலநிலை பற்றிய விடயங்களைக் கூறும் முதலாவது நூலாக அமைவது கவனிக்கத்தக்கது. காலநிலை மாற்றம் தொடர்பான எதிர்கால நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும், அம்மாற்றங்களை எதிர்கொள்வதற்கும் இந்நூல் பயன்தரக்கூடியதாக உள்ளது.

# கிடைக்கப் பெற்றவை...

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/Magazine/38/2026

**வடக்கு – கிழக்குப் பிராந்திய அபிவிருத்தியும் உயிர்ப்பல்வகைமையும்**
**(எழுநா – 2025)**
**சி. ஜேம்சன் அரசகேசரி**




இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களில் காணப்படும் பல்லின உயிரினங்கள், தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் பற்றிய தகவல்களும் அவற்றின் பல்வகைமையும் இந்நூலில் நான்கு அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ளன. மேலும், பிரதேச அபிவிருத்தியில் அவற்றின் வகிபாகமும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இவ்வுயிரினங்கள் இன்று அழிந்துவரும் நிலைமைக்கு உள்ளாகியுள்ளன. அவற்றுக்கு எதிரான ஆபத்துகள், அவற்றை சாமாளிக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் நூலாசிரியர் கூறியுள்ளார். கவனிக்கப்பட வேண்டிய விடயப்பரப்பு. மகிழ்ச்சி.




**யாழ்ப்பாண குடாநாட்டின் நூலகப் பாரம்பரியம் (ஒரு வரலாற்றுத் தேடல்)**
**(எழுநா – 2025)**
**என். செல்வராஜா**

13ஆம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதி வரை (சரஸ்வதி மகாலயம் வரை) இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் நூலகங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை என்பதால், இப்பிரதேசங்களில் நூலகங்கள் இருக்கவில்லை எனக் கருதுவது பொருத்தமற்றது. நூலாசிரியர், ஒரு வரலாற்றுத் தேடலை மேற்கொண்டு, இலக்கிய ஆதாரங்களையும் இதுவரை மேற்கொண்ட தொல்பொருள் ஆய்வு முடிவுகளையும் துணைகொண்டு, இலங்கையின் தமிழ் நூலகங்கள்சார்ந்த வரலாறு ஒன்றினை கோடிட்டுக் காட்டியுள்ளார். ஆரோக்கியமான முயற்சி.




**பூப்பும் பறிப்பும்**
**(மறுபதிப்பு 2024)**
**நவஜோதி ஜோகரட்னம்**

இது ஆசிரியரின் முதலாவது சிறுகதைத் தொகுதியாகும். கடந்த இருபது வருடங்களில் எழுதிய கதைகளில் தெரிந்தெடுத்த 22ஐ உள்ளடக்கி இத்தொகுப்பு வெளிவந்துள்ளது. தேடலும், வாசிப்பும், சமூக உணர்வும், ஆதிக்கத்துக்கும் வன்முறைக்குமான எதிர்ப்புணர்வும் கதைகளில் பரந்துள்ளதைக் கண்டுகொள்ளலாம். ஒரு கவிஞையாக மேற்கிளம்பிய ஆசிரியரின் சிறுகதைகளிலும் அந்தக் கவிதைத் தன்மை விதந்து நிற்பதைக் காணமுடிகின்றது. இவற்றில் பல கதைகள் சிறுகதைப் போட்டிகளில் பரிசு பெற்ற கதைகள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கிடைக்கப் பெற்றவை...

ISSN 2478-0340
9 772478 034009
PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195